www.padippakam.com

புதிய பூமி

PUTHIYA POOMI

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

පුදිය පුමි

சுற்று 08 மார்ச்/ஏப்ரல் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 39

## வரவு செலவு

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த செலவு | - | 36400 | கோடி | ரூபா |
| பெறக் கூடியது | - | 24700 | கோடி | ரூபா |
| துண்டு விழுவது | - | 11700 | கோடி | ரூபா |
| பாதுகாப்புக்கு | - | 7500 | கோடி | ரூபா |

தேசிய பாதுகாப்பு வரி 7.5 ச.விதம்
பொருளாதார வீழ்ச்சி 4.5 ச. விதம்
அந்நியச் செலாவணி கையிருப்பு வீழ்ச்சி

**நாடு எங்கே செல்கிறது ?**

# பிரித்தானியத் தடைச் சட்டத்தால் படிப்பினை பெறுவது அவசியம் !

அண்மையில் பிரித்தானிய அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்னும் பெயரில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. அச் சட்டத்தின் கீழ் உலகம் தழுவிய இருபத்தியொரு போராட்ட இயக்கங்களை பயங்கரவாத அமைப்புகள் என முத்திரை குத்தி அவற்றை பிரித்தானியாவில் தடை செய்தும் உள்ளது. இதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியத்தின் இயல்பைத் தெரிந்து கொண்டவர்களுக்கு இது எவ்வகையிலும் ஆச்சரியமாகாது. ஆனால் அதன் மீது குருட்டு நம்பிக்கை கொண்டவர்களுக்கு மேற்படி சட்டமும் அதன் கீழ் புலிகள் மீதான தடையும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

தடைசெய்யப்பட்டுள்ள 21 அமைப்புகளில் புலிகள் இயக்கம் உட்பட அரைவாசிக்கு மேற்பட்டவை சுய நிர்ணய உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுத்து வருபவையாகும். அவற்றுள் காஷ்மீரிய, குர்திய, பலஸ்தீனிய, அல்ஜீரிய, துருக்கிய போராட்ட அமைப்புகள் குறிப்பிடத் தக்கவை.

மேற்படி தடையை பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் வாய்குளிர வரவேற்று வெற்றி கொண்டாடி நிற்கின்றன. அதே வேளை த்மிழர் தரப்பில் கவலையும் ஏமாற்றமும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக பிரித்தானிய விசுவாசிகளாக இருந்து வந்த தமிழர் பழமைவாத சக்திகளுக்கு விழுங்கவும் முடியாது கக்கவும் இயலாது இருப்பதைக் காண முடிகிறது.

பிரித்தானியாவின் தடையானது தமது சொந்த ஏகாதிபத்திய நலன் சார்ந்ததும் தனது விசுவாசம்மிக்க

**விடுதலைப் புலிகளும் தமிழர் அமைப்புகளும் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.**

கூட்டாளிகளான அடக்குமுறை அரசாங்கங்களின் விருப்பங்களை நிறைவேற்றும் தேவைகளைக் கொண்டதுமாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு இந்தியா தனது பிரதான பாத்திரத்தை வகித்துள்ளது. இவ் இரகசியத்தை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் பகிரங்கமாக எடுத்துக் கூறி உள்ளார். இதற்கு மேல் இந்தியாவைக் குற்றம் சுமத்த வேறு சாட்சியம் தேடவேண்டியது இல்லை. அத்துடன் அமெரிக்காவின் ஆலோசனையும் வழிகாட்டலும் பிரித்தானியாவிற்கு உதவியுள்ளமை வெளிப்படையானதாகும். ஏற்கனவே இந்தியா, இலங்கை, அமெரிக்கா என்பன புலிகள் இயக்கத்தைத் தடை செய்து கொண்டமையும் அவற்றின் வழியில் பிரித்தானியா முடிவு செய்துள்ளமையும் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியவையாகும்.

இத்தகைய தொடர் தடைச் சட்ட நடவடிக்கைகளுக்குப் பின்னால் பூகோள மயமாதல் என்னும் ஏகாதிபத்திய பொருளாதார நலன்களும் அதற்கான அரசியல் - ராணுவ வியூகங்களும் இருக்கின்றன. அதேவேளை பிராந்திய மேலாதிக்கத்தின் பொருளாதார அரசியல் ராணுவத்தேவைகளும் பிணைந்துள்ளன. இவை அனைத்தும் இலங்கையின் ஆளும் வர்க்க பேரினவாத ஒடுக்குமுறையுடன் கைகோர்த்து நிற்க வைத்துள்ளது. ஏறத்தாள இத்தகைய பின்புலத்திலேயே தடை செய்யப்பட்டள்ளதாகக் கூறப்படும் பெரும்பாலான நாடுகளின் அமைப்புகள் இருந்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத் திசை மார்க்கம் எது என்பதே எழுந்து நிற்கும் பிரதான வினாவாகும். இதுவரை காலமும் இந்தியாவையும் அமெரிக்க பிரித்தானிய ஏகாதிபத்திய சக்திகளையும் அரவணைத்து நின்று முன்னெடுக்கப்பட்ட தமிழர் போராட்டத்தில் கிடைக்கப்பெற்ற கசப்பான அனுபவங்களும் பயங்கரப் பட்டறிவுகளும் இன்றைய சந்[illegible]த்தில் சீர்தூக்கிப் பார்க்கப்படல் வேண்டும்.

அவற்றின் மூலமான படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வது அவசியமான ஒன்றாகியுள்ளது.

இனிமேலும் ஏகாதிபத்திய சக்திகளையோ அன்றி பிராந்திய மேலாதிக்கவாதிகளையோ நம்பி தமிழர் தமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்பதையே இதுவரையான நடைமுறைகள் உணர்த்தி வந்துள்ளன. பிரித்தானியாவின் தடைச் சட்டம் இதன் உச்ச நிலை உதாரணமாகும்.

தமிழர் தமது சொந்தப் பலத்திலும் ஐக்கியத்திலும் போராட்ட

12ம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவிலிருந்து இரசாயன நச்சுவாயு கொள்வனவு ?

சர்வதேச ரீதியாக யுத்தத்தில் பாவிக்கக் கூடாது என்று சொல்லப்படுகின்ற இரசாயன நச்சு வாயு ரின்களை இலங்கை பாதுகாப்பு படைக்காக அமெரிக்காவிலிருந்து கொள்வனவு செய்யப்படுட்டுள்ளதா என்றும் அப்படி கொள்வனவு செய்யப்பட்ட இரசாயன நச்சு வாயு இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் பாவிக்கப்படுமா என்றும் அமெரிக்காவில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாக புதியபூமிக்கு அமெரிக்காவிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

பாரிய உயிரழிவையும், கொடிய நோய்களையும், இயற்கை சூழலுக்குக் கடும் பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடிய இரசாயன நச்சுவாயு ரின்கள் பத்தாயிரத்தை இலங்கை இராணுவத்திற்காக அமெரிக்க பென்ரகன் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதா ? இவ்வாறு அமெரிக்க பிரஜை ஒருவர் அமெரிக்க அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பி யுள்ளதாக நம்பகமாக அறிய முடிகிறது. பாரிய அழிவை ஏற்படுத்தக் கூடிய இவ்வகை இரசாயன நச்சு வாயுவ்வை இலங்கை அரசாங்கம் அதன் உள்நாட்டு யுத்தத்தில் பாவித்தால் அமெரிக்க அரசின் நிலைப்பாடு எத்தகையதாக இருக்கும் என்றும் அப்பிரஜை கேள்வி எழுப்பியுள்ளதாக அறிய முடிகிறது. பாரிய மனித அழிவைத் தரக் கூடிய இவ் இரசாயன நச்சு வாயுக் கொள்வனவு பற்றிய மேற்படி பாரதூரமான தகவலின் உண்மை நிலை பற்றி இலங்கை அரசாங்கமோ அன்றி அமெரிக்க அரசாங்கமோ உரிய பதில் கூறுவர்களா ?

# 400 ரூபா சம்பள உயர்வை மறுத்து நட்டக் கணக்குக் காட்டும் கம்பனிகள் தோட்டங்களை விட்டு விடவேண்டும் !

எல்லா தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்ட 400 ருபா சம்பள உயர்வை தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்டக் கம்பெனிகள் வழங்க வேண்டும். தோட்டக் கம்பெனிகள் தொடர்ந்து நட்டக்கணக்கு காட்டிவருவதையும் கூட்டு ஒப்பந்தப்படி சம்பள உயர்வை கேட்க முடியாது என்று கூறிவருவதையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். சம்பள உயர்வை வழங்க முடியாவிட்டால் தோட்டங்களை முகாமை செய்யும் பொறுப்பிலிருந்து தோட்டக்கம்பெனிகள் விலகிக்கொள்ள வேண்டும்.

400 ருபா சம்ப உர்வை கேட்டு இ.தொ.கா.வால் தொடங்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் இன்று எல்லா தொழிற் சங்கங்களும் பங்கெடுக்கும் விதத்தில் விரிவடைந்துள்ளது. சத்தியாக் கிரகத்துடன் மறியல் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் போன்றவற்றில் தோட்டத்தொழிலாளர் ஈடுபட்டி ருக்கின்றனர். நம்பிக்கையுடன் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருவதை மதித்து தோட்டக் கம்னிகள் சம்பள உர்வை வழங்க முன்வர வெண்டும். தொழற்சங்கத் தலைவர்கள் தோட்டக் கம்பெனிகளுக்கு எவ்வித விட்டுக்கொடுப்பையும் செய்யாது உறுதியுடன் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். கடந்த காலப் போராட்டங்களில் போன்று இப்போராட்டத்தில் தொழிலாளர்களுக்கு துரோகம் செய்யமாட்டார்கள் என்று தொழிலாளர்கள் நம்புகின்றனர். அதனாலேயே போராட்டத்தில் தோட்டத்தொழிலாளர்கள் உறுதியாக இருந்து வருகின்றனர்.

தோட்டக்கம்பெனிகள் சம்பள உயர்வை மறுத்துவருவதுடன் தோட்டத் தொழிலாளிகளின் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் விதத்தில் பிரசாரங்களையும் செய்து வருகின்றன. தோட்டங்களை தோட்டக். கம்பெனிகளிடம் 50 வருட குத்தகைக்கு கொடுத்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சம்பள உயர்வு விடயத்தில் அதற்குரிய கடமையைத் தட்டிக்கழித்து வருகிறது. தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையை நடத்திய ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் டிசம்பர் மாதம்வரை சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார். இதன் மூலம் தோட்டக்கம்பெனிகளுக்கு சார்பான அவரின் நிலைப்பாடு மேலும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தோட்டத்தொழிலாளிகளின் சம்பள உயர்வு பற்றி கம்பெனிகளுடனும் தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணும் பொறுப்பை பிரதமரிடம் ஜனாதிபதி ஒப்படைத்துள்ளார்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தோட்டத் தொழிலாளர்களின் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடந்து வந்திருக்கிறார். சத்தியாக்கிரகப் போராட்டம் தொடங்கும்போதே தோட்டத்தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல வேறு எவருக்கும் சம்பள உயர்வு வழங்கப்பட முடியாது என்று முன்முடிவை அறிவித்திருந்தார். அவ்வாறான முன்முடிவை கொண்டிருப்பவர் எவ்வாறு சம்பள உயர்வுக்கு சார்பாக நடந்து கொள்வார். மேற்படி நடவடிக்கைகளின் மூலம் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் அக்கறையற்று இருப்பதாக தெரிகிறது. ஐ.தே. கட்சி அரசாங்கம் 5 வருட குத்தகைக்கு தோட்டங்களை தனியார் கம்பெனிகளுக்கு கொடுத்திருந்தது. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் குத்தகை காலத்தை மேலும் 50 வருடங்களுக்கு நீடித்துள்ளது. இதனால் சம்பள உயர்வு விடயத்தில் அரசாங்கம் அக்கறையற்றிருக்க முடியாது. அதன் பொறுப்பு என்ன என்பதே கேள்வியாகும்.

பெருந்தோட்ட வளங்களிலிருந்து கொள்ளை லாபத்தை சம்பாதித்து வரும் தோட்டக் கம்பெனிகள் தொழிலாளர்களுக்கு

12ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# எனக்கு அப்பா வேண்டும்



அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் பிந்தனுவெவ புனர்வாழ்வு முகாமில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகளுக்கும் மனைவிமார் பெற்றோருக்கு நஷ்டஈட்டுத் தொகை ஜனாதிபதியால் வழங்கப்பட்டது. கொலையுண்டவர்கள் இருப்பத்தியேழு பேர். படுகாயமடைந்தோர் பதினைந்துபேர். ஆனால் பத்தொன்பது பேரின் சார்பாகவே நஷ்டஈடு வழங்கப்பட்டது. அத்தொகை இரண்டு லட்சமாக இருந்தது. நடைமுறையில் வழங்கப்பட்டு வரும் ஐம்பதினாயிரம் ரூபாவை நான்கு மடங்காக உயர்த்தி இந் நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த பிந்தெனுவெவ படுகொலைச் சம்பவத்தை மேலும் விரிவாக்கி ஆணைக்குழு 'விசாரணை அது இது என முன்னெடுப்பதை அமர்த்திக் கொள்வதற்கேயாகும்.

இந்த நாட்டின் கேடுகெட்ட நிலை எங்கே சென்று நிற்கின்றது என்றால் மனித உயிர்களைப் பணத்துடன் ஒப்பிட்டுச் சமாளித்துக் கொள்வதில் தான். மிகவும் பிரசாரப்படுத்தப்பட்ட இந் நஷ்டஈடு வழங்கும் நிகழ்ச்சிக்குப் பின் மனதை உருக்கும் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. இவ் நஷ்டஈடு பெறுவதற்கு தந்தையை இழந்த சிறுவர்களையும் ஏனையோரையும் அழைத்து வந்தவர்கள் நிகழ்ச்சி முடிந்த பின் மிகத் திருப்தியுடன் அவர்களோடு அளாவளாவிக் கொண்டிருந்தனர். இரண்டுலட்சம் ரூபாவுக்கான காசோலையைக் கையில் வைத்திருந்த ஒரு சிறுவனின் முதுகில் வருடி எல்லாம் சந்தோசம் தானே என ஒருவர் முன்முறுவலுடனும் பெருமிதத்துடனும் கேட்டார். அந்தச் சிறுவனோ விம்மியபடி "எனக்கு அப்பா வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். முதுகை வருடிய வருக்கு முகத்தில் ஈகூட ஆடவில்லை. இரண்டு லட்சத்தால் அச் சிறுவனுக்கு தனது இழந்த தந்தையைப் பெற முடியுமா ? அல்லது வேறு யார் தான் பெற்றுக் கொடுக்க முடியும். இவ்வாறு எமக்கு அப்பா வேண்டும் அல்லது அம்மா வேண்டும் என்று கேட்கும் பல்லாயிரக்கணக்கான இளம் தளிர்களுக்கு என்ன பதில் ? பேரினவாத ஒடுக்குமுறையாளர்களுக்கும் யுத்த வெறி கொண்டோருக்கும் சிறுவர்களின் குமுறல் குரல்கள் கேட்குமா ?

# முஸ்லீம் காங்கிரஸ் யார் பக்கம்

இலங்கை முஸ்லீம் மக்களுக்கு நிரந்தர முகவரியையும் 'அரசியலில் தனித்துவ அடையாளத்தையும் தேடிக் கொடுத்த கட்சி முஸ்லீம் காங்கிரஸ் என்ற பெருமை இப்போதும் பேசப்படுகிறது. மறைந்த மு.கா. தவைர் அஷ்ரப் தலைமையில் ஆளும் பேரினவாதக் கட்சிகளுடன் பேரம் பேசியும் ஆட்சியில் பங்கு கொண்டும் மு.கா. பழுத்துப் பெருத்த கட்சியாகிக் கொண்டது. பதவிகள், பணம், சொத்து சுகம் எல்லாம் பலவற்றையும் தலைமையும் அதனைச் சுற்றி இருந்தவர்களும் தாராளமாகப் பெற்றுக் கொண்டனர். அதன் ஊடாக வாக்கு வங்கியைப் பெருக்கிக் கொள்ளவும் முடிந்தது.

ஆனால் முஸ்லீம் மக்களின் அடிப்படை அபிலாஷைகளுக்கும் முஸ்லீம் காங்கிரசின் தலைமைத்துவத் திற்கும் இடையிலான இடைவெளி அதிகரித்தே வந்துள்ளது. ஆரம்பத்தில் கிழக்குமாகாண மக்கள் மத்தியிலேயே மு.கா. வேர் பதித்து தன்னை வளர்த்துக் கொண்டது. சாதாரண முஸ்லீம் மக்கள் அதற்கு நீரும் உரமும் இட்டு வளர்த்துக் கொண்டனர். ஊதிப் பெருத்த மு.கா. இன்று வடக்கு கிழக்கின் சராசரி சாதாரண முஸ்லிம் மக்களிடம் அதிருப்தியுடன் அந்நியப்பட்டு வருவதையே காண முடிகின்றது.

மு.கா. கட்சி முஸ்லீம் மக்களது கட்சி என்றும் அவர்களது மத கலாச்சாரம் பற்றியும் பேசக் கூடிய கட்சியாகவும் பேச்சுக்குப் பேசிக்கொள்ளலாம். ஆனால் முஸ்லீம் மக்கள் மத்தியில் காணப்படும் வர்க்க வேறுபாடு பற்றி அதனால் பேசிக் கொள்ள இயலாது. ஏனெனில் எந்த மதத்தாலும் ஆழமாகி நிற்கும் வர்க்க ஏற்றத் தாழ்வுகளுக்கு தீர்வு கூறவோ மாற்றம் ஏற்படுத்தவோ முடியாது.

மு.கா. கட்சிக்குள் முஸ்லீம் அடையாளம் தேடிச் சென்ற முன்னாள் பொதுவுடமை வாதிகள் அங்கே சோஷலிசத்தைக் காண இயலாது தங்களையாவது வளர்த்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்திக் கொண்டனர். இது மு.கா.ன் நிலையை தெளிவு காண்பதற்கு பொதுமானதாகும்.

இன்று முஸ்லீம் காங்கிரசுக்குள் ஏற்பட்டுள்ள தலைமைத்துவப் போட்டி ஏகப்பெரும் பான்மையான முஸ்லீம் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான போட்டி அல்ல. ஏனெனில் போட்டியிடும் இரண்டு தலைவர்களும் ஆளும் கட்சிக்கு விசுவாசம் தெரிவிப்பதில் ஒருவரை ஒருவர் முந்தி நிற்பதைக் காணலாம்.

பேரினவாத ஆளும் நிலை வகிக்கக் கூடிய கட்சிகளுடனான பேரப்பபேச்சின் அடிப்படை அமைச்சர் பதவிகள் மற்றும் உயர் நிலை நியமனங்கள் பற்றியதே அன்றி முஸ்லீம் மக்களின் அபிலாஷைகள் பற்றியவை அல்ல. இதையே கடந்த காலத்திலும் இன்றும் முஸ்லீம் மக்கள் அனுபவவாயிலாகக் கண்டு வருகின்றனர். இந் நிலையில் எவ்வளவிற்கு மு.கா. தலைமை நீட்டி வாசித்தாலும் அதன் உள்ளார்ந்த நிலைப்பாடு உயர் வர்க்க வசதி படைத்த முஸ்லீம்களை மையப்படுத்தியதாகவே உள்ளது. ஆனால் வாக்கு வங்கியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அவ்வப்போது முஸ்லீம் மக்களுக்கு முகவரி தேடித்தந்த ஒரே பல்லவியைத் தான் பாடி நிற்கின்றனர். எவ்வளவு காலத்திற்குதான் இதனைக் கூறிநிற்க முடியும்.

**எம். எச். நவாஸ்**

# ஆயிரம் வீட்டுத்திட்டம் கபடமுயற்சியே !

யாழ் மாவட்டத்தின் வலி-வடக்கு பிரதேச மக்கள் கடந்த பத்து ஆண்டுகளுக்குமேல் தமது சொந்த மண்ணில் இருந்து விரட்டப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தொடர்ச்சியாக விடுத்து வந்த சொந்த இடங்களுக்கு செல்லும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வந்துள்ளது. பலாலி ராணுவத் தளத்தைச் சுற்றியுள்ள பாரிய பிரதேசம் மக்கள் வாழ்வற்ற பாழ் இடங்களாகவே இருந்து வருகின்றன. அந்த நிலங்களைப் படிப்படியாக சுவீகரித்து அபகரித்துக் கொள்ள அரசாங்கம் நேரடி மறைமுக வழிகளில் செயற்பட்டு வருகின்றது. பலாலி ராணுவ விமானத் தளத்தையும் காங்கேசன்துறை துறைமுகப் பகுதியையும் நிலத்தொடர்புள்ள பிரதேசமாக்குவதே திட்டமாகும். அதற்குப் பெயர் அதி உயர் பாதுகாப்பு வலையம் என்பதாகும். இதன் எதிர்காலத்திட்டம் சர்வதேச ராணுவ விமான துறைமுகத் தளமாக விஸ்தரித்துக் கொள்வ தேயாகும்.

இத் திட்டத்திற்கு தடையாக இருப்பவர்கள் வலி வடக்கின் நிலம், வீடு வாசல்கள், வளமான விவசாயப்பூமி ஆகியவற்றை இழந்து ஏதிலிகளாக வாழ்ந்து வரும் மக்களேயாகும். இந்த மக்களுக்கு ஒரு அழகான பலூன் கொடுத்து விளையாட்டுக் காட்டித் திசை திருப்பும் புதிய முயற்சியே ஆயிரம் வீட்டுத் திட்டம் என்பதாகும். இத் திட்டத்தை அரசாங்கம் ஈ.பி.டி.பி. கட்சி மூலம் நிறைவேற்ற முயற்சிக்கிறது. இந்த ஆயிரம் வீட்டுத்திட்டத்தை வலி வடக்கிற்கு வெளியே கட்டிக் கொடுப்பதற்குமுயற்சிக்கப் படுகிறது. அதன் அடிப்படை வலிவடக்கு மக்கள் தமது சொந்த மண்ணின் நினைவுகளில் இருந்து விடுபட்டு ஏதோ கிடைத்தது போதும் என்ற நிலையை உருவாக்கிக் கொள்வதேயாகும்.

எனவே இத் திட்டத்தால் வலிவடக்கு மக்கள் நிரந்தரமாகவே தமது மண்ணையும் அதன் வளங்களையம் இழக்கவே நேரிடும். கபடத்தனமான இத்திட்டத்தை மக்கள் நிராகரிக்கிறார்கள் என்பதே உண்மை நிலை. அவர்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்வதையே விரும்புகிறார்கள் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருவதை செவிகளில் ஏற்காத அரசாங்கம் தனது ராணுவ முனைப்பையே நடைமுறைப் படுத்த நிற்கிறது. அதன் வழியிலானதே ஆயிரம் வீட்டுத் திட்டம்.

**மாவை குணசீலன்.**


## விற்பனையாகிறது




*விநியோகம்*

**வசந்தம் பிறைவேட் லிமிட்டட்**

44. 3வது மாடி,
கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி.
கொழும்பு - 11.
தொலைபேசி : 335844


# நாலு நடக்கும் உலகிலே

## யாமறிந்த மொழிகளிலே

தமிழ்த் தெரியாமல் எவரும் அரச சேவையில் ஈடுபட முடியாது என்றும் தமிழ்த் தெரியாமல் இந்த நாட்டை நிருவகிக்க முடியாது என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஆஹா ! இதன் கருத்து என்ன ?

இதுவரை காலமும் இந்த நாடு சரியாக நிருவகிக்கப்படவில்லை என்கிறாரா ?

ஜனாதிபதிக்குத் தெரிந்த மொழிகளின் பட்டியல் என்று ஆறு வருடங்களுக்கு முன்பு வெளிவந்தது. அதில் இந்தி, பிரெஞ்சு எல்லாம் இருந்தது. தமிழ் இல்லை. அவர் இதுவரை தமிழில் உரையாடியதும் இல்லை. அப்படியானால் இந்த நாட்டை நிருவகிக்கும் தகுதி தனக்கு இல்லை என்று சொல்கிறாரா ? அல்லது அவருடைய கையில் முப்பது நாளில் தமிழ் பாஷை என்கிற அற்புதமான நூல் அகப்பட்டு விட்டதா ?

என்னவாக இருந்தாலும் இந்த நாட்டின் பொருளாதார நிருவாக அதிகாரம் உண்மையில் யாருடைய கையில் உள்ளது ? அவர்களுக்குத் தமிழோ சிங்களமோ தெரியாதே !

## தமிழ் தெரிந்திருப்பதும் நல்லது.

ஒரு சிங்களப் பாடசாலையில் தமிழ் கற்பிக்க ஆசிரியர் தேவை என்று விளம்பரம் ஒன்று இந்த வருட முதலில் வந்திருந்தது. அதில் சம்பந்தப்பட்ட துறையில் காரியமாற்றும் அறிவு இருந்தால் அது மேலதிகமான தகுதியாயிருக்கும் என்று கூறப்பட்டு இருந்தது. அதாவது பதவியைப் பெறத் தமிழ் தெரியாவிட்டாலும் பிழையில்லை. ஆனால் தெரிந்தால் நல்லது. இதுதான் இங்கு தமிழ் கற்பிக்கப்படவுள்ள லட்சணம்.

## விசால தமிழகமும் விசால பாரதமும்

அண்மையில் ஒரு இந்தியப் பத்திரிகைக்காரர் ஓர் ஈழத் தமிழரிடம் வீரப்பனுக்கும் தமிழர் விடுதலைப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ள உறவு பற்றி விளாசித் தள்ளினார். நம்மவர் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். "இவர்கள் தமிழ்நாடு, இலங்கையின் ஒரு பகுதி, கேரளத்தின் ஒரு பகுதி எல்லாம் உள்ளடக்கிய ஒரு படம் வெளி யிட்டிருக்கிறார்கள் தெரியுமா ?'" என்று ஆவேசத்துடன் கேட்டார். நம்மவர் தெரியாது, ஆனால் உங்கள் நாட்டை ஆளுங்கட்சியின் பங்காளிகள் பாகிஸ்தான் பங்களாதேஷ் எல்லாம் உள்ளடக்கிய ஒரு விசால ஹிந்துஸ்தானின் படம் போட்டிருக்கிறார்கள் என்று தெரியும்" என்றார். அதைப் பெரிதாக எடுக்கிறீர்களா ? என்று இந்தியப் பத்திரிகையாளர் கேட்டார். இதை நீங்கள் எடுக்கிற அளவுக்கு அதை நானும் எடுக்கலாம்தானே" என்றார் நம்மவர். அதன் பின் சில நிமிடங்களுக்கு மௌனம் நிலவியது. இந்த இந்தியப் பத்திரிகையாளர் மூலம் புரியக்கூடியது என்ன என்பதைப் புரிந்து கொண்டால் போதும்.

## காரணம் இவை எனும் அறிவும் இலர்

யூ.என்.பி. ஜனநாயமின்மை பற்றி நாடு முழுவதும் பிரசாரம் செய்கிறது. ஜே.வி.பி விலைவாசி பற்றி கையெழுத்து வேட்டை நடத்துகிறது. நியாயமான விடயங்கள் தான். ஆனால் இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமான போரை நிறுத்தும்படி இவர்கள் யாருமே பிரசாரம் செய்வதில்லையே. ஏன் ?

## எப்போ வருவாரோ ?

போரை நிறுத்திச் சமாதானத்தை முன்னெடுக்கும்படி மேலைத்தேய முதலாளிய நாடுகள் இலங்கையை வற்புறுத்த வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் ஒரு மாதமாகப் பல்லவி பாடிக்கொண்டிருக்கின்றன. போரை நிறுத்த வேண்டியதை சிங்கள மக்கள் மத்தியில் வலியுறுத்தும் தேவை ஒன்றும் இருக்கிறதே. அதற்கு இவர்கள் யாரிடமாவது உதவி கேட்பார்களா ? உண்மையான இடதுசாரிகள் உதவுவதற்கு முன்வந்தால் உதறிவிட்டு போகிற பழக்கமும் போகவில்லை. மகாராணிக்குத் தந்தி அடித்து மேன்முறையீடு செய்கிற மரபும் மறக்கவில்லை. எங்கே போய் முட்ட !

## 'மணி' விழாக்கள்

இப்போது பொன்விழா, வெள்ளிவிழா வைர விழா, மணிவிழா என்றெல்லாம் தமக்கு வசதியான எவருடையதோ பேரைச் சொல்லி விழா எடுக்கிறார்கள். இது அந்த மனிதர் மீதான பாசத்தாலா ? இல்லைவே இல்லை. மணி (இங்கிலீஸில்) காசு மீதான பாசத்தால் தான் இந்த விழாக்கள் பலவும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. மற்றவர்களுக்கு விழா எடுத்தே மூன்று தலைமுறைக்குச் வேண்டிய சொத்து சேர்த்து விடுவார்கள். இந்தப் பரோபகாரிகள்

## போரை வழிபடுதல்

அண்மைக்காலமாகப் போரையும் ராணுவத்தையும் போற்றுகிற போக்கு இன்று அதிகாரபூர்வமாக முனைப்புப் பெற்றுள்ளது. கலை வடிவங்களின் மூலமும் இது வெளிப்படுகிறது. படையினரைப் போற்றும் ஒரு சிங்களப் பாடலின் ஆங்கில வடிவம் டெயிலி நியூஸ் ஏட்டில் வந்தது. தமிழாக்க யாரும் இல்லாததால் ஒருவேளை தினகரனில் வரவில்லையோ தெரியாது.

இன்னொரு பாடல் அடிக்கடி ரூபவாஹினியில் ஒலிபரப்பானது. சிறுமியர் அதைப் பாடுகின்றனர்.

படைவீரர்கட்காகவே சூரியன் உதிக்கிறது. படைவீரர்கட்குச் சூரியன் தலை வணங்குகின்றது என்ற தோரணையில் பாடல் தொடர்கிறது.

போகிற போக்கில் ராணுவத் தளபதியின் கட்டளைப்படிதான் சூரியன் உதிக்கிறது. ராணுவத்தளபதி சொன்ன பாதையில் தான் அது வானில் உலா வருகிறது என்று கூட இனிப் பாடல்கள் வரலாம்.

அமைதிக்கான வாய்ப்பை மறுத்துப் போரை உன்னதப்படுத்துகிற இந்த முயற்சிகள் பற்றி அறிய யாரும் மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) அறிக்கைக்காகக் காத்திருக்க வேண்டாம். இதெல்லாம் அங்கே வராது. மாவீரரைப் போற்றினால் மட்டும் அவர்கள் கோபித்துத் துள்ளுவார்கள். மனித உரிமைக்கும் பாரபட்சத்திற்கும் உள்ள தொடர்பை இதன் மூலம் அறியலாம்.

படிப்பகம்

www.padippakam.com




# புதிய பூமி

PUTHIYA POOMI REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA. පුදිය පුමි

சுற்று 08 மார்ச்/ஏப்ரல் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 39

S. 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844


## ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் !

பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் பயங்கரவாத இயக்கங்களின் பெயர்ப்பட்டியிலில் சேர்த்துள்ளது. அதனால் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் அதன் சாதாரண நடவடிக்கைகளை கட்டுப்படுத்திக்கொள்ளும். பிரிட்டிஷின் இந்நடிக்கையால் சர்வதேச பங்களிப்புடானான சமாதான நடவடிக்கைகளில் விடுதலை புலிகள் இயக்கம் ஈடுபடுவதில் பாதிப்பேற்றடலாம். ஆனால் தொடரும் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை பிரிட்டிஷின் நடவடிக்கையால் தடுத்து நிறுத்த முடியாது. பயங்கரவாத இயக்கங்களின் பெயர்ப்பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளடக்கப்படுவதா என்பது பற்றி இலங்கை தமிழர் பழமைவாதி சிந்தனைக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்குமிடையே கௌரவப் போரொன்று நடைபெற்றது.

அதாவது இலங்கை தமிழர்கள் மீது பிரிட்டிஷ் அனுதாபம் கொண்டுள்ளதாக இலங்கை தமிழரிடையே வாழும் பிரிட்டிஷ் அபிமானிகள் எப்போதும் நம்பிவந்தது போன்றே விடுதலைப்புலிகள் இயக்கத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் தடைசெய்யாது என்றும் கூறிவந்தனர். அதேவேளை இலங்கையின் சிங்கள இனவாத அபிப்பிராயத்திற்கு எதிராக பிரிட்டிஷால் நடக்க முடியாது என்று பௌத்த சிங்கள பேரினவாதிகள் கூறிவந்தனர். பிரிட்டிஷ் தடை வந்த பின்பு பிரிட்டிஷ் பற்றி அதிக கற்பனையில் இருந்து வந்த தமிழர்களுக்கு முகத்தில் கரி என்ற நிலை ஏற்பட்டது. பௌத்த சிங்களப் பேரினவாதிகளுக்கு பால் வார்த்த நிலை ஏற்பட்டது. பிரிட்டிஷ் தமிழீழ விடுதலைபுலிகள் இயக்கத்தை தடை செய்யக் கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியிட்டக் கருத்துக்கள் பிரிட்டிஷ் ஏகாதிப்பத்திய அபிமானம் கொண்ட இலங்கைத் தமிழ்ப் பழமைவாதிகள் பேசிய கருத்துக்களிலிருந்து வித்தியாசப்பட்டதாக இருக்கவில்லை என்பதும் உண்மையே.

அரசாங்கமும் பேரினவாதிகளும் மேற்படி தடைச் சட்டம் பற்றி குதூகலம் அடைந்து அறிக்கைகள் விட்டுள்ளனர்.

ஜே.வி.பியோ விரிட்டிஷ் மட்டும் தடைவிதித்தால் போதாது முழு ஐரோப்பிய நாடுகளும் புலிகள் மீது தடைவிதிக்க வேண்டும் என்று வெற்றிகளிப்பில் கூறியுள்ளது.

உலகநாடுகளில் அதிகமானதை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த காலத்தில் அதன் காலனியாதிக்கத்திற்குட்படாத நாடுகளிலிருந்து நாடுகடத்தப்பட்ட அரசியல் வாதிகள் அறிஞர்கள் என்போருக்கு புகலிடமளித்திருந்தது. காலனியாதிக்கத்திற்குட்பட்ட நாட்டு மாணவர்கள் தமது மேற்படிப்பை லண்டனில் படிக்க புலமைப்பரிசில் வழங்கியது காலனியாதிக்கத்தை மறைத்து பிரிட்டிஷ் ஜனநாயகம் என்பதை நிலைநிறுத்தவே அவ்வாறு செயற்பட்டது. எனினும் அதனால் மாற்று அரசியல் கருத்துக்களும், இயக்கங்களும் வேரறுந்து போகாமல் பாதுகாக்கப்பட்டன. அதே வேளை பிரிட்டிஷ் புகலிடம் கிடைக்காதவர்களின் மாற்று அரசியல் கருத்துக்களும் இயக்கங்களும் முற்றாக துடைத்தெறியப் பட்டிருக்கவில்லை. வேற்று நாடுகளிலிருந்து புகலிடம் கோரி வந்தவர்களின் சிலருக்கு மென்மையான போக்கை கடைப்பிடித்த காலனியாதிக்கக் காலத்து நடைமுறை தொடர்ந்திருந்து வந்தது. புகலிடம் கோரிய சிலருக்கு மென்மையான அணுகுமுறையும் பலருக்கு கடுமையான அணுகுமுறையும் பிரயோகிக்கப்பட்டது. இவ்வாறான நடைமுறையை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை பிரிட்டிஷிற்கு ஏற்பட்டது. உலகமயமாதலின் பிரிட்டிஷின் நிகழ்ச்சிநிரலை முன்தள்ள வேண்டுமானால் தேசிய அரசுகளை தம்பக்கம் இழுப்பதே முழுமுதன் நடவடிக்கையாக்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் அரசிற்கு எதிரானவர்களின் எதிர்ப்பு உலகமயமாக்கலுக்கு ஆதரவானதாக இருப்பினும் அவர்கள் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றக்கூடியவர்கள் இல்லாதவிடத்து அவர்களை விட ஆட்சியில் உள்ளவர்களே உலகமயமாக்கலுக்கு பிரயோசனமாகின்றனர். இதுவே இன்றைய ஏகாதிபத்திய நாடுகளின் நிலைப்பாடாகிறது. தேசிய அரசுகள் மனித உரிமைகளை மீறுகின்றனவா என்ற கேள்விகூட உலகமயமாக்லுக்கு ஆதரவா இல்லையா என்பதைப் பொறுத்தே எழுப்பப்படுகின்றன. உலகமயமாக்கலுக்கு ஆதரவெனின் மனித உரிமைகள் பற்றிய கேள்வி செயலிழக்கிறது. தேசிய அரசுகள் கேட்கின்ற பயங்கரவாத இயக்கங்களை தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு என்ற கோஷமுமே முதன்மை பெறுகின்றன. அந்த வகையிலேயெ பிரிட்டிஷ் 21 விடுதலை இயக்கங்களை தடை செய்துள்ளது.

துருக்கி கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகர மக்கள் விடுதலை முன்னணியையும் குர்திஷ் தொழிலாளர் கட்சியையும் கூட தடை செய்துள்ளது. ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு வெளிவெளியாக எதிரான பல இஸ்லாமிய அமைப்புகளும் தடைசெய்யப்பட்டுள்ளன. இந்தியாவில் இயங்கும் இரண்டு காஷ்மீர் அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகளை தடைசெய்வது இந்திய இந்துத்துவ விஸ்தரிப்புவாத மேலாதிக்கவாதத்திற்கு தேவையானது என்ற அடிப்படையில் இந்திய ஆளும்வர்க்கமும் புலிகளை தடைசெய்ய பிரிட்டிஷ்க்கு அழுத்தங்களை கொடுத்துள்ளது.

தடை செய்யப்படுகின்ற விடுதலை அமைப்புகள் தடை செய்யப்படுகின்ற நாட்டுப் பிரஜைகளின் ஆதரவுடனும் பங்களிப்புடனும் அவற்றின் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன. அதனால் அவ்வமைப்புகள் தடை செய்யப்படுகிற நாடுகளில் முற்றாகச் செயலிழப்பதில்லை. அவ்வாறு இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்துக்கான வெளிநாட்டு நடவடிக்கைகளும் மாற்றியமைக்கப் பட்டிருக்காமலும் இல்லை.

ஏகாதிபத்தியங்களுக்கிடையேயும் முதலாளித்துவ நாடுகளுக்கிடையேயும் இருக்கிறன்ற முரண்பாடுகள் விடுதலைப் போராட்டத்தை முன்நகர்த்த தந்திரோபாயரீதியில் உதவலாம். ஆனால் விடுதலைப் போராட்டமானது குறிப்பாக உலகமயமாக்லுக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் வளைந்து நெளிந்து கொடுத்துக்கொண்டு முன்னேற முடியாது. அவற்றுடன் முட்டிமோத வேண்டிய இடத்தில் முட்டி மோத வேண்டியே ஆக வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய விசுவாசமான இலங்கையின் பழமைவாத தமிழர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தை முன்னெடுத்து செல்ல முடியாது.

இந் நிலையிலேயே பிரிட்டிஷ்சினால் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் தனது எதிர்காலத்தை எந்தப்பாதையில் முன்னெடுப்பது என்பதை தீர்மானிக்க வேண்டிய கட்டத்திற்கு வந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பா அல்லது அதனுடன் சமரசமா ? தீர்மானிக்க வேண்டியது அவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

ஆசிரியர் குழு

# இந்துத்துவா அடிப்படைவாதமும் பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையும்

**வெகுஜனன்**

இன்று உலகல் மத இன அடிப்படையவாத சக்திகள் ஆங்காங்கே எழுச்சி பெற்றவையாகவும் வலிமையுடன் செயலாற்றுவனவாகவும் காணப்படுகின்றன. சோஷலிசம் மார்க்சிசம் ஆகியவற்றைப் பின்னடையச் செய்வதற்கு ஏகாதிபத்திய சக்திகள் இத்தகைய அடிப்படைவாத சக்திகளை ஊக்கப்படுத்தி வளர்த்துக் கொண்டன. அவற்றுக்கு ஆயுதங்களும் பயிற்சிகளும் வழங்கி வந்தன. மேலும் சில நாடுகளின் ஆட்சி அதிகாரங்கள் இம் மத இன அடிப்படைவாத சக்திகளை அரவணைத்து அவற்றின் ஊடாகத் தம்மை நிலை நிறுத்தியும் வந்துள்ளன.

இவ்வாறு தமது உள் நோக்கங்களுக்காக இனமத அடிப்படைவாத சக்திகளை வளர்த்த ஏகாதிபத்தியவாதிகளும் நாடுகளின் ஆளும் வர்க்க சக்திகளும் தத்தமது கைகளை அவை மீறும் போது அவற்றின் மீது குற்றப்பத்திரிகை வாசிப்பதையும் தண்டிக்க முற்படுவதையும் காண முடிகின்றது. உதாரணமாக ஆப்கானிஸ்தானில் தலிபான் இயக்கத்திற்கு ஆயுதஉதவி முதல் சகல ஒத்துழைப்பையும் வழங்கியது அமெரிக்கா. இன்று ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதியை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்து ஆட்சி நடாத்தும் தலிபான் மீது அமெரிக்கா சீற்றம் காட்டி வருகிறது. காரணம் அமெரிக்காவிற்கு கடும் சவால் விடுத்து தாக்குதல் நடாத்தி வரும் பின்லேடன் தலைமையிலான இஸ்லாமியத் குழுவினர் ஆப்கானிஸ்தானிலேயே இருந்து வருவதாகும். எனவே அமெரிக்காவானது தனக்கு சவாலாக உள்ள சக்திகளுக்கு அடிப்படைவாத முத்திரை குத்துவதும் தனது கைக்கருவியாகப் பயன்படுத்துபவர்களுக்கு ஆதரவாக இருப்பதும் அதன் ஏகாதிபத்திய நிலைப்பாடாகும்.

இஸ்ரேலிய ஸியோனிச அடிப்படைவாதிகள் தான் பாலஸ்தீனியர்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களுக்குரிய நாட்டை பெறுவதில் மிகப் பெரும் தடையாக இருந்து வருகிறார்கள். இதுவரை பாலஸ்தீனிய இஸ்ரேலிய பேச்சுவார்த்தை வெற்றி பெற முடியாமைக்கு அடிப்படைக் காரணமாக இருந்து வருபவர்கள் ஸியோனிச அடிப்படைவாதிகளின் அகன்ற இஸ்ரேலிய விஸ்தரிப்புக் கொள்கையேயாகும்.

அவ்வாறே இந்தியாவின் காஷ்மீரிய மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அம்மக்களை அவர்களது சொந்த மண்ணில் அடக்கி ஒடுக்கி வருபவர்கள் இந்துத்துவா அடிப்படைவாதத்தைக் கை கொண்டுவரும். இந்திய ஆளும் வர்க்கமேயாகும். இந்துத்துவா அடிப்படைவாத வழிகாட்டலில் செயற்படும் இந்திய ஆளும் வர்க்கம் காஷ்மீரிய மக்களுக்கு மட்டுமன்றி வடக்கிழக்கிலும் ஏனைய பிரதேசங்களில் போராடும் மக்களுக்குரிய சுயநிர்ணய உரிமையை மறுப்பதிலும் முன்நிற்கின்றனர்.

மேலும் பாகிஸ்தானிய ஆட்சியானது ராணுவ சர்வாதிகாரத்தின் கரங்களில் இருப்பினும் அங்கேயும் இஸ்லாமிய மத அடிப்படைவாத நெறிகளே வழிகாட்டும் நிலையில் காணப்படுகின்றன. அதனால் பாகிஸ்தானிய சிறுபான்மைத் தேசிய இனங்கள் கடுமையான அடக்கு முறைகளை எதிர்கொள்கின்றன.

இவை அனைத்தையும் ஒரு பரந்த தளத்தில் வைத்து நோக்கும் போது இவ் இனமத அடிப்படைவாத சக்திகளிடையே உள்ளார்ந்த இணைப்பு வலை ஒன்று பின்னப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனத்தினதும் ஏனைய தேசிய இனங்களினதும் சுய நிர்ணய உரிமையை மறுத்து நின்று கொடிய யுத்தம் புரிவதில் இலங்கையின் பேரினவாத ஒடுக்குமுறை ஆட்சிகள் தன் முனைப்புடனேயே இருந்து வந்துள்ளன. அவை அனைத்தும் இஸ்ரேல் பாகிஸ்தான் தற்போது இந்தியா என்பவற்றிடம் தாராள இராணுவத்தளபாட உதவிகளும் ஆயுதங்களையும் பெற்று வந்துள்ளன. ஒன்றுக்கொன்று முரணான நிலையில் இருந்த போதிலும் இலங்கைக்கு உதவுவதில் பௌத்த மத அடிப்படை வாதத்தைப் பலப்படுத்துவதில் அவை ஒரே தளத்தில் நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

இன்று இந்தியாவில் இந்துத்துவ அடிப்படை வாதத்தை செயலாக்கி வரும் பாரதிய ஜனதா ஆட்சியுடன் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள உறவை வெறுமனே ராஜாங்க உறவாக மட்டும் கண்டு கொள்ள முடியாது. பிராந்திய மேலாதிக்கத்தை விரிவுபடுத்தி வலுப்படுத்த நிற்கும் இந்துத்துவ உள் நோக்கத்திற்கு கைகொடுத்து நிற்கும் பௌத்த மத அடிப்படைவாதத்தின் சமரச உறவாகவும் அடையாளம் கண்டு கொள்ளல் வேண்டும்.

இதனை இலங்கை ஜனாதிபதியின் அண்மைய இந்தியாவிற்கான மூன்று நாள் உத்தியோக பூர்வப் பயணமும் இந்தியத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தையும் உறுதிப்படுத்தி நிற்கின்றன. மேலும் இந்துத்துவ அடிப்படைவாதத்தை வெளிப்படையாகவே பிரதிநிதித்துவம் செய்து வரும் உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி போன்றோரின் இலங்கை பற்றிய கண்ணோட்டமானது மேன்மேலும் இந்துத்துவ பௌத்த அடிப்படைவாதங்களை நெருக்க மடைய வைத்து வருகின்றது என்பதும் நோக்கவேண்டியதாகும்.

இந்து பௌத்த முரண்பாடும் பிளவும் பழைய கதை. இந்துத்துவ பிராந்திய மேலாதிக்கத்திற்கு இலங்கையின் பௌத்த அடிப்படைவாதம் தேவைப்படுகிறது. அதேவேளை பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையின் நீடிப்பிற்கு இந்துத்துவ இந்தியா அவசியமா கின்றது. ஆதலினால் இன்று இந்துத்துவ-பௌத்த அடிப்படைவாதக் கூட்டுமகுலர்வுதலும் சாத்தியமாகி வருகின்றமை நாளாந்தம் வெளிப்ப டையாகி வருகின்றன.

இலங்கை மக்களுக்கும் இந்திய மக்களுக்குமான நெருங்கிய உறவு வரலாற்றால் உறுதி செய்யப்பட்டதாகும். அத்தகைய உறவைத் தத்தமது ஆளும் அதிகார வர்க்கத் தேவைக்காக இருபுறத்திலிருந்தும் நாசப்படுத்தி வந்த மத இன அடிப்படைவாத சக்திகள் இன்று, தமக்குள் ஐக்கியப் பட்டிருக்கின்றன. அந்த ஐக்கியம் இரு நாடுகளினதும் மக்கள் நலன் சாரந்தவைகள் அல்ல. நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி வர்க்க நலன்கள் சார்ந்தவைகளே.

இதன் அம்சங்களையும் தன்மைகளையும் நாம் அரசியல் நோக்கிலான இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலும், பொருளாதார நலன் சார்ந்த இலங்கை - இந்திய பொருளாதார ஒப்பந்தத்திலும் தெளிவாகக் கண்டு கொள்ள முடிந்தது. அவ்வாறே பண்பாட்டு ஊடுருவலிலும் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

இவற்றுக்கும் மேலாக இந்து மதப் பிரச்சாரம் பல்வேறு சமய சமூக அமைப்புக்களால் புகுத்தப்பட்டு வருகின்றன. அவை இந்துத்துவ அடிப்படைவாதக் கருத்துக்களையே பரப்பி வருகின்றன. இவை சிங்கள மக்கள் மத்தியிலும் பரப்பப் படுகின்றன. இவற்றுக்குரிய போதிய நிதி வழங்கல்கள் இந்தி யாவில் இருந்து தாராளமாகக் கிடைக்கின்றன.

இன்று என்றுமில்லாத அளவுக்கு இந்துத்துவா அடிப்படைவாதமும் பௌத்த பேரினவா தமும் இணங்கிக் கொண்டு செயல்பட்டு வருவதை அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டுத் துறைகளில் காண முடிகிறது. இந் நிலை இலங்கை மக்களுக்கோ அன்றி இந்திய மக்களின் அடிப் படை நலன்களுக்கோ உகந்ததாக இருக்க முடியாது.

இவ்விடத்திலே ஒரு முக்கிய விடயத்தைச் சாட்டிக்காட்டியே ஆகவேண்டும். இந்தியாவில் இந்துத்துவ அடிப்படைவாதத்தை சாதாரண மக்கள் மத்தியிலிருந்தும் கல்வியாளர்கள் அறிஞர்கள் வரை பகிரங்கமாக எதிர்த்து வருகிறார்கள். அரசியல் கட்சிகளில் குறிப்பானவை எதிர்க்கின்றன. ஆனால் இலங்கையின் பௌத்தமத அடிப்படைவாதத்தை எதிர்ப்பதில் பலதரப்பிலும் தயக்கமும் பின்னடிப்பும் காணப்படுகின்றன. ஒரு காலத்து இடதுசாரிகள் என்போர் கூடத் தமது பாராளுமன்ற வாதத்திற்குப் பணிந்து போய் கிடப்பதையே காணமுடிகின்றது. இதன் காரணமாக பௌத்தமத அடிப்படைவாதம் தன்னை நிலை நிறுத்திக்கொள்வதில் முழு மூச்சாகி நிற்பதுடன் தனது வளர்ச்சிக்கு இந்துத்துவ அடிப்படைவாதிகளின் ஆசீர்வாதத்தையும் பெற்று நிற்கின்றது.

இலங்கையின் அதிஉயர் பௌத்த பீடாதிபதிகளோ அன்றி பௌத்த காங்கிரஸ் போன்ற அமைப்புகளோ அல்லது அரசியலில் இறங்கியுள்ள வீரவிதான சிஹல உறுமய போன்றவைகளோ இன்று இந்தியா பற்றி எதுவுமே பேசுவதில்லை. அந்தளவுக்கு இந்து-பௌத்த அடிப்படையவாத சக்திகளிடையே புரிந்துணர்வு ஏற்பட்டுளளது.

இம்மத இன அடிப்படைவாத சக்திகளின் பின்னால் கெட்டியாக மறைந்திருப்பது உயர் வர்க்க சொத்து சுகபோக வர்க்கங்களின் அடிப்படை நலன்களேயாகும். இந்துத்துவ இந்திய மேலாதிக்கமாயினும் பௌத்த சிங்கள பேரினவாதமாயினும் அத்தகைய ஆளும் வர்க்க சக்திகளையே பிரதிநிதித்துவம் செய்கின்றன என்ற உண்மை கண்டு கொள்ளப்படுவது அவசியமானதாகும்.

□□□

> **இந்து பௌத்த முரண்பாடும் பிளவும் பழைய கதை. இந்துத்துவ பிராந்திய மேலாதிக்கத்திற்கு இலங்கையின் பௌத்த அடிப்படைவாதம் தேவைப்படுகிறது. அதேவேளை பௌத்த பேரினவாத ஒடுக்குமுறையின் நீடிப்பிற்கு இந்துத்துவ இந்தியா அவசியமா கின்றது. ஆதலினால் இன்று இந்துத்துவ-பௌத்த அடிப்படைவாதக் கூட்டும்குலாவுதலும் சாத்தியமாகி வருகின்றமை நாளாந்தம் வெளிப்ப டையாகி வருகின்றன.**

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் சம்பளத் திட்டங்களில் புறக்கணிப்பு!

இலங்கையின் தேயிலை, றப்பர் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எந்தவொரு தேசிய ரீதியான திட்டங்களிலும் உள்ளடக்கப படாதவர்களாகவே விடப்பட்டுள்ளனர். அந்தவகையில் எந்தவொரு சம்பளத்திட்டத்திலும் உள்ளடக்கப் படாத துறையாக பெருந் தோட்டத்துறை இருந்து வருகிறது. இன்று நேற்றின்றி கடந்த காலம் முழுவதிலும் எல்லா அரசாங்கத்துறை தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வுகள் வழங்கப்படும் போது தோட்டத் தொழிலாளர்கள் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் தோட்டத் தொழிலாளர் சார்பில் விசேடமாக கோரிக்கைகள் முன்வைக்கபட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டப் பின்பே எல்லோருக்கும் வழங்கப்பட்ட சம்பள உயர்வில் கால்வாசி அல்லது அரைக்கால்வாசி வழங்கப்படுவதுண்டு.

இதற்கு அடிப்படைக்காரணம் யாதெனில் இதுவரையும் தோட்டத் தொழிலாளிகளுக்கென அங்கீகரிக்கப் பட்ட அடிப்படை சம்பளத்திட்டமொன்று இல்லாமையே ஆகும். தனியார் கம்பெனிகள் மட்டுமன்றி தோட்ட ங்களை நடத்திய அரசாங்க நிறுவனங்கள் கூட தோட்டத் தொழிலாளர்களுக்கென நிலையான சம்பளத்திட்டமொன்று வகுக்கப் படுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனை மறுத்தே வந்தன. தேயிலை, றப்பர் என்பவற்றின் விலை நிலையாக இருப்பதில்லை என்பதாலும் பெருந்தோட்டத்துறையில் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இருப்பதாலும் நிலையான சம்பளத் திட்டத்தை ஏற்படுத்த முடியாதென கூறப்பட்டு வருகிறது. தொழிலாளர் களை பிரதிநி தித்துவப் படுத்தும் தொழிற்சங்க ங்களும் மேற்படி சம் பளத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து. கூறப்படும் காரணங்களை மறுதலிக்கவோ அல்லது மாற்றுத் திட்டத்தை முன்வைக்கவோ தவறிவிட்டன. சம்பளத்திட்டத்தை மறுப்பதற்கான காரணங்களை அப்படியே அவையும் ஏற்றுக் கொண்டதுடன் அதற்கு மாறான வழிமுறைகளை நாடுவதில் அக்கறை காட்டவும் இல்லை. காரணம் பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் கொண்டிருந்த அதே பொறி முறைகளுடனே இன்றும் இயங்கி வருகின்றன. முதலாளித் துவத்தின் தற்கால வளர்ச்சிக்கு ஏற்ப மலையகத் தொழிற்சங்க இயக்கத்தின் பொறிமுறை மாற்றியமைக்கப் படவில்லை. குறிப்பாக தொழிலாளர்கள் கோரிக்கைகள் பற்றிய விஞ்ஞானபூர்வ படிப்புகள் தொழிற்சங்கங்களிடமில்லை. தொழிலாளர்களின் நாளாந்த அத்தியாவசிய செலவுகள் தொடக்கம் உற்பத்தி செலவுகள் இலாபங்கள் உட்பட அனைத்து விடயங்களிலும் சரியான படிப்பு தொழிற்சங்கங்களிடம் இல்லை.

**சுரண்டிக்கொழுக்கிறது முதலாளி வர்க்கம்**
**உழைத்து உழைத்து மடிகிறது**
**தொழிலாளி வர்க்கம்**

கூட்டு ஒப்பந்தங்களை செய்கிறபோது அவற்றின் ஆழ அகலங்களை பார்க்காமல் அந்தந்த நேரத்தை சமாளிக்கும் வகையில் கண்மூடித்தனமாக தொழிற் சங்கங்கள் கையெழுத் திட்டுள்ளன.

உதாரணமாக தற்போதைய சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைக்க முடியாதவாறு தடைசெய்யும் வாசகங்களை கொண்ட கூட்டு ஒப்பந்தத்திற்கு இ.தொ.கா. இ.தே.தோ. தொ.சங்கம் தோட்டத்தொழிற்சங்க கூட்டமைப்பு என்பன கைச்சாத்திட்டுள்ளன. அவ்வாறு பாதிப்புடைய கூட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்ளக் கூடிய சட்டநடவடிக்கைகளையும் எடுக்க தவறியுள்ளன. மலையகத் தொழிற் சங்கங்கள் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்டகுமிடையே பிணக்குகளை தொழில்சார்ந்த ரீதியாக தீர்ப்பதற்கு தகுதியுடையதாகத் தம்மை வளர்த்துக் கொள்ளவில்லை என்பது தொழிற்சங்க இயக்கத்தின் மிகப் பெரும் குறைபாடாகும்.

இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரித்த சூழ்நிலையில் ஆககுறைந்தது, பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

1. அடிப்படை சம்பளம் ஆகக்குறைந்தது தற்போது வழங்கப்படவேண்டிய நாள் சம்பளமான 121 ருபாவாவது ஒரு நாளின் அடிப்ப டைச்சம்பளமாக இருக்க வேண்டும்.

2. தொழில் செய்யா விட்டாலும் சம்பளமில்லாத லீவு எடுக்கப் பட்டாலன்றி மாதாந்த அடிப்படைச் சம்பளத்தில் 40 சதவீத சம்பளத்திற்கு ஒவ்வொரு தொழிலாளியும் பெற்றுக் கொள்ள உரித்துடையவராக இருத்தல் வேண்டும்.

3. வாழ்க்கைச் செலவுச் சுட்டென் அதிகரிப்புக்கு ஏற்ப வாழ்க்கைச் செலவு படி வழங்கப்பட வேண்டும்.

4. ஏனைய படிகள் அடிப்படை சம்பளத்திற்கு புறம்பாகவும் பொதுவாக எல்லா தொழிலாளர்களுக்கும் கொடுக்கப படுகின்ற படிகள் அனைத்தும் உறுதி செய்யப்பட வேண்டும். அரசாங்கத்தால் காலத்திற்கு காலம் அதிகரிக்கப் படுகின்ற எல்லா சம்பள உயர்வுகளுக்கும் உறுதி செய்யப்பட வேண்டும்.

5. வருடாந்த சம்பள அதிகரிப்பு முறை உள்ளடக்கப்பட வேண்டும்.

தொழிலாளர்களுக்கு இயற்கையிலிருந்து கிடைக்கும் நீர், விறகு, கால்நடைகளுக் புல் வீட்டுத் தோட்டங்கள் என்பவற்றுக்கும்; பொதுவசதிகளான பொது சுத்திகரிப்பு வசதிகள், வீட்டு வசதி பிள்ளை பராமரிப்பு நிலையங்கள், வைத்தியவசதி, மயானவசதி என்பவற்றுக்கும் சம்பளத் திட்டத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஏனெனில் அவற்றை தொழிலாளர்கள் பெற்றுக்கொள்வதால் பெருந்தோட்ட தேயிலை றப்பர் உற்பத்திச்செலவில் அதிகரிப்பு ஏற்படுவதில்லை. அவ்வாறு கணக்கிட்டுக் காட்டுவது கம்பனிகளின் திட்டமிட்ட ஏமாற்றாகும். தேயிலை றப்பர் என்பனவற்றின் உற்பத்திச் செலவை குறைக்கவும், சந்தை வசதிகளை அதிகரிக்கவும் தோட்டக்கம்பெனிகள் திட்டமிட்டு செயற்பட வேண்டுமேயன்றி தொழிலாளர்களின் சம்பளத்தை குறைப்பதற்கு எவ்வித நியாயமும் இருக்க முடியாது.

எனவே காலாதிகாலமாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் காட்டப்பட்டு வரும் மிக மோசமான அநீதியையும் புறக்கணிப்பையும், ஏமாற்றுத் தனங்களையும் முடிவுக்கு கொண்டு வருவதற்கு மலையகத் தொழிற்சங்ங்கள் அனைத்தும் தொழிலாளி வர்க்கஅடிப்படை நலன்சார்ந்த சம்பளத்திட்டத்தை வடிவமைக்க முன்வரல் வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் ஒரு நியாயமான சம்பளத்திட்டப் பொறிமுறையை வென்றெடுத்து நிலை நாட்ட விட்டுக் கொடுக்காத போராட்டத்தை ஐக்கியப்பட்டு முன் னெடுக்கவும் தயாராக வேண்டும். இதனையே இன்றைய சம்பள உயர்வுக்கான மலையகத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டம் உணர்த்தி நிற்கின்றது. சுரண்டிக் கொழுத்து நிற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் அதனைப்பாதுகாத்து வரும் அரசாங்கத்திற்கும் எதிராக தோட்டத் தொழிலாளி வர்க்கம் புரட்சிகரப் போராட்டத்தை முன்னெடுக்கும் இலக்கை நோக்கி முன் செல்வதன் அவசியத்தையும் தற்போதைய நிலைமைகள் வெளிப்படுத்துகின்றன.

பெ. அருட்செல்வம்.

# இந்திய கலை இலக்கிய குப்பைகள் கொட்டப்படும் இடமாக இலங்கை

கடந்த இரண்டு தசாப் தங்களாகச் சகலவற்றுக்கும் இலங்கை திறந்து விடப்பட்ட ஒரு நாடாகியுள்ளது. அதன் மூலம் பொருளாதார அசியல் நாசங்கள் வந்து சேர்ந்து கொண்டன. அவ்வாறே சமூக பண்பாட்டுச் சீரழிவுகளுக்கான விடயங்களும் வந்து குவிந்து கொண்டன.. இதில் ஒன்றே இந்திய கலை இலக்கியக் குப்பை கூளங்களின் வருகையாகும். இவ் இடத்திலே இந்தியாவில் இருந்து வரும் தரமானதும் சமூகப் பயன்பாடு மிக்கதுமான கலை இலக்கிய அறிவியல் படைப்புகளின் வருகையை எவ்வகையிலும் நாம் கொச்சைப் படுத்தவோ அல்லது குறைத்து மதிப்பிடவோ தயாராக இல்லை. எமது ஆதங்கமும் கண்டனமும் எதிர்ப்பும் சமூகச் சிந்தனையை மழுங்கடித்து பண்பாட்டுச் சீரழிவை ஏற்படுத்தி வரும் குப்பைத் தனமான கலை இலக்கிய ஆக்கங்களின் மீதேயாகும்.

இந்தியாவில் இருந்து தமிழ் ஆங்கில கலை இலக்கிய நூல்கள் சஞ்சிகைகள் தாராளமாக இறக்கப் படுகின்றன. அவற்றில் பெரும் பாலானவை சமூகச் சார்பற்ற குப்பைத் தனமான நசிவு இலக்கியங்களாகவே காணப் படுகின்றன. தரமான கலை இலக்கிய நூல்கள் சஞ்சிகைகளை விரல் விட்டு எண்ணக் கூடிய ஓரிரு புத்தக விற்பனை நிலையங்களில் மட்டுமே பெற முடியும். ஆனால் பொழுது போக்கு இலக்கியம் என்ற பெயரில் பாலியல், வன்முறை மத்தியதர வர்க்க வாழ்க்கை நிலை, மேட்டுக் குடியினரின் இச்சைகள் போன்றவற்றுக்கான நூல்கள் சஞ்சிகைகள் புத்தக சாலைகள் முதல் தெருவோரக் கடைகள் வரை நிரம்பி வழிகின்றன. இவற்றை இளைஞர் யுவதிகள் கிரமமாகப் பெற்று வாசித்துச் சீரழியும் போக்கு காணப்படுகிறது. ரமணிச் சந்திரன், பாலகுமாரன் சுஜாதா போன்ற மூன்றாம் தர எழுத்தாளர்களது நூல்கள் இலகுவாகவே இளம் தலைமுறையினரிடம் சென்றடைகின்ற அவலத்தைக் காணமுடிகிறது.

மேலும் சினிமா என்பது பெரிய திரை சின்னத்திரைகள் வாயிலாக வந்து குவிந்த வண்ணம் உள்ளன. தமிழ் மசாலாச் சினிமா பாலியல், வன்முறை, பழமை வாதக் கருத்துக்கள், சமூக விழிப்புணர்வை மழுங்கடித்தல் போன்றவற்றை மையப்படுத்தி நிற்கின்றன. இத்தகைய சினிமாப் படங்களுக்கு வானொலி தொலைக் காட்சியில் அமர்க்களமான



பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அண்மையில் இத்தகைய சினிமாப் படங்களில் மூன்று கொழும்பில் 50 நாட்கள் ஓடியதற்காக ஒரு பெரிய விழாவே எடுக்கப்பட்டது. அதில் அப்படங்களை வெற்றிகரமாக ஓட வைத்தவர்களுக்கு விருதுகளும் பொன்னாடைகளும் வழங்கப்பட்டன. நமது சமூகம் எங்கே இழுத்துச் செல்லப்படுகிறது ?

இதற்கும் போட்டியாகச் சின்னத்திரையில் நாளும் மூன்று நான்கு படங்கள் தொலைக்காட்சியில் நிலையங்களினால் காட்டப்படுகின்றன. அத்துடன் தொடர்நாடகங்கள் திணிக்கப்பட்டு மக்களது சிந்தனையில் ஏற்றப்படுகின்றன. இவை யாவும் தமிழ் நாட்டு மத்திய தரவாழ்க்கைப் பின்னணியைக் கொண்ட மேல் மட்டச் சிந்தனைகளின் தொகுப்பாகவே உள்ளன. இவை மட்டு மன்றி நீலப்படங்கள் தெருத் தெருவாகச் சின்னத் திரைகளில் கூவி அழைத்துக் காட்டப்படுகின்றன. பம்பாய் கல்கத்தா, சென்னையில் இருந்து வந்த யுத்தம் புதிய கொப்பிகள் என்ற பகிரங்கப் பிரச்சார அழைப்புகள் விடுத்து அரங்கு நிறைந்த காட்சிகளாகக் காட்டப் படுகின்றன. இவற்றை இளைஞர்கள் ஈ மொய்ப்பதுபோலக் குவிந்து பார்த்துப் பரவசமைடைவதுடன் உடனடியாகவே பார்த்தவற்றைப் பரீட்சிக்கவும் முயலுகின்ற அபாயமும் காணப்படுகின்றது.

**ஒரு புறம் பணம் பண்ணுதல்**
**பண்பாட்டுச் சீரழிவு மறுபுறம்**
**— மதன் —**

மற்றொரு தளத்திலே பெரும் பண முதலைகள் ஓரிருவர் ஒன்று சேர்ந்து தமிழ் நாட்டு நடிகர் நடிகைகள், பாடகர்கள் என்போரைக் கும்பலாகவும் தனியாட்களாகவும் அழைத்து வந்து கலைச் சேவை செய்வதாகக் கூறிக் கொண்டு ஏதோ ஏதோ எல்லாம் நடாத்துகிறார்கள். இவற்றுக்கு ஆகக் குறைந்த கட்டணம் 500 ருபா ஆயிரம் இரண்டாயிரம் ஐயாயிரம் என அறவிடுகிறார்கள். இவற்றை பார்த்து ரசித்து அனுபவிக்கவும் ஒரு கூட்டம் பணப்பைகளுடன் அலைந்து திரிவதையும் காணலாம். இந்தக் கலைச் சேவை வியாபரத்திற்குப் பின்னால் மேலும் பல வியாபாரங்கள் இடம் பெற்று வருகின்றன. தாராளமயத்தாலும் தனியார் மயத்தாலும் விழுங்கப்பட்ட எமது நாடு எத்தகைய பண்பாட்டுச் சீரழிவையும் இலகுவில் உள்ளவாங்கிக் கொள்ளக் கூடியதாகவே மாறியுள்ளது.

இந்தியக் கலை இலக்கியக்குப்பைகளினால் மட்டுமன்றி இந்துத்துவக் கருத்துக்களின் தாக்கத்தினாலும் சமூகச் சிந்தனைகள் பாழடிக்கப்படுகின்றன. நடுத்தர வர்க்கத்தினரும், மேல் தட்டு மாந்தரும் பல்வேறு சமய நிறுவனங்களின் பெயரால் அவதாரங்களின் பெயரில் பஜனை தியானம் சொற்பொழிவுகள் உபதேசங்கள் என்றவாறு கருத்துக்களைப் பரப்பி வரும் போக்கைக் காண முடிகின்றது.

ஒவ்வொரு மதத்தினரும் தத்தமது மதக் கருத்துக்களை நம்பவும் பரப்பவும் சுதந்திரம் உடையவர்கள். அதை யாரும் மறிக்க முடியாது. ஆனால் அதே சுதந்திரத்தைப் பயன் படுத்தி விஞ்ஞான பூர்வமான சமூகக் கருத்துக்களையும் கொள்கைகளையும் மறுத்தும் கிண்டல் செய்தும் எதிர்க்கருத்துப் பரப்பும் செயலே கண்டிக்கத் தக்கதாகும். இத்தகைய மதக் கருத்துக்கள் வர்க்கங்களுக்கு அப்பால் மனிதர்கள் எல்லோரையும் ஈடேற்றுவதாகப் பாசாங்கு செய்வதையே நாம் மறுத்துரைக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு கலை இலக்கியம் தொட்டு மத ஆன்மீகம் வரை இலங்கை மீது இந்தியா தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி ருகின்றது. ஒரு புறத்தால் நமது பணம் வாரி அள்ளிச் செல்லப்படுகிறது. மறுபுறத்தால் பண்பாட்டுச் சீரழிவுக் கருத்துக்களும் சமூகச் சிந்தனைகளை மழுங்கடிக்கும் உபதேசங்களும் புகுத்தப்படுகின்றன. இவை மட்டுமன்றி நடை உடை பாவனை உணவுப் பழக்கத்திலும் கூட ஒரு சமூக அந்தஸ்தாகவும் கௌரவமாகவும் பின்பற்றும் நிலை வளர்க்கப்படுகிறது.

இவற்றுடன் கவனத்திற்குரிய மற்றொரு அம்சம் கவனிக்கப்படல் வேண்டும். அதாவது இந்திய கலை இலக்கியக் ஆக்கங்கள் யாவும் எவ்வித தங்கு தடையும் இன்றி இங்கு வந்து கொள்கின்றன. ஆனால் நமது கலை இலக்கிய ஆக்கங்கள் அங்கு வர்த்தகரீதியில் காலடி எடுத்து

11 ம் பக்கம் பார்க்க

www.padippakam.com



# மலையகப் பெண்களின் நிலை!

ஆர். விஜயகுமாரி

மகளிருக்கு என பொதுப் போக்குவரத்து வாகனங்களில் இடம் ஒதுக்கப்பட்டு பின்னர் வருடாந்தம் ஒரு தினம் ஒதுக்கப்பட்டு தற்போது பாராளுமன்றத்தில் 33½ வீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப் பட்டுள்ளது. மார்ச் எட்டாம் திகதி பல இடங்களிலும் கலந்துரையாடல்களும், கருத்தரங்குகளும் நடைபெறும். அவை பெரும்பாலும் அரசசார்பற்ற நிகழ்ச்சி நிரலாக அமைகிறது.

மலையகத் தமிழ் பெண்களுக்கும் எல்லா பெண் களுக்கும் வழங்கப்பட்டபோது வாக்குரிமை வழங்கப்பட்டது. பின்னர் 1948 ஆண்டு பறிக்கப்பட்டது. பின்னர் சில சில ஏற்பாடுகளின்படி பிரசாவுரிமை வழங்கப்பட்டபோது வாக்குரிமையும் உறுதி செய்யப பட்டது. 1980களில் ஆண்களுக்கு வழங்கப்படும் சம்பளம் பெண் தோட்டத்தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டது மலையகத்திலிருந்து படித்த பெண்கள் சமூகமொன்றும் தோற்றம் பெற்றுள்ளது.

மலையகத் தமிழ் பெண்களில் தோட்டத் தொழிலாளிகளாக இருப்பவர்களின் எண்ணிக்கையே அதிகமாகும். அவர்கள் பொருளாதார ரீதியாகவும் சமூகரீதியாகவும் சுரண்டப்படுவதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதாகக் கூற முடியாது. நிலப்பிரப்புத்துவ முதலாளித்துவ அடிப்படையிலான ஆணாதிக்க சிந்தனைகளாலும், அடக்குமுறைகளாலும் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். ஆண் தொழிலாளிகளுக்கு சமமாக சிலவேளைகளில் அதிகமாக ஊதிய சம்பாதித்தாலும் குடும்பங்களிலும் சமூக ரீதியாகவும், ஒதுக்கப் பட்டவர்களாகவே பெண்கள் நடத்தப்படுகின்றனர். இவர்களின் சுகாதார நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. இவர்களில் அதிகமானோர் இரத்தச்சோகையினால் பாதிக்கப் பட்டுள்ளனர். கண்பார்வை குறைந்தவர்களாகவும் இருக்கின்றனர். பொதுவிடயங்களில் குறிப்பாக தொறிற்சங்க அரசியல் விடயங்களில் கைவிடப்பட்ட வர்களாக அல்லது நிராகரிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க சீதனம் சாதியம் போன்ற கொடுமைகளால் மலையகத்தின் படித்த பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். படித்தப் பெண்களில் பலர் ஆசிரியைகளாகவும் சிலர் பெருந்தோட்டத்துறை உத்தியோகத்தர்களாகவும் சிலர் விரிவுரையாளர்களாகவும் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் தொழில் துறை சார்ந்தவர்களாகவும் சிலர் ஆடைத் தொழிற்சாலைகளிலும் கடமை யாற்றுகின்றனர். இவ்வாறானவர்கள் தோட்டத்தொழிலாளப் பெண்களை விட பல மீறல்களைச் செய்ய வேண்டிய வர்களாக இருப்பதால் பல விதமான சவால் களுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இவர்கள் பண்பாட்டு ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மட்டுமன்றி அரசியல் ரீதியான அடக்குமு றைகளுக்கும் பழிவா ங்கல்களுக்கும் ஆளாகி ன்றனர். இவர்களின் சமூக மேனிலையாக் கத்தினால் பிரச்சி னைகளை தீர்த்துவிட முடியுமென்று நம்பிக்கையூட்டப்படுகிறது. இவர்களின் முன்னேற்றம் சமூக மேனிலையாக் கத்தினாலேயே புதிதாக உருவான பல பிரச்சினைகள் இருக்கின்றன. இலங்கையின் ஏனைய படித்த பெண்களுக்கும் நடைமுறையில் இருக்கின்ற பல உரிமைகளும் சலுகைகளும் இவர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

இவர்களுக்கும் இவர்களின் உருவாக்கத்திற்கு அடிப்படையான இவர்களின் உருவாக்கத்திற்கு அடிப்படையான பெருந்தோட்ட பெண் தொழிலாளிகளுக்கும் இடைவெளிகள் அதிகமாகவே இருக்கின்றன. இருசாரினதும் பிரச்சினைகள் தோற்றப்பாட்டில் மாறுபட்டதாக இருப்பினும் ஒரே அடிப்படைகளை கொண்டவை என்பதை மறுப்பதற்கில்லை. வர்க்கரீதியாகவும் இனரீதியாகவும் பிரச்சினைகள் தோற்றப்பாட்டில மாறுபட்டதாக இருப்பினும் ஒரே அடிப்படைகளை கொண்டவை என்பதை மறுப்பதற்கில்லை. வர்க்கரீதியாகவும் இனரீதியாகவும் மிக அடக்கப்பட்ட மலையகத்தேசிய இனத்துப் பெண்கள் பால் நிலையிலும் அடக்கப்பட்டு வருவதே அப்பொது அடிப்படையாகும். எனவே அவர்கள் இருசாராரினதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும் ஒருமைப்பாடான அடிப்படை விடயங்கள் இருக்கின்றன. தொழில் சார்ந்த விடயங்கள் இருக்கின்றன. தொழில் சார்ந்த விடயங்கள் தவிர்ந்த ஏனைய பெண்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகளை ஆண்களையும் சுமக்க வைப்பது என்றும் கூறும் பெண்ணியக் கருத்துக்கள் எனக் கூறி அவற்றை நிலைநாட்டுவதன் மூலம் விடுதலை கிடைக்கப்ப போவதில்லை. இச்சிந்தனை பெண்ணடக்கு முறைக்கான சமூக 'அடிப்படைகளை கணக்கில் எடுக்காத தூய பெண்ணியச் சிந்தனையே ஆகும்.



பெண்கள் சமூக ஆட்சியதிகார நிறுவனங்களால் அடக்கப்படுகின்றனர். மறுபுறம் அவர்களுடன் நெருங்கி வாழ்கின்ற ஆண்களின் ஆணாதிக்கத்தினாலும் அதற்கு அடிபணிந்து போகும் பெண்களின் சிந்தனையினாலும் பெண்கள் அடக்கப்படுகின்றனர். இவை எவ்வாறு மலையகத் தமிழ் பெண்களை ஆகிக்கம் செய்கின்றன என்பதன் பன்முகத்தன்மையை விளங்கிக் கொண்டு அவற்றிலிருந்து விடுதலை பெறவேண்டிய மார்க்கத்தையும் வகுத்துக் கொள்ள வேண்டும். வர்க்கரீதியாகச் சுரண்டப்படுகின்ற பெண் தோட்டத்தொழிலாளர்களும் அடக்கப்படுகின்ற ஏனைய மலையகப் பெண்களும் அடக்கப்படுகின்ற மலையகப் பெண்கள் என்ற பொது அடையாளத்துடன் ஐக்கியயப்பட முடியும். ஐக்கியப்படுவதன் மூலம் பொதுப்படையான அம்சங்களை அடையாளம் கண்டு அவர்களின் பெண்ணடிமை விலங்குகளை உடைத்தெறிய முடியும். பெண்ணடிமையினை ஸ்திரப்படுத்தி வளர்த்தெடுத்துள்ள நிலபிரப்புத்துவ முதலாளித்துவ சமூகத்தை தகர்த்தெறிந்து நீதியான சமத்துவமான சமூக அமைப்பொன்றை கட்டி வளர்க்க முடியும். இது இலகுவானதொன்றல்ல.

# மலையகத் தேசிய கூட்டணி எத்திசை நோக்கிச் செல்லும்

ம. அழகேசன்

மலையக தேசியக் கூட்டணி என்றொரு கூட்டணி ஏற்படுத்தப் பட்டள்ளது. இதில் இ.தொ.கா. செங்கொடிச்சங்கம் போன்றன தவிர ஏறக்குறைய ஏனைய தொழிற் சங்கங்கள் யாவும் ஐக்கியப் பட்டுள்ளன. சில அரசசார்பற்ற நிறுவனங்களும் அங்கம் வகிப்பதாக கூறப்படுகிறது. மலையக மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வென்றெடுப்பதில் மலையக அமைப்புகளிடைய சாத்தியமாக்கி யுள்ளது. இதனூடே பொது உடன்பாடு ஏற்படுமா என்பதும் பொதுத்தேவை நிறைவேற்றப்படுமா என்பதிலும் நம்பிக்கை வைக்க முடியுமா ?

இக்கூட்டணியிலுள்ள அதிக மான அமைப்புக்ள ஏதாவதொரு பிரதான முதலாளித்துவ பேரினவாத கட்சியுடன் நட்பையும் விசுவாசத்தையும் கொண்டுள்ளது. அதிகமான அமைப்புகள் ஐ.தே. கட்சியுடன் நெருங்கியே இருக்கின்றன. மலையகத்தமிழ் மக்களுடைய தேசிய அபிலாஷைகளுக்கான அவசியமே மலையக அமைப்புகளை இவ்வாறு உடன்பாட்டுடன் இயங்க வேண்டிய இடத்திற்கு தள்ளியிருக்கிறது. இவ்வாறான ஐக்கியம் இரண்டு முதளாலித்துவ பேரினவாத கட்சிகளுக்கும் அப்பால் மாற்றானதாக தனித்துவமானதான ஒரு சக்தியாக வளர்க்கப்படுமா அல்லது கூட்டணியில் விருப்பபு வெறுப்பிற்கேற்ப பயன்படுத்தப்பட்டபின்னர் சிதைக்கப் பட்டுவிடுமா ?

இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற ஒரு கூட்டணி 1998 மாகாணசபை தேர்தல் காலத்தில் அமைக்கப்பட்டது. பலவீனப்பட்டிருந்த இ.தொ.கா.வை நிமிர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஏனைய அமைப்புகள் மாகாணசபையில் பிரதி நிதித்துவத்தை ஏற்படுத்திக் கொள் வதற்காக அதில் சேர்ந்தன. இ.தொ.கா.வின் தேவை நிறை வேறியதாலும் ஏனைய அமைப்புகளின் எதிர்பார்ப்பு நிறைவேறாததாலும் அக்கூட்டணி சிதைக்கப்பட்டது. அவ்வமைப்பின் பெயரே அந்நியத்தன்மையை எடுத்துரைத் திருந்தது. அதற்கென ஒரு பொதுவான வேலைத்திட்டமோ கூட்டத் தலைமையோ இருக்கவில்லை.

அதனால் இனியும் மலையக தேசிய சக்திகளையும், ஜனநாயக சக்திகளையும், இடதுசாரிகளையும் ஐக்கியப்படுத்தி கூட்டணி ஒன்றை அமைத்து முன்னெடுப்பதற்கான தேவை இல்லாது போய்விட்டதென பொருள் கொள்ளலாகாது. புதிய ஜனநாயக கட்சியை பொறுத்தவரையில் தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் தனியொரு கட்சியினால் இலங்கையில் சமூக மாற்றத்தைப் படைப்பதற்கான . புரட்சியை முன்னெடுக்க முடியாது என்ற நிலைப் பாட்டை கொண்டுள்ளது. அத்தே வையை பூர்த்தி செய்ய நீண்ட பார்வையுடைய நீண்டகால வேலைத்ததிட்டத்தைக் கொண்ட புரட்சிகர சக்திகளின் கூட்டணி யொன்றின் அவசியத்தை உணருகிறது. அதற்கு முன்பதாக அல்லது அத்தேவையை பூர்த்தி செய்வதற்கான அம்முன்தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் சரியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. அம்முன்தேவைகளில் தந்திரோபாய வேலைத்திட்டத்தை கொண்ட தேசிய ஜனநாயக புரட்சி, புதிய ஜனநாயக புரட்சி, சோஷலிஸ புரட்சி என்பவை ஆகும்.

மலையகத் தமிழ் மக்களுடைய தேசிய அபிலாஷைகளை வென்றெடுக்க தந்திரோபாய ரீதியான தேசிய ஜனநாயக வேலைத்திட்டத்தின் கீழ் இணைக்கக்கூடிய சகல விதமான சக்திகளும் இணைக்கப்பட வேண்டும். மலையகத் தமிழ் மக்களில் ஆகப்பெரும் பான்மையானோர் தோட்டத் தொழிலாளர்கள். அங்கு வர்த்தகத்திலும், ஆசிரியர் போன்ற தொழில்களிலும் கணிசமானோர் ஈடுபட்டுள்ளனர். அச்சமூகம் வர்க்கரீதியாகவும் இனரீதியாகவும் அடக்கப்படுகின்றது. அதாவது தோட்டத் தொழிலாளர்களும் அவர்களைத்தவிர மலையகத்தமிழ் மக்களிடையே இருக்கின்ற சுரண்டலில் ஈடுபடாத (நிலப்பிரபுத்துவமல்லாத முதலாளித் துவமல்லாத) வர்க்கத்தினரும் ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட வேண்டியதன் அவசியத்தை யதார்த்தம் உணர்த்தி வருகிறது. தேசிய ஜனநாயக வேலைத்திட்டத்தில் அதற்கான இடமும் பயிற்சியும் உடனடியாகவே கிடைக்கிறது. அதற்கூடாக ஏனைய காலகட்டங்கள் நோக்கி நகர முடியும்.

எனவே ஆகக்குறைந்தது தேசியஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான வேலைத் திட்டத்தின் கீழ் மலையக தமிழ் தேசிய இனத்திலுள்ள பலதரப்பட்ட சக்திகளும் ஒன்றிணைக்கப்படல் அவசியம். முழு நாட்டிற்கும் உரிய தேசிய ஜனநாயக வேலைத்திட்டத்தை மலையகத் தமிழ் மக்களிடையே குறிப்பாக முன்னெடுக்கின்ற போதும் மலையகத் தமிழ் மக்களுடைய தேசிய, வர்க்க அபிலாஷைகளை முழு நாட்டிற் குமுரியதான வேலைத்திட்டத்துடன் இணைக்கும்போது மேற்கூறிய ஐக்கிய முன்னணி அவசியமாகிறது. இதனையே புதிய ஜனநாயக கட்சி வலியுறுத்துகிறது. ஆகக்குறைந்தது இதனை இலக்காக கொண்டாவது மலையக தேசிய கூட்டணி என்பது இயங்குமா ?

மலையகத் தேசியக் கூட்டணியின் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் அவற்றின் தொழிற்சங்க நலன், தேர்தல் தொகுதி நலன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதால் அவை முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் கதிரைகள் என்ற பதவிகளைப் பங்குபோட்டுக் கொள்வதையே அரசியல் வேலைத்திட்டமாக நம்புகின்றன. அதனூடாகவே மலையகத்தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் வளர்க்க முயற்சிக்கின்றனர். இதற்காக மலையகத்தமிழ் மக்களின் தேசிய உணர்வை அடிப்படை முதலீடாகக் கொள்ள முய்ற்சிக்கின்றனர். இவ்வாறான முயற்சிகளின் மூலம் எதிர்ப்பு கட்சிகளாக செயற்பட்ட நிலைமைக்கும் அப்பால் பெரிய கட்சிகளின் ஆதிக்க நிலைமைக்கு இரையாகிப் போகின்ற பாதையிலேயே செல்கின்றன. இத்தகைய கூட்டணிகள் மூலம் மலையக மக்களின் நலன்களைப் பாதுகாக்க முடியாது. பேரினவாத முதலாளித்துவ கட்சிகளின் தயவில் இருப்பை உறுதிசெய்ய முயற்சிப்பதற்குப் பதிலாக தனித்துவமானதும் சுதந்திரமானதுமான வழி முறைகளையே எத்தகைய கூட்டணிகளும் தேடவேண்டும்.

இவையெல்லாவற்றையும் கணக்கில் எடுப்போமானால் மலையகத் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான வேலைத்திட்டம் தனியமைப்புகளின் சுதந்திரத்துடன் கூடிய கூட்டுணர்வு, தனிக் கட்சியொன்றின் மேலாதிக்கமற்ற கூட்டுத்தலைமை குறுகிய தொழிற்சங்க தேர்தல் நலன் இல்லாத் பேரினவாதத்திடமும் முதலாளித்து வத்திடமும் மண்டியிடாத இலக்கும் மார்க்கமுமே பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கு அடிப்படைகளாகின்றன. மலையக மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட கூட்டணி ஒன்றிற்கு அவை மிகவும் அவசியமாகும். மலையகத் தேசியக் கூட்டணி எத்திசையில் செல்லும் என்பதற்கு சரியான விடையிறுக்க அதன் நடைமுறையில் இருந்து தான் ஆதாரங்களைத் தேட வேண்டும்.

●●●

படிப்பகம்

# வெகுஜனப் போராட்டம் நீதியானது !

அ. பூபதி

விடுதலைப் புலிகள் இயக்கம் மூன்றாவது தடவையாகத் தமது யுத்த நிறுத்தத் தொடர்ச்சியை நீடித்திருக்கிறார்கள். இது அவர்களது பொறுமையையும் நிதானத்தையும் மட்டுமன்றி அரசியல் அரங்கிற்குள் வந்தே தீர வேண்டிய யதார்த்தத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த யுத்த நிறுத்த நிலைப்பாட்டை பேரினவாத அரசாங்கமும் அதன் ஆயுதப்படைத் தளபதிகளும் நிராகரித்து வரும் நிலை மீண்டும் அறைந்து கூறப்படுகின்றது. அதே வேளை தொடர்ந்தும் போருக்கான ஆயுதங்கள் கொள்வனவு செய்யப் படுவதும் பயிற்சிகள் விரிவாக்கப் படுவதும் ஆளணி சேர்க்கப்படுவதும் மும்முரமாகப்பட்டுள்ளன. அதில் அடங்கி உள்ள பயங்கர ஆபத்தைப் பற்றி ஆட்சியல் இருப்போர் மறைத்து திசை திருப்பி வருகின்றனர். இதில் சிங்கள மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

இந்த விடயத்தில் புலிகள் இயக்கத்தை அழிக்க வேண்டும் என்ற கங்கணம் வெறுமனே ஒரு ஆயுத இயக்கத்தை இல்லாமல் செய்வது மட்டும் என்ற வரையறை கொண்ட குறிக்கோள் அல்ல. அதன் அடிப்படை இந் நாட்டில் தமிழ்த் தேசிய இனம் எக்காலத்திலும் தமது அடிப்படை சுயநிர்ணய உரிமையை கேட்கக் கூடாது. அதற்காகப் போராடக்கூடாது. அதுமட்டுமன்றி முஸ்லீம் மலையகத் தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தத்தமது அடிப்படைய உரிமைகளையும் அபிலாஷைகளையும் கேட்டால் என்ன பதில் தரப்படும் என்பதை இன்றைய யுத்தத்தின் மூலம் பேரினவாத ஒடுக்கு முறையாளர்கள் ஒரு முன்னெச் சரிக்கை அடையாளமாகவும் காட்டி வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியால் ஆரம்பிக்கப்பட்டு இன்றைய பொதுசன முன்னணி ஆட்சியால் மிகக் கொடூரமாக முன்னெடுக்கப்படும் யுத்தத்திற்கு பேரினவாதக் கட்சிகள் அமைப்புக்கள் தத்தமது நிலைகளில் இருந்து ஆதரவைக் கொடுத்து வருகினறார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்கு மீண்டும் அதிகாரத்திற்கு வந்து கொள்ளும் நோக்கமே அடிப்படையானதாகும். அதற்காக அவ்வப்போது ஏற்படும் நொந்து போகும் இடங்களில் அரசாங்கத்தை அடித்துக் கொள்கிறதே தவிர யு.என்.பி. தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குப் " பரிந்து பேசுவதாக யாரும் எடுத்து விட முடியாது. அவர்களது நிலையை தமிழர் தமது போராட்டப் பாதைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என நினைத்து செயல் பட்டால் அதை விட்ட முட்டாள்தனமும் அரசியல் பேதமையும் வேறு இருக்க முடியாது.

அதேவேளை சிஹல உறுமய போன்ற பேரினவாத வெறி கொண்ட அமைப்புகள் நேரடியாகவே யுத்தத்தைத் தொடருமாறு வற்புறுத்தி வருகின்றன. இந்நாட்டில் புலிகள் இயக்கத்தை அழிப்பதன் மூலம் தமிழ் மக்களையும் ஏனைய முஸ்லீம் மலையக மக்களையும் நிரந்தர அடிமைத் தனத்தில் வைத்திருக்க வேண்டும் என வற்புறுத்திவருகின்றன. ஜே.வி.பி பெயரளவில் யுத்தத்தை எதிர்ப்பது போன்று குரல் வைத்தாலும் இந் நாட்டில் இனப் பரச்சினை இல்லை என்று கூறுவதன் மூலம் பயங்கரவாதத்தை ஒழிக்கும் யுத்தத்திற்கு தனது "சோஷலிச இனவாதம்" என்பதன் ஊடாக எண்ணெய் வார்த்து வருகின்றது.

மேலும் இத்தகைய சக்திகள் நோர்வேயின் மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளர் முயற்சியை கடுமையாக எதிர்த்து வருவதன் அடிப்படையே யுத்தத்தை முன்னெடுக் குமாறு வற்புறுத்துவதேயாகும்.

இவர்களின் யுத்த வெறி முழக்கத்திற்குப் பின்னால் இந்தியாவின் கரங்கள் நன்கு செயற்பட்டு வருவதையும் காணமுடிகின்றது.

எண்பதுகளில் . சிங்களப் பேரினவாதிகள், கடும் போக்காளர்கள் மத்தியிலிருந்து இந்தியா கடும் எதிர்ப்பை பெற்றுத் கொண்டது. ஆனால் தொண்ணூறுகளில் இந்தியா மிகவும் நுட்பமான வழிகளில் பேரினவாத அமைப்புகளில் தனது நிலையை வலுப்படுத்தி நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொண்டது அன்று விஸ்தரிப்புவாதிகள், பிராந்திய மேலாதிக்கவாதிகள் என்று தூற்றப்பட்டு இந்தியப் பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறு அறைகூவல் விடுத்து செயற்பாடுகளிலும் இறங்கியவர்கள் இன்று இந்தியா பற்றி மறந்தும் பெயர் உச்சரிக்க மறுத்து நிற்கும் மர்மத்தின் பின்னால்தான் இந்தியாவின் காய் நகர்த்தல் வெளிப்படுகின்றது.

மறுபுறத்திலே தமிழர்தரப் பிலிருந்து அரசாங்கத்தின் யுத்த முன்னெடுப்பிற்கு ஈ.பி.டி.பி. கட்சி நேரடியான பங்களிப்பை வழங்கி வருவதுடன் சுயநிர்ணய உரிமைக்கு தற்போது தயாரித்த தமது புதிய அகராதியில் இருந்து விளக்கமும் அளித்து வருகின்றது. இத்தகைய அடிப்பணிந்த நிலைப்பாட்டை ஒரு வகையில் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் தமிழர் கூட்டணி போன்ற தமிழர் கட்சிகள் பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் என்பது போன்று அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் காட்டி வருகின்றமை பரிதாபத்திற்குரிய ஒன்றாகும். ஏனைய தமிழர் கட்சிகள் இயக்கங்கள் ஒரு காலை அரசாங்கத்தின் பக்கத்திலும் மறுகாலை இந்தியவின் பக்கத்திலும் வைத்து அதே வேளை தமிழர் அபிலாஷைக்கு நிற்பதாகவும் காட்டி வருகின்றனர். பத்துக் கட்சிகளின் செயற் பாட்டை உற்று நோக்கினால் அவற்றின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளலாம்.

இத் தமிழ்க் கட்சிகள் யுத்த நிறுத்தம் வேண்டும் பேச்சுவார்த்தை வேண்டும் அதுவும் புலிகளுடன் பேச




வேண்டும் என்று உரத்துக் கூறிக் கொண்டு எல்லாத் தூதுவரால யங்களுக்கும் படியேறி இறங்கி வருகின்றார்கள். ஆனால் புலிகள் இயக்கமும் அரசாங்கமும் மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளராக ஏற்றுக் கொண்ட நோர்வேயின் முன்முயற்சி பற்றி உச்சரிக்க மறுக்கிறார்கள். அப்படியாயின் அதன் இரகசியம் என்ன ? நோர்வேயின் நிலையை வற்புறுத்தினால் இந்திய உபசரிப்பாளர்கள் இந்த தமிழ்க் கட்சிகளைக் கைவிட்டு விடுவார்கள் என்ற பயமேயாகும். பயம் மட்டுமன்றி தமிழ் அரசியல் மேட்டுக் குடிச் சிந்தனை வழிவந்த இந்திய எசமானிய விசுவாசத்தின் தொடர்ச்சிதான் இதன் அடிப்படையாகும். இந்த அடிநிலை நோக்கும் போக்கும் தமிழர் தலைமைகளிடமிருந்து மாறாதவரை இலங்கைத் தமிழர்கள் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பது இலகுவான ஒன்றாக அமைய மாட்டாது.

இந்நிலையிலே தான் வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் மாணவர்கள் மக்கள் இணைந்த 'பொங்கு தமிழ் எழுச்சி' என்னும் வெகுஜனப் போராட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழக மாணவர்கள் தொடக்கியுள்ள வெகுஜனப் போராட்டம் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அபிலாஷைகளைப் பிரதிபலித்து நிற்கின்றது. ஆதனாலேயே மக்கள் மத்தியில் பெரும் ஆதரவைப் பெற்றவருகின்றது.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை வற்புறுத்துவதே மேற்படி வெகுஜனப் போராட்டத்தின் அடிப் படையாகும். யுத்தத்தின் ஊடாகவும் யுத்தத்தின் பாதிப்புக்கு ஆளாகாமலும் சொத்து சுகம் தேடி நிற்கும் ஒரு சிறு கூட்டத் தினரைத் தவிர அனைத்துத் தமிழ் மக்களுக்கும் இம் மூன்று அம்சங்களும் அவசியத் தேவையா கின்றன. கடந்த இரண்டு தசாப்தங்களிலான போராட்டங்களும் அதனை எதிர்கொள்ள அரசாங்கம் முன்னெடுத்த கொடிய யுத்தமும் மக்களை அடிநிலை வாழ்வுக்குள் அமுக்கி விட்டுள்ளது. அவர்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளும் அபிலாஷைகளும் மறுக்கப்பட்டு ரவைகளும் குண்டுகளும் சிறைச் சாலைகளுமே பதில்களாக வழங்கப்பட்டு வந்துள்ளன. பொருளா தாரம், சொந்த இருப்பிடம், உழைப்பு, வாழ்வு மட்டுமன்றி இருப்புமே குலைக்கப் பட்டுள்ளன. கேள்விகள் நிறைந்த எதிர்காலத்தையே மக்கள் கண்முன் காண்கின்றனர்.

உயிர்களைப் பறி கொடுத்ததன் விளைவாக ஊனமுற்று அரைகுறை வாழ்வுக்குள் தள்ளப்பட்டதன் காரணமாக ஒட்டு மொத்தமான தமிழ் மக்கள் எதனை எதிர்பார்க்கின்றனர். மக்களின் முன்னால் இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று பாதிப்புகளுக்கான நிவாரணம் புனரமைப்பு புனர்வாழ்வு சார்ந்த சலுகைகள். இரண்டாவது தமது பல்லாண்டு கால வாழ்வின் அடிப்படைகளை உறுதிப்படுத்தி உத்தரவாதப்படுத்ளதிக் கொள்ளும் தேசிய இன இருப்புக்கான உரிமைக் கோரிக்கைகள். சுருங்கக் கூறின் உடனடிச் சலுகைகளா ? அல்லது அடிப்படை உரிமைகளா ? என்பதே மக்கள் முன்னால் உள்ள கேள்வியும் தெரிவாகவும் காணப்படுகின்றது.

நிவாரணம், புனரமைப்பு உதவி, புனர்வாழ்வு நடவடிக்கை, வேலை வாய்ப்பு, மற்றும் சலுகைகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டியவைகளாகும். ஏனெனில் யுத்தத்தின் மூலம் அவற்றைக் குலைத்து அழிவுக்குள்ளாக்கியவர்கள் அதற்குரிய நிவாரணத்தை வழங்கியே தீரவேண்டும். அரசாங்கத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சகல வரிகளையும் மக்கள் செலுத்து கிறார்கள். வடக்கு-கிழக்கு மக்கள் இலங்கையின் பிரஜைகளாகவே இருந்து வருகிறார்கள். எனவே அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணம் முதல் ஏனையவை யாவும் வெறும் பிச்சையாகக் கொள்ளப்பட முடியாதவைகளாகும். அல்லது அரசாங்கம், அதிகாரிகள், சில அரசியல் கட்சிகள் என்பனவற்றின் தயவால் கிடைக்கப்பபெறும் மனிதாபிமான உதவியாகக் கொள்ளப்பட முடியாதவைகளாகும். இத்தகைய சலுகைகளைக் பெறபடவேண்டிய உரிமைகளை நிராகரிக்க முடியாது. எனவே நிவாரணச் சலுகைகளுக்கு அப்பால் வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளே முதன்மை பெறுகின்றன. அவற்றை வென்றெடுத்து நிலை நிறுத்துவதன் மூலமே தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பு உத்தரவாதப்படுத்தப்படும். அதனை வலியுறுத்துவதாகவே "பொங்கு தமிழ் எழுச்சி" என்னும் பெயரிலான வெகுஜனப் போராட்டம் வடக்கு கிழக்கில் இடம் பெற்று வருகின்றது. இது மக்களின்

*11ம் பக்கம் பார்க்க*

# சிங்கள மக்கள் மத்தியில் உரத்த சிந்தனை வேண்டும்

பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவான வாழ்க்கைச் சுமையும் மக்கள் அனைவரையும் கடுமையாகப் பாதித்து நிற்கின்றது. குறிப்பாக உழைக்கும் மக்கள் என்றுமில்லாத தவாறு பாதிக்கப்பட்டு வருகின்றனர். உலகில் இரண்டாவது இடத்தை தற்கொலையில் வகித்து வரும் இலங்கை விரைவில் முதலாம் இடத்தை அடைந்து விடும் என்பதில் ஐயமில்லை. அந்தளவுக்கு பொருளாதாரச் சீர்குலைவும் வறுமையும் வளர்ந்து வருகின்றது. இந்நிலைக்கு யுத்தம் ஒரு பிரதான காரணியாக இருந்து வந்துள்ளது. தொடர்ந்தும் யுத்தம் நீடிக்கப்படும் என்றே ஆளும் தரப்பில் கூறப்பட்டு நவீன ஆயுதங்களும் யுத்த தளபாடங்களும் இறக்கிக் குவிக்கப் படுகின்றது. யுத்தக் கப்பல்கள் விமானங்கள், உலங்குவானூர்திகள் போன்றன வாங்கப்பட்டு வருகின்றன. அண்மையில் இந்தியா, பாகிஸ்தான் உட்பட ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் ஆயுதங்கள் இறக்கப்பட்டு வருகின்றன.

இவ் ஆயுதங்கள் அனைத்தும் வடக்கு கிழக்கு யுத்த முனையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தொழிப்பதற்கென்றே கூறப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகளுக்குப் பதிலாக நவீன ஆயுதங்கள் மூலம் ரவைகளும், குண்டுகளுமே கொடுக்கப்பட்டு வருகின்றன. புலிகளை அழிப்பதாகக் கூறிக் கொண்டு தமிழ் மககள் கொன்று குவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான யுதத்தைத் தொடர்ந்து நடாத்தி வரும் சக்திகள் யார்? சிங்கள ஆளும் வர்க்க பேரினவாத சக்திகளே இவர்கள். சிங்கள மக்கள் மத்தியில் உள்ள நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக் குடியின் பிரதி நிதிகளான ஆளும் வர்க்க சக்திகளே அன்று கொலனிய சக்திகளுக்கு சேவகம் செய்து தமது சொத்து சுகங்களை பாதுகாத்துக் கொண்டனர். அந்தப் பரம்பரையினர் தான் இன்றும் ஆட்சியின் கடிவாளத்தைக் கையில் பிடித்து நிற்கின்றனர்.

இந்தலைவர்கள் பௌத்த பேரினவாதம் பேசி நின்றாலும் தமது வர்க்கத்திற்கு எதிராகச்



சிங்கள சாதாரண மக்கள் திரும்பினால் சும்மா இருக்க மாட்டார்கள் என்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ளல் வேண்டும். இன்று தமிழ் மக்களுக்கு எதிராக யுத்த முனையில் பயன்படுத்தப்படும் அத்தனை ஆயுதங்களும் அரசாங்கத்தையும் அதன் அட்டூழியங்களையும் எதிர்த்துக் கிளம்பும் சிங்கள மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. 1971ல், 88ல் சிங்கள மக்கள் மத்தியில் இடம்பெற்ற பல்லாயிரக் கணக்கான உயிர் பறிப்புகள் ஆழ்ந்த பட்டறிவும் படிப்பினையும் என்பதைச் சிங்கள மக்கள் மறந்து விடமுடியாது.

அன்று சிங்கள இளைஞர் யுவதிகள் மக்கள் என்போரை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த அரசாங்கமும் ஆயுதப்படைகளும் வேறு எவரும் அல்ல. இன்றும் கூட விலை உயர்வுக்கு எதிராகவும், சம்பள உயர்வு கோரியும் மக்கள் வீதியல் இறங்கினால் அவர்களைச் சுற்றி படை அணிகள் திரண்டு நிற்பதையே காணமுடிகின்றது. இவை எதனைக் காட்டுகின்றன. நாளை நடக்கப் போவதன் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்றே சுட்டிக்காட்டப் படுகிறது.

இன்று யுத்தவெறி கக்கும் ஆட்சியின் தலைவர்களும் அதற்கு பக்கபலம் சேர்த்து நிற்கும் பேரினவாத அமைப்புகளின் வழிகாட்டிகளும் யுத்த முனைக்கு தமது பிள்ளைகளை அனுப்பத் தயாராக இல்லை. அவர்கள் அனைவரும் குளிரூட்டப்பட்ட மாளிகையில் இருந்தவாறே சகல சுகபோகங்களையும் அனுபவித்துக் கொள்கின்றனர். யுத்தத்தின் மூலம் வெவ்வேறு வழிகளில் பணத்தையும் சொத்துக்களையும் தேடிக் கொள்கின்றனர்.

அதேவேளை சாதாரண சிங்கள மக்களின் பிள்ளைகளை யுத்த முனைக்குச் செல்லுமாறு கூறி நாட்டுப்பற்றுப் பற்றி உபதேசிக்கின்றனர். தமது வறுமை வேலையின்மை, பொருளாதார நெருக்கடி போன்றவற்றின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ள சிங்கள மக்கள் தமது பிள்ளைகளை இராணுவத்திற்கு அனுப்பி விட்டு நாளாந்தம் வயிற்றில் நெருப்பைக் கட்டியவர்கள் போன்று வாழ்ந்து வரும் அவலத்தையே காண முடியகின்றது.

எனவே பௌத்த சிங்களத்தின் பேரால் நாட்டுப் பற்று என்று பேசுவதால் தமது சொத்து சுகங்களை விரிவுபடுத்திப் பாதுகாத்து வரும் சிங்கள நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி ஆளும் வர்க்க சக்திகளை சாதாரண சிங்கள மக்கள் வர்க்க ரீதியில் அடையாளம் காணவேண்டும். அதற்கான உரத்த சிந்தனைகள் அவர்கள் மத்தியில் எழ வேண்டும். அப்பொழுதுதான் ஏனைய தேசிய இனங்களை அடக்கும் எந்தவொரு தேசிய இனமும் சுதந்திரமாக இருக்க முடியாது என்பதை உணரமுடியும்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# கழுத்தில் விழுந்த மாலையை கழட்ட முடியவில்லை !

## அண்ணன் காட்டிய வழி (6)

1956ம் ஆண்டு தமிழரசுக்கட்சி பெற்ற பெரும் வெற்றியின் விளைவாக அதுவே எதிர்க்கட்சிகளிடையே பெரிய கட்சியாகவும் வந்தது. எனவே பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியைத் தமிழரசுக் கட்சித் தலைவரான செல்வநாயகமோ பாராளுமன்றக் கட்சிக் குழுவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட எவருமோ ஏற்க வழியிருந்தது. ஆனாலும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரான என். எம். பெரேரா எதிர்க்கட்சித் தலைவராக வரத் தமிழரசுக்கட்சி இடமளித்தது. எட்டு ஆசனங்களையே வென்ற யூ.என்.பிக்கு அந்த வாய்ப்பு இருக்கவில்லை. தமிழரசுக்கட்சியின் இந்த முடிவுக்கு அன்று தந்திரோபாயமான காரணம் ஏதும் இருந்திருக்கலாம். ஆனாலும், அன்று எதிர்க்கட்சித் தலைமையை ஏற்றிருந்தாலும், அது பாரதூரமான பாதக விளைவுகளை ஏற்படுத்தியிருக்குமோ என்பது ஐயமே.

இனவாத அரசியல் முதிர்ச்சி பெற்ற ஒரு அரசியற் சூழலில் 1977ம் ஆண்டு யூ.என்.பி. பெற்ற அமோக வெற்றி இலங்கை வரலாறு கண்டிராத வெற்றி. சிங்கள மக்களிடையே ஒரே ஒரு எதிர்க்கட்சியாக ஸ்ரீ ல. சு. கட்சி மட்டுமே பாராளுமன்றத்தில் எட்டே ஆசனங்களை வென்றது. பாராளுமன்ற இடதுசாரிகள் ஒரு தொகுதியிலும் இரண்டாம் தானத்தைக் கூட எட்ட முடியவில்லை. தமிழரசுக் கட்சியின் வாரிசான தமிழர் விடுதலைக் கூட்டணியே பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக வந்தது. ஆனால் இப்போது இந்தக் கூட்டணி பழைய தமிழரசுக் கட்சி போல ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சமஷ்டி கேட்ட கட்சியல்ல.

சாத்வீகமாகப் போராடித் தமிழீழத் தனி நாடு பெற்றுத் தருவதாக வாக்களித்துத் தேர்தலில் வென்ற கட்சி. பிரிவினைக்காகப் போராடும் ஒரு கட்சி தான் பிரிந்து செல்ல விரும்பும் ஒரு நாட்டின் பாராளுமன்றத்தில் ஏன் ஒரு முக்கியமான பொறுப்பை எடுக்க வேண்டும் ?.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியை அமிர்தலிங்கம் ஏற்றது தமிழீழக் கோரிக்கையை உலக அரங்கில் எடுத்துரைக்க அந்தப் பதவியைப் பாவிப்பதற்காகவா ? அதற்கான ஆதாரங்கள் தேர்தலுக்கு முன்பும் இருக்கவில்லை. பின்பும் தெரியவில்லை. 1977ம் ஆண்டின் தேர்தல் பற்றிய சில சந்தேகங்கள் 1983 அளவில் தொண்டமான் யூ.என்பி. த.வி.கூ. இ.தொ.கா. உடன்பாடு ஒன்று இருந்தது பற்றிய குட்டை உடைக்கும் வரை நிரூபணமாகவில்லை. 1977ம் ஆண்டு. தென்னிலங்கையில், குறிப்பாகக் கொழும்பில் வாழும் தமிழர்களை யூ.என்.பிக்கு வாக்களிக்கும்படி தூண்டியதில் த.வி. கூட்டணியின் நோக்கம் என்ன? .......1974ல் உருவான தமிழர் ஐக்கிய முன்னணியில் யூ.என்.பி பிரமுகர் தேவநாயகம் பங்கு பற்றியது, தமிழரசு யூ. என். பி, ஐக்கிய முன்னணி ஒன்று 1968ல் தமிழரசுக்கட்சி யூ.என்.பி. அரசிலிருந்து விலகியபோது முறியவில்லை என்பதையே காட்டியது. யூ. என். பியை நம்பி ஏமாறும் நாடகத்தையும் தமிழரசுக்கட்சி திரும்பத்திரும்ப நிகழ்த்திக் காட்டியது. 1977ல் யூ.என்.பி பெற்ற வெற்றி ஜே. ஆர். ஜயவர்தன கூட எதிர்பாராத ஒன்று. இடதுசாரிகள் ஸ்ரீ ல. சு. கட்சியிலிருந்து விலகிய பின்பு, தங்களுக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாக வேண்டும் என்ற நோக்கில் ஸ்ரீ ல. சு. கட்சிக்கு எதிராகவே தமது தேர்தல் பிரசாரத்தை மும்முரப்படுத்தினர். இதுனுடன் சிறுபான்மைத் தேசிய இனத்தவரது ஆதரவு யூ.என்.பிக்குக் கிடைத்ததால் யூ.என்.பி. பெற்ற வெற்றி இலங்கையின் வரலாற்றையே மாற்றும் ஒரு வெற்றியாகியது.

தமிழர்கூட்டணி வழங்கிய ஆதரவுக்குப் பிரதிஉபகாரமாக யூ.என்.பி. எதை வாக்களித்தது என்று தமிழர் கூட்டணி சொல்லத் துணியவில்லை. யூ. என்.பியுடன் இன்னொரு கூட்டாட்சியில் சேரலாம் என்ற கனவு தமிழர் கூட்டணித் தலைமைக்கு இருந்ததோ தெரியாது. ஆனால் யூஎன்.பி. பெற்ற ஆறில் ஐந்து பெரும்பான்மை வலிமைக்குப் பிறகு அப்படி ஒரு கனவு காற்றிலே கரைந்து விட்டிருக்கும். யூ.என்.பி. சார்பாக ஜே.ஆர். ஜயவர்தன வாக்களித் தவற்றுள் தமிழ் ஈழம் ஒன்றல்ல என்று மட்டும் உறுதியாக நம்பலாம். தமிழ் இளைஞர்களின் எழுச்சிக்குக் காரணமாக இருந்த தரப்படுத்தலில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுப் பல்கலைக் கழக அனுமதியில் தமிழ் மாணவர்களின் விகிதாராசம் சிறிது கூடுவதற்கு வசதி செய்யப்பட்டது. ஆனாலும் யாழ் மாவட்ட மாணவர்கள் மற்ற மாவட்ட மாணவர்களை விட அதிகம் புள்ளிகளை எடுத்தாலே அனுமதி கிடைக்கும் என்ற நிலை தொடர்ந்தது.

1974ம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம் பற்றி விசாரணை நடத்தி அதன்பின்பு வடக்கில் மெல்லமெல்ல ஓங்கி வந்த பொலிஸ் அத்து மீறல்களை



நிறுத்துவதாக ஜே. ஆர் ஜயவர்தன உறுதியளித்திருக்கமாட்டார். ஏனென்றால் 1977ம் ஆண்டு தேர்தல் முடிந்து ஒரு மாதத்திற்குள்ளாகவே யாழ்ப்பாணப் பொலிசார் சம்பந்தப்பட்ட ஒரு மோதல் நாடு தழுவிய வன்முறையாகியிருக்குமா ?

தமிழீழக் கோரிக்கையின் அடிப்படையில் அமிர்தலிங்கம் உசுப்பிவிட்ட இளைஞர்களைச் சமாளிப்பதற்கு வசதியாக பிரதேச சுயாட்சி மாதிரி எதையாவது வாக்களித்திருப்பாரா ? வாக்களித்திருக்கலாம். ஆனால் அவர் வாக்களித்தது மகாபாரத யுத்தத்தில் அசுவத்தாமன் இறந்து விட்டான் என்று துரோணரை நம்ப வைக்கத் தருமர் சொன்ன விதமான உண்மை தான். தருமர் சொன்ன அசுவத்தாமன் ஒரு யானை. துரோணர் நினைத்த அசுவத்தாமன் அவருடைய மகன். இந்தமாதிரி அமிர்தலிங்கம் நினைத்த மாவட்ட சபையும் ஜே. ஆர். ஜயவர்தன நினைத்த மாவட்ட சபையும் வேறு என்று அறிய த.வி. கூட்டணிக்கு இன்னும் நான்கு வருடங்கள் எடுத்தன.

1977 வன்முறையின் பின்பு த.வி. கூட்டணி தன் தமிழீழப் பேச்சைத் தணித்துக் கொள்ளவில்லை. ஜே. ஆர் ஜயவர்த்தனவின் தமிழர் விரோதப் போர்ப் பிரகடனத்தின் பின்பும் த. வி. கூட்டணிக்குள் யூ.என்.பி பற்றிய மயக்கம் போகவில்லை என்பதுதான் உண்மை.

அமிர்தலிங்கம் தலைமைக்கு இருந்த ஒரே ஒரு தடுமாற்றம் தனித் தமிழீழமே தமது நோக்கு என்று நம்புகிற ஒரு பொதுசன அபிப்பிராயத்தையும் அதை வலியுறுத்தி நினைவுட்டுகிற ஒரு இளைஞர் குழுவையும் உருவாக்கிய பின்பு எப்படி இந்த இக்கட்டிலிருந்து நழுவுவது என்பதுதான். குறைந்தது வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டியையாவது பெற வேண்டும்

11ம் பக்கம் பார்க்க

## பகிஷ்கரிப்பின் அரசியல் - 3

# அரசியல் போராட்டமாக பகிஷ்கரிப்பு

**இமயவரம்பன்**

முதலாளிய ஜனநாயக அரசின் சர்வாதிகாரத் தன்மை தன்னைப் பல வகைகளில் வெளிப்படுத்திக் கொள்ளலாம். முதலாளிய சனநாயகம் என்கிற முகத்திரை இன்று விழுகிற நிலையிலும், அரசிற்கு முன் பல வேறு தெரிவுகள் உள்ளன. ஒன்று ஜனநாயகத் தேர்தல் என்ற பேரில் தேர்தலில் அரச வன்முறை, குண்டர்களின் வன்முறை, பலவாறான மிரட்டல்கள், ஆள் மாறாட்டம், வாக்கு மோசடி போன்ற பலவற்றையும் அரச இயந்திரத்தின் அனுசரணையுடன் நடத்துவது இலங்கை அரசியல் இருபது வருடங்கட்கு மேலாகக் காணப்பட்ட ஒன்று. மற்றது உண்மையான பாராளுமன்ற எதிர்க்கட்சி ஒன்று இருந்தால் அதைச் செயற்பட முடியாமல் தடுப்பது. அக் கட்சிக்குள் பிளவு ஒன்றைக் கற்பித்துத் தனக்கு வசதியான பிரிவை அதிகாரபூர்வமான கட்சியாக அங்கீகாரம் பெறச் செய்வது இலங்கையிலும் பயன்படுத்தப்பட்ட ஒரு உபாயம். வெகுசனச் செல்வாக்குள்ள மாற்றுக் கட்சித் தலைவரைத் தேர்தலில் போட்டியிடவோ பங்குபற்றவோ இயலாமற் செய்வதும் இலங்கையில் நடந்துள்ளது. 1980ல் திருமதி பண்டார நாயகவின் குடியியில் உரிமைகள் பறிக்கப் பட்டதும் 1989ல் விஜய குமாரணதுங்க கொலை செய்யப்பட்டதும் பற்றி நாம் இன்னும் மறக்க வில்லை. தேர்தலில் வாக்களிப்பு முறையை ஆளுங்கட்சிக்கு வசதியாக மாற்றுவதும் பாராளுமன்றத்தில் நியமன ஆசனங்கள் மூலம் ராணுவமும் அதிகார வர்க்க நலன்களும் தங்களுக்கான வலிமையை உறுதிப்படுத்துவதை அண்மையில் இந்தோனீஸியாவின் "சனநாயக" மாற்றத்தின் பின்பு கண்டோம். இவ்வா, அதிகார வர்க்கம் பாராளுமன்றத்தின் மூலம் தனது முதலாளிய 'ஜனநாயகம்' இந்தவித எல்லைகட்குட்பட்டு வென்றாலும் தோற்றாலும் அதிகார வர்க்கம் தோற்றகாது. எனவே, மக்கள் வெல்வதானால் அவர்கள் ஒரு மாற்று வழியைத் தேட வேண்டும். பாராளுமன்ற அரசியலின் நெருக்கடியானது தேர்தல் மோசடிகள், பாராளுமன்ற அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற வடிவங்களை எடுக்கும்போது, பாராளுமன்றத் தேர்தல் பகிஷ்கரிப்பு ஒரு போராட்ட வடிவமாக இடமுண்டு.

அரசியல் வலிமை பறிக்கப் படும் அபாயம் ஏற்படும் போது சனநாயக முறையிலேயே பல தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அவற்றால் இயலாது போனால் ஆட்சி மாற்றம் உண்மையான அதிகார மாற்றமாகாதபடி தன் அடுத்த நடவடிக்கைகளை எடுக்கிறது. இங்கே எதிர்க்கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் அதிகார வர்க்க நலன்களையே பேணுமாறு அது நிர்ப்பந்திக்கப்படுகிறது. இலங்கையில் கடைசியாக நடந்த ஆட்சி மாற்றம் இதற்கு நல்ல உதாரணமாகும். இந்தியாவில் மூன்று ஆண்டுகட்கு முன் கவிழ்க்கப்பட்ட ஐக்கிய முன்னணியாலும் அதற்கு முந்திய அரசாங்கத்தை விட அதிகம் வித்தியாசமாக நடந்து கொள்ள இயலாது போனது.

முற்போக்குச் சக்திகள் தேர்தல்கள் மூலம் சாதிக்கக் கூடியன அற்ப மாறுதல்களே. ஆயினும் பல வேளைகளில், அவற்றைக் கூட அதிகார வர்க்கம் ஏற்கத் தயாராக இல்லை. 'ஜனநாயக வழியில்' இயலாதபோது, இராணுவவழியில் ஆட்சிக் கவிழ்ப்பு நடக்கிறது. எனவே பாராளுமன்றத் தேர்தலில் மக்களுக்கு நம்பிக்கை உள்ளளவும், அந்த மாற்றுவழியை நாடுவதில் பாராளுமன்றத் தேர்தலுக்கும் ஒரு முக்கிய பங்கு உண்டு என்று முன்பு கண்டோம். பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்குகிற நிலையிற் கூடத் தேர்தலில் பங்குபற்றுகிற தேவை புரட்சிகரக் கட்சிக்கு இருக்கலாம். எனெனில் பகிரங்கமான அரசியல் மூலம் மக்களை அனுகுவதற்குள்ள சட்டரீதியான ஒரு வழி தேவையான அளவில் பாராளுனம்றத் தேர்தலில் பங்குபற்றுவது பயனுள்ளதாகவே இருக்கும்.

> **தனியே தேர்தல் பகிஷ்கரிப்பின் மூலம் சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர முடியாது. தேர்தல் பகிஷ்கரிப்பு ஒரு எதிர்ப்புக்குரலாக வெற்றிபெறுகிறது. ஒரு அரசியல் பிரகடனமாக வெற்றி பெறுகிறது. மக்கள் பாராளுமன்ற அரசியல் மீது நம்பிக்கை இழந்து விட்டனர் என்பது மட்டுமன்றி முற்றாக அதை நிராகரிக்கவும் ஆயத்தமாகி விட்டனர் என்று தெரிவிக்கிறது. ஆனால் அதுவே தேர்தல் முறைக்கு ஒரு மாற்றல்ல. அது சமுதாய மாற்றத்திற்கான பாதையுமல்ல.**

ஆயுதமேந்திய மக்கள் விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்று வரும் நிலையில் பாராளுமன்ற அரசியலின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைகிறது. அது உடனடியாக நிகழாத சூழ்நிலையில்,

தேர்தல் பகிஷ்கரிப்புக்குச் செய்யப்படவேண்டிய பொதுசன அரசியல் வேலை, ஒரு தேர்தலுக்குச் செய்யவேண்டிய அரசியல் வேலையை விடக் குறைவானதல்ல. குறிப்பிட்ட ஒரு அரசியற் கட்சிமீது மக்களுக்கு உள்ள பகைமையைக் காட்ட இன்னொரு அரசியற் கட்சிக்கு வாக்களிக்கிற பழக்கத்தை எளிதாக மாற்றிவிட முடியாது. யாருக்காவது வாக்களிக்காவிட்டால் தமது வாக்குரிமை விரயமாகிறது என்று பலர் எண்ணுகிறார்கள். தமது நிலைப்பாட்டை அடையாளப் படுத்த இயலாத எவருக்கு அளிக்கும் வாக்கு அதைவிடப் பெரிய விரயம் என்பதை மக்களுக்கு விளக்க வேண்டியுள்ளது. வாக்களிப்பது என்பது ஒரு அரசியற் கூற்று. அது வெறுமனே ஒரு தெரிவுக்கும் அதிகமான அரசியற் கூற்றாகலாம். அதனாலயே, வாக்களிக்காமல் விடுவது, அதே அளவு அல்லது அதிலும் வலிமையான அரசியற் கூற்றாகலாம். இதைப் பல வேறு முறைகளில் நடைமுறைப்படுத்தலாம். வாக்குச் சீட்டை வேண்டுமென்றே எவ்வாறேனும் பழுதாக்குவது ஒன்று. வெறும் தாளைப் பெட்டியில் இடுவது இன்னொன்று. ஆனால் இங்கே வேறு யாரும் அதைப் பாவிக்க இடமுண்டு. வாக்குச் சீட்டைக் கிழித்துப் போடுவது எப்போதும் இயலுமானதல்ல. தேர்தலில் பங்குபற்றாமலே விடுவது அவற்றையெல்லாம் விட வலியது என்றாலும், கள்ளவாக்குக்களாலேயே பெட்டிகளை நிரப்பும் ஒரு 'சனநாயக' பாரம்பரியத்தில் வாக்குச் சீட்டுகளைப் பழுதாக்குவது சில சமயம் கூடப் பொருத்தமாகத் தெரியலாம். மிகப் பெரும் அளவில் தேர்தல் பகிஷ்கரிப்பு நடந்தால், கள்ள வாக்குக்களின் மூலம் பெட்டிகளை நிரப்பினாலும், அது அரசுக்கும் பாராளுமன்ற அரசியலுக்கும்முகத்தில் அறைந்தது போலவே ஆகும். எனவே தேர்தல் நிராகரிப்பு என்பது வெகுசனங்களை அரசியல் அடிப்படையில் அணிதிரட்டித் திட்டமிட்டமுறையில் நடைமுறைப் படுத்த வேண்டிய காரியமாகிது. முழு நாட்டிலும் ஒரே விதமாகச் செய்யப்பாமலும் கூட பாராளுமன்ற அரசியல் மீதான நம்பிக்கையீனத்தை மக்களால் தெளிவாக வெளிப்படுத்த மடியும்.

தேர்தல் பகிஷ்கரிப்புப் பிரசாரம் சரிவரச் செய்யப்படாத போதும் மக்கள் அதற்கு முழுமையாக ஆயத்தமில்லாத போதும், தேர்தல் பகிஷ்கரிப்பு முயற்சி தோல்வியடையலாம். அப்போது, எதிர்பார்த்தற்கு மாறான விளைவே ஏற்படலாம். எனவே மாக்ஸிய லெனினியவாதிகள் தேர்தலில் கையாளுகிற சில தந்திரோபாயங்களை தேர்தல் பகிஷ்கரிப்பிலும் கையாள முடியும். தெரிந்தெடுத்த சில தொகுதிகளிலோ மாவட்டங்களிலோ பகிஷ்கரிப்பை மேற்கொள்வது எளிதாக இயலுமான ஒன்று.

தேர்தல் பகிஷ்கரிப்பை வன்முறை மூலம் நிர்ப்பந்திப்பது மக்களைப் பகைத்துக் கொள்ளவே வழி வகுக்கும். 1980களில் வடக்கில் ஆயுத மிரட்டல் மூலம் மக்கள் வாக்களிப்பினின்று விலகிற்குமாறு வற்புறுத்தப் பட்டதை நாம் நினைவு கூறலாம். இவ்வாறே 1989ல் ஜே.வி.பி. ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தென்மாகாணத்தில் தன் மிரட்டல் நடைமுறையைப் பயன்படுத்தியது. இதன் விளைவாக நன்மையடைந்தோர் யார் என்பது ஒருபுறமிருக்க இதை நடைமுறைப்

10ம் பக்கம் பார்க்க

www.padippakam.com



# சி. ஐ. ஏ. யும் பண்பாட்டு கெடுபிடி யுத்தமும் ஒரு மீள் பார்வை

## ஜேம்ஸ் பெற்றாஸ்

செல்வி ஃபிரான்ஸஸ் ஸ்ற்ரோனர் ஸோண்டர்ஸ் எழுதிய "ஹு பெய்ட் த பைப்பர்" என்ற நூலை வைத்து எழுதப்பட்ட கட்டுரையின் தமிழ்த் தழுவல். பி.ஆர். இராம நாதன்

நன்றி : மன்த்லி றிவ்யூ




மேற்படி நூல் சி.ஐ.ஏ. என்ற அமெரிக்க உளவு நிறுவனம் எப்படி தன்னு டைய சார்பிற் செயற்பட்ட மனிதாபிமான முகமூடிக் குழுக்கள் மூலமும் ஃபோர்ட் நிறுவனம், றொக்க ஃபெல்லர் நிறுவனம் போன்ற மனிதநேய அமைப்புக்கள் மூலமும் பல்வேறு பண்பாட்டு அமைப்புக்களை ஊடுருவியது என்பது பற்றிய விவரமான விளக்கத்தைத் தருகிறது.

சி.ஐ.ஏ. ஏன். பண்பாட்டு மாநாடுகளைக் கூட்டியது எனவும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தது எனவும் கலைநிகழ்ச்சிகளை நடத்தியது எனவும் நூலாசிரியர் விவரிக்கிறார். அமெரிக்க ஆட்சியாளர்கட்குச் சாதகமான நன்கு அறியப்பட்ட நூலாசிரியர்களது படைப்புக்களை வெளியிட்டும் மொழிபெயர்ப்பித்தும் உள்ளது. சமூக உள்ளடக்கங் கொண்ட கலைகட்கு மாறாகச் சமூக உள்ளடக்கமே இல்லாத சூட்சுமக் கலை வடிவங்களை ஆதரித்துள்ளது. மாக்ஸியத்தையும் கம்யூனிசத்தையும் புரட்சிகர அரசியலையும் எதிர்த்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வன்முறையான அழிவுச் செயல்களைக் கவனியாமல் விட்ட அல்லது நியாயப்படுத்திய சஞ்சிகைகட்கு உலகெங்கும் நிதியுதவி வழங்கியுள்ளது.

மேற்படி கொள்கைகட்குச் சேவையாற்றுவதற்காக மேற்கில் ஆய்வறிவுச் சுதந்திரத்தின் தீவிர பிரசாரகர்கள் சிலரை அணிதிரட்டியது. இவர்களிற் சிலர் நேரடியாகவே சி.ஐ.ஏயிடம் ஊதியம் பெற்றனர். பலர் தெரிந்தே சி.ஐ.ஏ. வேலைத் திட்டங்களில் பங்கு பற்றினர். சிலர் சி.ஐ.ஏ. வலயத்தினுள் வந்தும் போயும் கொண்டிருந்தனர். 1960 களில் வியற்நாம் போரில் விளைவாயும் சி.ஐ.ஏயின் செயற்பாடுகள் அம்பலப்படுத்தப்பட்டு அரசியல் அலை இடதுபுறமாக எழுந்தபோது, தமக்கு எதுவுமே தெரியாது என்று தம் அறியாமையைக் கவசமாக்கினர்.

பாட்டிஸன் றிவ்யூ, கென்யொன் றிவ்யூ, நியூ லீடர், என் கவுண்ட்டர் போன்ற பல அமெரிக்க ஐரோப்பிய கம்யூனிஸ விரோதப் பிரசுரங்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ நிதியுதவி பெற்றன. சி.ஐ.ஏ. நிதியுதவி வழங்கி முன்நிலைப்படுத்திய பல ஆய்வறிவாளர்களுள் இர்விங் க்றிஸ்ற்றோல், மெல்வின் லாஸ்க்கி, இஸையா பேர்லின், ஸ்ற்றீஃபன் ஸ்பென்டர், ஸிட்னி ஹூக், டானியல் பெல், டுவைற் மக்டொனால்ட், றொபேட் லொவெல், ஹன்னா அறெண்ட்ற், மேரி மக்கார்த்தி ஆகியோர் அடங்குவர். குறிப்பாக ஐரோப்பிவில், 'ஜனநாயக இடதுசாரிகளையும்" முன்னாள் இடதுசாரிகளையும், குறிப்பாக இக்னாசியோ ஸிலோனெ, ஸ்ற்றீஃபன் ஸ்பென்டர், ஆர்த்தர் கோஸ்ற்லர், றேமண்ட் அறொன், அன்ற்றனி க்றொஸ்லண்ட், மைக்கல் ஜொஸ்ஸெல்ஸன், ஜோஜ் ஓர்வெல் போன்றோரை அக்கறையுடன் கவனித்து முதன்மைப்படுத்தியது.

ஸிட்னி ஹூக், மெ்ல்வின் லாஸ்க்கி ஆகியோரது தூண்டுதலின் பேரில், சி.ஐ.ஏ. பண்பாட்டுச் சுதந்திரக் காங்கிரஸ் எனும் அமைப்புக்கு நிதியுதவி வழங்குவதில் முனைப்புற்றது. இந்த அமைப்பு ஒருவகையான பண்பாட்டு 'நேற்றோ' (Nato) எனலாம். இதில் சகல விதமான 'ஸ்தாலினிய விரோத' இடது சாரிகளும் வலதுசாரிகளும் ஒருங்கிணைந்தனர். மேலைப் பண்பாட்டு அரசியல் விழுமியங்களை ஆதரித்தும் "ஸ்தாலினியச் சர்வாதிகாரத்தைத்" தாக்கியும் அமெரிக்க நிறவெறிமீதும் ஏகாதிபத்தியத்தின் மீதும் பாதம் படாமல் சுற்றிச் செல்லவும் முற்றிலும் சுதந்திரமானோராக இருந்தனர். இடையே எப்போதாவது, அமெரிக்க வெகுஜனச் சமூகம் பற்றி விமர்சித்து ஏதேன் ஒரு கட்டுரை இந்தச் சி.ஐ.ஏ. நிதியுதவி பெற்ற சஞ்சிகைகளில் வெளிவந்ததும் உண்டு.

சி.ஐ.ஏ. நிதி பெற்ற இந்த ஆய்வறிவாளர்கள் பற்றிய விசித்திரம் அவர்களுடைய அரசிற் பக்கச்சார்பு மட்டுமல்ல. சார்பு நிலையற்றுச் சத்தியத்தை தேடுவோராகவோ வழிபாட்டுச் சின்னங்களை நொறுக்குகிற மனிதாபிமானிகளாகவோ சுதந்திர உணர்நிலை கொண்ட ஆய்வறிவாளர்களாகவோ கலை கலைக்காகவே எனும் கலைஞர்களாகவோ தம்மை அறிவித்துக் கொண்டு, ஸ்தாலினிய இயந்திரத்திற்குத் தம்மைப் பிணைத்துக்கொண்ட ஊழல் மிக்க பிரசார எழுத்தாளர்கட்கு மாறாகத் தம்மை நிறுத்திக் கொண்டதுவும் தான்.

சி.ஐ.ஏ. தொடர்புகளைத் தாங்கள் அறிய மாட்டார்கள் என்று இவர்கள் சொல்வதை நம்புவது இயலாது. இவர்களுடன் தொடர்பான சஞ்சிகைகள் செயற்பட்ட காலம் முழுவதிலும் அமெரிக்காவில் வெள்ளை இனவெறி ஆதிக்கம் மிக்க ஜோர்தியா ஆர்க்கன்சா, போன்ற தென் மாநில அரசுகளில் கறுப்பு இனத்தவர்களுக்குச் கிரமமாக வழங்கப்பட்டு வந்த அடி உதை மரியாதைகளைப் பற்றி ஒரு சொல்லேனும் எழுதப் படவில்லை. இதை அவர்கள் எப்படிப் புறக்கணிக்க முடியும்? குவாட்டேமாலா, ஈரான், கிரேக்கம், கொரியா ஆகிய நாடுகளில் தசலட்சக் கணக்கானோர் சாகக் காரணமாகவிருந்த ஏகாதிபத்தியக் குறுக்கீட்டை அவர்கள் எப்படிப் புறக்கணித்திருக்க முடியும்? தாங்கள் எழுதிவந்த சஞ்சிகைகளில் அக்காலத்து ஏகாதிபத்தியக் கொடுமை ஒவ்வொன்றும் அப்பட்டமாக நியாயப் படுத்தப்பட்டதை எப்படிப் புறக்கணித்திருக்க முடியும்? அவர்கள் எல்லாரும் சிப்பாய்கள் தான். ஹூக் லாஸ்கி போல சிலர் மொட்டையான கனல் கக்கும் முரடான, குதர்க்கக்காரர்கள். பிறர் ஸ்ற்றீஃபன் ஸ்பென்டர் போல அழகான கட்டுரையாளர்கள், ஜோஜ் ஓர்வெல் போல 'பிறரிலும் புனிதரான' உளவுத் தகவற்காரர்கள். சி.ஐ.ஏயின் 'வாஸ்ப்' ஐவி லீகின் மேட்டுக்குடிகள் மறைந்திருந்து இயக்குவதையும், கனல் கக்கும் முன்னாள் இடதுசாரி யூதர்கள், இடதுசாரி முனைப்புடைய அரச எதிர்ப்பாளர்கள் மீது சீறுவதையும் ஸோண்டர்ஸ் விவரிக்கிறார். 1960இல் உண்மை பகிரங்கமானபோது இந்த ஆய்வறிவாளர்கள் தாங்கள் பாவிக்கப்பட்டது' பற்றிக் கோபப்பட்டதாகப் பாவனை செய்தார்கள். ஆனால் சி.ஐ.ஏ. சர்வதேச நிறுவனங்கள் கிளையின் இயக்குனர் தொம் ப்றேடன் இவர்களுக்கு யார்யார் சம்பளமும் சன்மானமும் வழங்கினார்கள் என்று விவரித்து இவர்களது குட்டை உடைத்துவிட்டார்.

ப்றேடனின் படி, இவர்களது "இலக்கிய நுரைக்கு" நிதி வழங்கியது சி.ஐ.ஏ. தான். ஹூக் க்றிஸ்றொல், லாஸ்கி ஆகியோரின் ஸ்தாலினிய விரோத முயற்சிகைள சி.ஐ.ஏ. கடும் போக்காளர் போர்ட் மெயர் "இலக்கிய நுரை" என்றே குறிப்பிட்டார். 'ஜனநாயக இடது' என்று சுய அடையாளமிடப்பட்ட பிரபல பிரசுரங்கட்கான பணம் சி.ஐ.ஏயிடமிருந்து வந்தது எனவும் "என் கவுண்டர் ஏட்டின் ஆசிரியராக ஒரு சி.ஐ.ஏ. முகவரே நியமிக்கப் பட்டார்." எனவும் ப்ரேடன் எழுதியுள்ளார். "1953 அளவில் ஒவ்வொரு துறையிலும் நாம் சர்வதேச நிறுவனங்களை நடத்தியோ அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தியோ வந்தோம்" எனவும் அவர் கூறுகிறார்.

சி.ஐ.ஏயின் ஆய்வறிவாளப் பணியாளர்கள் பண்பாட்டுத் துறையில் எப்படி அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களைப் பேணினார்கள் என்பது பற்றிய பல வினாக்கள் தொடர்பாக பயனுள்ள பல தகவல்கள் இந்த நூலில் உள்ளன. அது மட்டுமன்றிச், சித்தாந்தமும் கலையும் பற்றிச் சி.ஐ.ஏ. ஆய்வறிவாளர்கள் நியாயப்படுத்திய நிலைப்பாடுகளின் நீண்டகால விளைவுகள் பற்றிய பயனுள்ள உரையாடல்கட்கும் இந் நூல் வழி செய்துள்ளது.

எதுவித நிபந்தனையுமின்றியே சி.ஐ.ஏ. நிதி உதவி வழங்கியது என்று இந்த ஆய்வறிவாளர்கள் சொல்வதை நூலாசிரியர் மறுக்கிறார்: "சி.ஐ.ஏயிடம் நிதி உதவி பெற்ற தனிமனிதர்களும் நிறுவனங்களும் பிரசாரப் போரொன்றில் தங்களது பங்கை வழங்குமாறு எதிர்பாக்கப்பட்டனர்". அதிகம் விளைபயனுள்ள பிரசாரமாகச் சி.ஐ.ஏ. கருதியது எதெ யென்றால், "பிரசாரத்தை உள்வாங்குபவர் பிரசாரத்தின் நோக்கத்தைத் தனது நோக்கமாகவே கொள்ளச் செய்வதையாகும்."

சமூகச் சீர்திருத்தம் பற்றி இந்த "ஜனநாயக இடது" காரரைச் சிறிது அலட்டிக்கொள்ள அனுமதித்தாலும், சி.ஐ.ஏயின் அக்கறையும் தாராளமான நிதியும் மிக வெளி வெளியான ஊக்குவிப்பும்,

> செல்வி ஃபிரான்ஸஸ் ஸ்ற்ரோனர் ஸோண்டர்ஸ் எழுதிய "ஹு பெய்ட் தபைப்பர்" என்ற நூலை வைத்து எழுதப்பட்ட கட்டுரையின் தமிழ் தழுவல் : பி. ஆர். இராமநாதன்
>
> நன்றி: *மன்த்லி றிவ்யூ*

ஸ்தாலினிய விரோதக் குதர்க்கத்துக்கும் மேலை நாட்டு மாக்ஸியர்கட்கும் சோவியத் எழுத்தாளர்கட்கும் கலைஞர்கட்கும் எதிரான இலக்கிய சிந்தனைக்குமாகவே தரப்பட்டன. நூலாசிரியர் இதைக் கம்யூனிச எதிர்ப்பில் "ஜனநாயக இடதும்" சி.ஐ.ஏயும் ஒன்றிணையும் இடம் என்று குறிப்பிடுகிறார். இந்த ஒத்துழைப்புப் பணிகளுள் பிரான்ஸில் வேலை நிறுத்தங்களை முறியடிப்பது, ஸ்தாலினிஸ்ற்றுகள் பற்றித் தகவல் வழங்குவது (ஓர்வெல், ஹூக்), இடதுசாரிக் கலைஞர்கள் அங்கீகாரம் பெறாமல் தடுப்பது (1964ல் உலகப் புகழ் பெற்ற லத்தீன் அமெரிக்கக் கவிஞரான பப்லோ நெருடாவுக்கு நொபெல் பரிசு கிடையாமல் தடுத்தது) போன்றன உள்ளடங்கும்.

பண்பாட்டுக் கெடுபிடி யுத்தத்தில், அமெரிக்க அரசாங்கத்தின் முக்கிய அங்கமான சி.ஐ.ஏ. இரண்டாம் உலக யுத்தத்தின் பின், ஐரோப்பாவில் தன் கவனத்தைக் குவித்தது. இரண்டு தசாப்தங்களாக முதலாளிய யுத்தம், பொருளாதார மந்தம், போருக்குப் பின்னான அயல் ஆக்கிரமிப்பு ஆகியவற்றைக் கண்ட ஏகப் பெரும்பான்மையான ஐரோப்பிய ஆய்வறிவாளர்களும் தொழிற்சங்கவாதிகளும், முதலாளிய விரோதிகளாயும் அமெரிக்க மேலாதிக்க நோக்கங்கட்கு எதிரானோராயும் இருந்தனர். கம்யூனிசத்தின் கவர்ச்சியையும் ஐரோப்பிய (குறிப்பாக பிரெஞ்சு, இத்தாலிய) கம்யூனிஸ்ட் கட்சிகளது வளர்ச்சியையும் மறிக்க, சி.ஐ.ஏ. இரண்டு மட்டங்களில் செயற்படும் ஒரு வேலைத் திட்டத்தை வகுத்தது.

நூலின் ஆசிரியர் விளக்குவது போல, வெளிவெளியான "கம்யூனிஸ விரோத" வேலைத்திட்டம்" ஒன்றின் பகுதியாகச் சில ஐரோப்பிய நூலாசிரியர்கள் முக்கியப் படுத்தப்பட்டனர். "சோவியத் அயற் கொள்கையையும் ஆட்சி முறை என்ற அடிப்படையில் கம்யூனிஸத்தையும் விமர்சிப்பவற்றில், புறவய நோக்குடையன(!) என்று தாம் காண்பது" தகுதிகளில் ஒன்றாகும். ஸிலோனே, கோஸ்ற்லர், ஜிடெ போன்ற நம்பிக்கையிழந்த கம்யூனிஸ்டுகளின் நூல்களை வெளியிடுவதில் சி.ஐ.ஏ. பெரும் கவனம் எடுத்தது. இஸையா பேர்வின், டானியல் பெல், செஸலோ மிலொஷ் போன்ற புறவய நோக்குடைய சமூக விஞ்ஞானிகளும் மெய்யியலாளர்களும் தங்கள் விழுமியங்களையும் (தம் சி.ஐ.ஏ. எசமானர்கள் வரையறுத்த கம்யூனிஸ விரோத அமெரிக்கச் சார்பு எல்லைகட்குட்பட்ட) மேற்கின் விடுதலையினதும் சிந்தனைச் சுதந்திரத்தினதும் சிறப்புக்களையும் போதிப்பதற்கு, ஆடம்பரமான கலந்துரையாடல்களை பாரிஸ், பேர்லின், பெல்லாஜியோ போன்ற நகரங்களில் நடத்த நிதி வழங்கிக் கம்யூனிஸ விரோத எழுத்தாளர்களை ஊக்குவித்தனர்.

மேற்குறிப்பிட்ட தகைமை சார் ஆய்வறிவாளர்களில் எவருமே இந்தோ சீனத்திலும் அல்ஜீரியாவிலும் நடந்த படுகொலைகள் பற்றியோ அமெரிக்க ஆய்வறிவாளர்கள் நடுவே நடந்த களையெடுப்புக்கள் பற்றியோ அமெரிக்காவின் தென் மாநிலங்களில் நடந்த வெள்ளை இனவெறித் தாக்குதல்கள் பற்றியோ எந்தவிதமான கேள்வியையும் எழுப்பவில்லை. ஸிட்னி ஹூக் மெல்வின் லாஸ்க்கி போன்றோரின் கருத்தில் இத்தனை அற்ப விடயங்கள் பற்றி அவர்கள் அக்கறை காட்டியிருந்தால் கம்யூனிஸட்டுகளுக்குப் பிடிகொடுத்தமாதிரி ஆகிவிட்டிருக்கும். உண்மை ஏதெனில், சி.ஐ.ஏ. தன் நிதியுதவியை நிறுத்தியிருந்தால், இவர்களுடைய கனதிக்குரிய கம்யூனிஸ விரோத இலக்கிய அரசியல் ஏடுகள் எப்போதோ நின்று போயிருக்கும். இச் சஞ்சிகைகளை சி. ஐ. ஏ. ஆயிரக்கனக்கில் விலைக்கு வாங்கிப் பின்னர் இலவசமாக விநியோகித்தும் வந்தது

சி. ஐ. ஏ. செயற்பட்ட இரண்டாவது பண்பாட்டுத் தளம் முன்னதிலும் நுட்பமானது. இங்கே அது இசை நிகழ்ச்சிகள் ஓவியக் கண்காட்சிகள், நாட்டிய நாடகங்கள், நாடகக்குழுக்கள், நன்கறியப்பட்ட ஜாஸ் மற்றும் இசை நாடக இசைஞர்கள் போன்றோரை முதன்மைப்படுத்தியது. இதன் வெளிவெளியான நோக்கம், ஐரோப்பாவிலிருந்து ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை மழுங்கவைத்து அமெரிக்கப் பண்பாட்டையும் அரசாங்கத்தையும் பற்றிய நல்லெண்ணத்தை வளர்ப்பதாகும். இக் கொள்கையின் பின்னிருந்த நோக்கம், அமெரிக்காவின் ராணுவபொருளாதார மேலாதிக்கத்திற்கு ஆதரவாக ஒரு பண்பாட்டு மேலாதிக்கத்தை உருவாக்கும் விதமாக, அமெரிக்கப் பண்பாட்டை ஒரு காட்சிப்பொருளாக்குவதாகும்.

கறுப்பு இனத்தவரான மரியொன் அன்டெர்ஸன் போன்ற பாடகர்கள், லூயி ஆம்ஸ்ற்றோங் போன்ற இசைஞர்கள், மற்றும் எழுத்தாளர்களை அனுப்புவதில் சி.ஐ.ஏ. மிகவும் அக்கறை காட்டியது ஏனெனில், அமெரிக்க அரசின் நிறவாத உள்நாட்டுக் கொள்கைகள் பற்றி ஐரோப்பாவில் இருந்த பகைமையைத் தணிக்கவேண்டியிருந்தது. கறுப்பு கலைஞர்கள் கலை பற்றிய அமெரிக்க விளக்கத்திலிருந்து சற்று விலகி விமர்சிக்கத் தலைப்பட்ட போது எழுத்தாளர் றிச்சட் றைற் போல, அவர்களும் புறக்கணிக்கப்பட்டனர்.

தோற்றத்தில் அரசியல் சாராத இக்கலை நிகழ்ச்சிகளின் மீது சி.ஐ.ஏயின் அசியற் கட்டுப்பாட்டின் உக்கிரத்தை ட்வைற் மக்டொனால்ட் எழுதிய ஒரு கட்டுரை தொடர்பாக என் கவுண்டர் ஏட்டின் ஆசிரியர்களின் எதிர்வினை தெளிவாக உணர்த்தியது. மக்டொனல்ட் ஒரு தான்தோன்றி அரசின்மைக் கொள்கையாளர். சி.ஐ.ஏ. நடத்திய பண்பாட்டுச் சுதந்திரக் காங்கிரஸுடனும் என்கவுன்ட்டர் ஏட்டுடனும் நீண்டகாலமாகச் சகவாசம் வைத்திருந்தவர். 1958ல் 'அமெரிக்கா, அமெரிக்கா' என்ற தலைப்பில் அமெரிக்க வெகுசனப் பண்பாட்டின் மீதும் அதன் பண்பற்ற பொருள்முதல் வாதத்தின் மீதும் நற்பண்பின்மை மீதும் தன் வெறுப்பைக் கூறும் ஒரு கட்டுரையை என்கவுன்ட்டருக்காக எழுதினார். எந்த அமெரிக்க விழுமியங்களைச் சீ. ஐ. ஏ. வற்புறுத்திப் பிரசாரம் செய்ததோ அதையெல்லாம் அக்கட்டுரை மறுதலித்தது. என்கவுதட்ன்டரின் கம்யூனிஸ எதிர்ப்புப் போரையும் மறுதலித்தது. சி.ஐ.எக்கும் என்கவுன்ட்டரில் இருந்த அதன் ஆய்வறிவாளப் பணியாட்களுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியச் சீரழிவு மீதான அத் தாக்குதலைத் தாங்க முடியவில்லை. ஆய்வறிவாளர்கட்கு ப்றேடன் வழங்கிய நெறிப்படுத்தலின்படி, "சி.ஐ.ஏ.யிடம் நிதி உதவி பெறும் அமைப்புக்கள் அமெரிக்கக் கொள்கைகள் எல்லாவற்றையும் ஆதரிக்கத் தேவை இல்லை." ஆனால் எல்லாவற்றுக்கும், குறிப்பாக அமெரிக்க அயற் கொள்கை தொடர்பான விடயங்களில், ஒரு எல்லை உண்டு. மக்டொனல்ட் என்கவுன்ட்டரின் முன்னாள் ஆசிரியராயிருந்தும் அக் கட்டுரை நிராகரிக்கப்பட்டது என்கவுண்ட்டரின் இரண்டாம் இதழில், கெடுபிடி யுத்த எழுத்தாளர்களில் ஒருவரான நிக்கோலா ஷியாரமொன்ட் பெருமித்தத்துடன் பின்வருமாறு எழுதியிருந்தார். 'பயனுள்ள பொய்களை' உண்மைகள் என்று சொல்ல மறுக்கவும் புனைவுகளை அம்பலப்படுத்துவும் பின்னிற்கும் ஒரு படைப்பாளி, தன்னைத் தரம்தாழ்த்தாமல் அவ்வாறு நடந்து கொள்ள முடியாது. நிச்சயமாக இது என்கவுன்ட்டருக்கோ அதன் தகைமைசார் எழுத்தாளருக்கோ இது பொருந்தவில்லை.

ஸோண்டர்ஸின் நூலில் உள்ள அதி முக்கியமானதுப் அற்புதமான விபரணம் பின்வருமாறு : சி.ஐ.ஏயும் நவீன ஓவிய அரும்பொருட் காட்சிக்கூடத்தில் (Moma) இருந்த அதன் கூட்டாளிகளும், சமூக உள்ளடக்கங் கொண்ட ஓவியங்கட்கு ஒரு மாற்றாக 'சூட்சும உணர்வனுபவ' (Abstraet expressionist ஓவியங்கட்கும் ஓவியர்கட்கும் பெருந் தொகைகளை வா வழங்கினர். இந்த ஓவிய வடிவை ஊக்குவிப்பதில் அமெரிக்கப்

*9ம் பக்கம் பார்க்க*

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா



மேலே உள்ள படம் தமிழ்நாடு கோவையைச் சேர்ந்த ஒரு குடும்பம் தற்கொலை செய்து கொண்ட கோரக் காட்சியைத் தருகிறது. ஒரு சிறிய பட்டறை வைத்து நகைத் தொழில் செய்துவந்த கண்ணன் அதில் நஷ்டம் ஏற்பட்டு கூலித் தொழிலாளியாக வேலை செய்தார். வருமானம் போதவில்லை. கடன், வறுமை, குழந்தைகளுக்கு கல்வி கொடுக்க முடியாமை என்பனவற்றால் துவண்டு போனார். இறுதியில் சைனட் கலந்த பாலைத் தமது மூன்று குழந்தைகளுக்கு கொடுத்து கணவன் மனைவியும் குடித்து தற்கொலை செய்து கொண்டனர். பூகோளமயமாதலின் கீழ் இந்துத்துவ ஆளும் வர்க்கத்தின் தலைமையிலான இந்தியாவின் வறுமைக்கு நெஞ்சை உருக்கும் சம்பவம் ஒரு பதச் சோறாகும்.

வலப் புறத்தில் உள்ள படத்தில் இந்திய ஆளும் வர்க்கப் பிரதிநிதிகள் குடும்பம் ஒன்றின் கொழுகொழுத்து நிற்கும் காட்சி. கீழிருந்து இரண்டாவது வரிசையில் இடப்புற ஓரமாக நிற்பவர் அமர்சிங் ஆளும் வர்க்கக் கட்சிகளில் ஒன்றான சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். இவர் சென்ற தீபாவளியை எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோவில் நைல் நதியில் படகுச் சவாரி செய்து கொண்டே பிரமிட்டுக்களைப் பாத்து ரசித்தாவாறே கொண்டாடினார். இவரைப் போன்றே ஆளும் கட்சித் தலைவர்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தமது விடுமுறைகளை லட்சக்கணக்கில் செலவு செய்து உண்டு களித்துக் கொள்கிறார்கள்.

இலங்கையிலும் இதே கதிதான். மேற் கூறிய நிலை இலங்கையின் தற்போதைய சூழலுக்கு முற்றிலும் பொருந்தக் கூடியது. ஒரு புறம் வேலை இன்மை, வீடின்மை, சம்பளம் போதாமை, வறுமை நோய் இவற்றைத் தாங்கமுடியாது தற்கொலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு தள்ளப்படும் மக்கள். மறுபுறம் தாராளமயம். தனியார் மயம், யுத்தம் என்பனவற்றால் சுரண்டிக் கொள்ளையிட்டு கொழுத்துக் குளுகுளு என உல்லாச வாழ்வு நடாத்தும் உயர் வர்க்கமும் அவர்களது பிரதிநிதிகளான ஆளும் வர்கக் சக்திகளும். இலங்கை உலகிலேயே தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தைப் பெற்று நிற்கின்றமை குறிப்பிடத் தக்கதாகும். மேலே உள்ள படங்களும் விடயமும் 'புதிய ஜனநாயகம்' சஞ்சிகை (பெப்ரவரி 2001) யில் இருந்து பெறப்பட்டதாகும்.

## இதே கதிதான் இலங்கையிலும்



## சி.ஐ.ஏ.

8ம் பக்கம் தொடர்

பாராளுமன்றத்தில் (காங்கிரஸ்) இருந்த வலதுசாரிகளுடன் கடுமையாக மோதவும் நேர்ந்தது. இந்த ஓவிய முறையில், "கம்யூனிஸ விரோத சித்தாந்தத்தை சுதந்திரத்தின் அல்லது சுதந்திரமான முன்முயற்சியின் சித்தாந்தத்தை" சி.ஐ.ஏ. அடையாளங் கண்டது. எதையுமே உருவப்படுத்தாத 'அரசியல் மௌனங் கொண்ட' இக் கலைவடிவம் சோஷலிச யதார்த்தத்தின் எதிர் நிலையாகக் காணப்பட்டது. தேசத்தின் விருப்பத்தின் உண்மையான வெளிப்பாடாகச் சூட்சும உணர்வனுபவத்தை அவர்கள் கண்டனர்.

வலதுசாரி எதிர்ப்பத் தவிக்க வேண்டிச் சி.ஐ.ஏ. தனியார் துறையைக் குறிப்பாக Moma ஐயும் அதன் ஸ்தாபகர்களுள் ஒருவரான நெல்ஸன் றொக்க.்.பெல்ரையும் நாடினர். நெல்ஸன் றொக்க.்.பெல்லர் 'சூட்சும உணர்வனுபவ' ஓவியங்களை சுதந்திர முன்முயற்சி ஓவியங்கள் என்று கூறுவார். Moma வின் இயக்குனர்களின் பலர் சி.ஐ.ஏ.யுடன் நீண்டகாலத் தொடர்புடையோர். இந்த ஓவிய முறையை பன்பாட்டுக் கெடுபிடி யுத்தத்தில் ஒரு ஆயுதமாகப் பாவிப்பதற்கு அவர்களது உதவி கிட்டியது. இவ்வகையான ஓவியங்கள் பெருத்த நிதியுதவியுடன் ஐரோப்பா முழுவதும் கண்காட்சியில் வைக்கப்பட்டன. ஓவிய விமர்சகர்கள் அணிதிரட்டப்பட்டனர். ஓவியச் சஞ்சிகைகள் பாராட்டுக்களை இறைத்தன. Moma வினதும் சி.ஐ.ஏ.யால் நடத்தப்பட்ட .்.பெயார்.்.பீல்ட் நிறுவனத்தினதும் ஒருங்கிணைந்த நிதிவளங்கள் மூலம் ஐரோப்பாவின் கீர்த்திமிக்க காட்சிக் கூடங்களின் கதவுகள் திறக்கப்பட்டன. அவற்றின் உதவியுடன் ஐரோப்பிய அழகியல் மீது செல்வாக்குச் செலுத்த முடியுமாயிற்று.

மேற்படி ஓவியமுறை . ஐரோப்பாவிலிருந்த சமூக உணர்வுள்ள படைப்பாளிகளை அரசியல் அடிப்படையில் தாக்கவும் பயன் பட்டது. பண்பாட்டுச் சுதந்திரக் காங்கிரஸ் (இன்னொரு சி.ஐ.எ. முகமூடி நிறவனம்) குறித்துக்காட்டுகிற அல்லது யதார்த்தவாத அழியலுக்கு எதிராகச் சூட்சும ஓவிய முறையைப் பெரிதும் ஆதரித்துத் தன் அரசியல் நிலைப்பாட்டை வெளிவெளியாகக் கூறியது.

நூலாசிரியர் ஓவிய முறையின் அரசியல் பற்றிப் பேசுகையில் குறிப்பிடுவது போல "பண்பாட்டுக் கெடுபிடி யுத்தத்தில் அமெரிக்க ஓவியம் ஆற்றிய பங்கின் விதிவிலக்கான அம்சங்களில் ஒன்று ஏதெனின்,அது அம் முயற்சியின் ஒரு பகுதியாகவில்லை; மாறாக, அது தன்னை வேண்டுமென்றே அரசியலற்றது என்று பிரகடனம் செய்ததன் மூலம், உக்கிரமான அரசியற் தன்மையுடையதாகியது ஆகும்". அரசியலற்ற கலையையும் கலைஞர்களையும் சி.ஐ.ஏ. சுதந்தரத்துடன் இணைத்து நோக்கியது. ஐரோப்பிய இடதுசாரிக் கலைஞர்களை ஈடுகட்டுவதற்கு இது பயன்பட்டது. இதன் முரண் நகை ஏதெனின், அரசியற் சார்பற்ற தோற்றம் இடதுசாரி நுகர்வுக்காக மட்டுமே வழங்கப்பட்டமையாகும்.

எவ்வாறெனினும் சி.ஐ.ஏயும் அதன் பண்பாட்டு நிறுவனங்களும், ஓவியம் பற்றி உலகப் போருக்குப் பின்பான பார்வையைப் பெருமளவில் வடிவமைத்தனர் என்பதாகும். கீர்த்தி மிக்க எழுத்தாளர்களும் கவிஞர்களும் ஓவியர்களும் இளைஞர்களும் அரசியலிலிருந்து விடுபட்டடதாகத் தம்மைப் பிரகடனம் செய்துகொண்டனர். "கலை கலைக்காகவே" என்பதில் தமது நம்பிக்கையைப் பகிரங்கப் படுத்தினர். சுதந்திரமான கலைஞரோ ஆய்வறிவாளரோ அரசியல் ஈடுபாட்டினின்று விலகியவராய் இருக்க வேண்டும் என்ற வரட்டுச் சூத்திரம் எழுச்சி பெற்று, இன்று வரை ஆதிக்கம் செலுத்துகிறது.

சி.ஐ.ஏக்கும் மேல்நாட்டுக் கலைஞர்கட்கும் ஆய்வறிவாளர்கட்கும் இருந்த உறவைச் சிறப்பாகச் சித்தரிக்கும் நூலாசிரியர் சி.ஐ.ஏயின் ஏமாற்றுக்கும் எதிர்ப்பைக் கட்டுப்படுத்தலுக்கும் இருந்த தேவையின் அடிப்படைக் காரணத்தை விரிவாக ஆராயவில்லை. அவரது ஆய்வு பெரும்பாலும், அரசியற் போட்டியும் சோவியத் கம்யூனிசத்துடனான பகைமையும் தொடர்பாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது. சி.ஐ.ஏயின் பண்பாட்டுக் கெடுபிடி யுத்தத்தை வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையிலும் மூன்றாமுலகின் புரட்சிகர இயக்கங்களதும் அமெரிக்காவுக்கு எதிரான சுயாதீனமான மாக்ஸியச் சவால்களினதும் அடிப்படையிலும் ஆராயும் கனதியான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. இதன் விளைவாக, நூலாசிரியர் சி.ஐ.ஏயின் சில முயற்சிகளை மற்றச் சி. ஐ. ஏ. முயற்சிகட்கு மேலாகவும் சில பணியாளர்களை மற்றவர்களை விட உயர்வாகவும் பாராட்ட நேருகிறது. சி.ஐ.ஏயின் பண்பாட்டுப் போரை ஏகாதிபத்திய முறையின் ஒரு பகுதியாகக் காண்பதற்குப் பதிலாக, நூலாசிரியர், அதன் ஏமாற்றையும் எதிர்த்தாக்கத் தன்மையையும் மட்டுமே நாடுகிறார். அமெரிக்காவும் நேற்றோவும் (Nato) கிழக்கு ஐரோப்பாவையும் சோவியத் யூனியனையும் பண்பாட்டு ரீதியாகக் கைப்பற்றியமை, அப் பண்பாட்டுப் போர் வெறுமனே ஒரு தற்காப்பு முயற்சி என்ற கருத்தை எளிதாகவே அழித்து விடுகிறது.

பண்பாட்டுப் போரின் வேர்கள் வர்க்கப் போராட்டத்தில் விளைந்தவை. முன்பாகவே, சி.ஐ.ஏயும் அமெரிக்கத் தொழிற்சங்க சம்மேளனமான ஏ.எ.்.ப்.எல். - சி.ஐ.ஓவில் அதன் (முன்னாள் கம்யூனிஸ்ட்) பணியாட்களான இர்விங் பிரௌன், ஜே லவ்ஸ்ற்றோன் ஆகியோரும் போராளித் தொழிற்சங்கங்கட்குக் குழிபறிக்கவும் சமூக ஜனநாயகத் தொழிற்சங்கங் கட்குப் பல மில்லியன் டொலர்களை வாரி வழங்கினர். பண்பாட்டுச் சுதந்திரக் காங்கிரஸும் அதன் ஞானம் பெற்ற ஆய்வறிவாளர்களும் 1948ல் துறைமுகத் தொழிலாளர்களது வேலை நிறுத்தத்தை முறியடிக்க மாஸை நகரிலிருந்து வந்த குண்டர்களைக் கூலிக்கு அமர்த்திய சி.ஐ.ஏயிடமிருந்து தான் நிதிவழங்கப் பெற்றனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் மேற்கு ஐரோப்பாவின் பழைய வலதுசாரிகள், தம்முடைய .்.பாஸிஸத் தொடர்புகளாலும் பலவீனமான முதலாளிய முறையாலும், நம்பகமற்ற நிலையை அடைந்ததன் விளைவாக, நேற்றோ எதிர்ப்புத் தொழிற்சங்க வாதிகளையும் ஆய்வறிவாளர்களையும் குழிபறிக்க அவர்களுடன் சித்தாந்தப் போரில் இறங்க வல்ல ஒரு 'ஜனநாயக இடது' சக்தியைத் தேடும் (அல்லது கண்டுபிடிக்கும்) தேவை சி.ஐ.ஏக்கு ஏற்பட்டது. அமெரிக்க பாராளுமன்றத்தின் (காங்கிரஸ்) வலதுசாரிகளது ஆட்சேபங்களைத் தவிர்ப்பதற்காக சி.ஐ.ஏயின் சிறப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த 'ஜனநாயக இடது' சக்தி தீவிர இடதுசாரிகளை எதிர்க்கவும் ஐரோப்பாவில் அமெரிக்க மேலாதிக்கத்தை மழுப்பவுமே பெரிதும் பயன்பட்டது.

எந்த நிலையிலேனும், இந்த ஜனநாயக இடதுசாரி சித்தாந்தக் குத்துச் சண்டைக் காரர்களுக்கு அமெரிக்காவின் உபாய முறைகளையோ நலன்களையோ வடிவமைப்பதில் எதுவித பங்கும் இருந்ததில்லை. வினவுவதோ கோருவதோ அவர்களது வேலையல்ல. "மேற்கின் ஜனநாயக விழுமியங்கள்" என்ற பேரில் அமெரிக்க சாம்ராஜ்யத்துக்குச் சேவையாற்றுவதே அவர்களது பணியாகும். வியற்னாம் யுத்தத்திற்கு எதிரான மாபெரும் எதிர்ப்பியக்கம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மேலெழுந்து, அவர்களது சி.ஐ.எ. உறவுகள் அம்பலமாயின பின்னரே, சி.ஐ. ஏயால் ஊக்குவிக்கப்பட்டு நிதியுதவி பெற்ற ஆய்வறிவாளர்கள் பலர் வீடு மாறி அமெரிக்க அயற் கொள்கையை விமர்சித்தனர். உதாரணமாகத், தன் உழைப்புக் காலத்தின் பெரும்பகுதியைச் சி.ஐ.ஏயின் ஊழியராகக் கழித்த ஸ்ற்றீ.்.பன் ஸ்பென்டர் அமெரிக்காவின் வியற்னாம் கொள்கையின் விமர்சகரானார். பாட்டிஸன் நிவ்யூ சஞ்சிகையின் ஆசிரியர்கள் சிலருக்கும் இவ்வாறே நடந்தது. எல்லாருமே தாம் ஒன்றுமறியாதவர்கள் என்று சொன்னாலும், எத்தனையோ சஞ்சிகைகளோடும் மாநாடுகளோடும் நீண்டகாலமாக ஆழமான ஈடுபாடு கொண்டிருந்த இவர்களுடைய நேச உறவு சிறிதளவும் அறிந்திராமல் உருவாகியிருக்குமா என்பதை எந்த விமர்சகரும் நம்பவில்லை.

அமெரிக்காவினதும் ஐரோப்பா வினதும் பிறநாடுகளதும் பண்பாட்டுத்துறையில் சி.ஐ.ஏயின் குறுக்கீட்டிற்கு நீண்டகாலப் பின்விளைவுகள் இருந்தன. பல ஆய்வறிவாளர்களுக்கு கீர்த்தியும் பரவலான அங்கீகாரமும் சி.ஐ.ஏயின் சித்தாந்தப் பார்வைக் குறைபாட்டுக்குட்பட்டு இயங்குவதற்கான துறைகளில் சி.ஐ.ஏ. நிதியைக் கொண்டு நடத்தப்பட்ட மாநாடுகள் மூலம் பரலாக அறியப்பட்டோர், மேற்கொண்டு, சி.ஐ.ஏயால் தீர்மானிக்கப்பட்ட அளவுகோல்கட்கு அமையப் புதிய பரம்பரையினருக்கான தராதரங் களையும் விழுமியங்களையும் நிறுவினர். ஆற்றலோ ஆளுமையோ அல்லாது அமெரிக்க ஆட்சியாளரது அரசியலே 'உண்மை' 'உன்னதம்' என்பனவற்றையும் பெருமைக்குரிய பல்கலைக்கழகங்களிலும் நிறுவனங் களிலும் நூதனசாலைகளிலும் எதிர்காலப் பதவிகளைத் தீர்மாணித்தன.

அமெரிக்காவினதும் ஐரோப்பா வினதும் ஜனநாயக இடதுசாரிகளது ஸ்தாலினிய விரோதக் குதர்க்க உரைகளும் ஜனநாயக விழுமியங்களும் சுதந்திரமும் பற்றிய விசுவாசப் பிரகடனங்களும் மேற்கின் தீய கொடுமைகளை மூடி மறைப்பதற்கு ஒரு வசதியான சித்தாந்தத் திரையாகின. மீண்டும். அண்மையில் யூகோஸலாவியாவுக்கு எதிரான நேற்றோவின் போரில், பத்தாயிரக் கணக்கான ஸேர்பியர்கள் விரட்டப்பட்டுப் பெருந்தொகையான அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட போது, பல ஜனநாயக இடதுசாரிகள் மேலைநாடுகளதும் கே.எல்.ஏ. எனும் (கொசோவோ) வன்முறையாளர்களுடனும் சேர்ந்து நின்றனர். கெடுபிடி யுத்தக் காலத்தில் ஸ்தாலினிய விரோதமே ஜனநாயக இடதுசாரிகளின்அபினியாக இருந்ததென்றால், இன்று மனித உரிமையின் பேரிலான குறுக்கீடுகள் அதே போதைத் தன்மையுடன் உள்ளதோடு சமகால ஜனநாயக இடதுசாரிகளை மயக்கத் திற்குள்ளாக்குகின்றன.

வெகுசனபோராட்டங்களிலிருந்து தம்மை விலக்கிக் கொண்டவர்களும் தொழிலாளர் வர்க்கத்திடமிருந்து எவ்வளவு எட்டவும் கீர்த்தி மிக்க நிறவனங்கட்கு எவ்வளவு நெருக்கமாகவும் நிற்கிறார்களோ அவ்வளவுக்குத் தங்கள் மதிப்பை ஏற்றிக்கொள்வோரும் பார்வைக்கு அரசியலற்றவர்களுமான ஆய்வறிவாளர்களுக்கும் அறிவுத்துறையினருக்கும் கலைஞர்களுக்குமான இன்றைய முன்மாதிரிகள் சி.ஐ.ஏயின் பண்பாட்டுப் போர் முயற்சியின் மூலம் உருவானது. வெற்றிகரமான ஆய்வறிவாளருக்கு சி.ஐ.ஏயின் இலக்கணம் ஏதெனில் வர்க்கப் போராட்டம், வர்க்கச் சரண்டல், அமெரிக் ஏகாதிபத்தியம் என்பன பற்றிப் 'புறநிலையாக' இல்லாமல் 'சித்தாந்தநோக்கில்' எழுதுகிற விமர்சக ஆய்வறிவாளர்களை அனுமதிக்காத சித்தாந்த வாயில் காப்போராக இருப்பதுதான்.

சி.ஐ.ஏயின் பண்பாட்டுச் சுதந்திரக் காங்கிரஸின் மிகக் கெடுதலான தாக்கம். ஏதெனில் அது குறிப்பான அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்கைகளை நியாயப்படுத்தியது அல்ல, அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றிப் பண்பாட்டு அரசியல் ஊடகங்களில் இடையறாது. அலசுவதை அடுத்தடுத்த ஆய்வறிவாளப் பரம்பரைகள் தவிர்க் வேண்டும் என்பதில் அது கண்ட வெற்றியேயாகும்.

இன்றைய ஆய்வறிவாளர்களோ கலைஞர்களோ எந்த ஒரு பிரச்சனையிலோ முற்போக்கான ஒரு நிலைப்பாட்டை மேற்கொண்டார்களா இல்லையா என்பதல்ல. ஏகாதிபத்திய விரோத சமூக, அரசியற் கருத்துக்கள் இசை, ஓவியம், கனதியான எழுத்து என்பனவற்றிற் காணப்படாவிட்டால் மட்டுமே தங்களது படைப்புக்கள் கனதியானவை எனக் கருதப்படும் என்ற நம்பிக்கை கலைஞர்கள் நடுவிலும் எழுத்தாளர்கள் நடுவிலும் வேர்பரப்பி நிற்பதே பிரச்சனையாகும்.

**சி.ஐ.ஏயின் நிலையான அரசியல் வெற்றி ஏதெனில் இடதுசாரிக் கண்ணோட்டத்தில் காத்திரமாகவும் இடையறாதும் ஈடுபடுவது கனதியான கலைக்கும் கல்வித்தகைமைக்கும் உடன்பாடற்றது என்று ஆய்வறி வாளர்களை நம்ப வைத்தமையாகும்.**

இன்று இசை நாடகம், நாடக மேடை, ஓவியக் காட்சிக்கூடங்கள் ஆகியவற்றிலும், கல்வியியலாளர்களது தொழில்சார்ந்த சந்திப்புக்களிலும் சி.ஐ.ஏயின் கெடுபிடி யுத்த் விழுமியங்கள் தெளிவாகவும் பரவலாகவும் உள்ளன. 'ராஜாவின் புதிய ஆடைகளை" அவிழ்த்தெறியப் போகிறவர் யார் ?

படிப்பகம்

www.padippakam.com



# பூகோளமயமாதல் பற்றி ஃபிடல் காஸ்டரோ



மனித இனம் முன்பொரு காலமும் இல்லாத அளவுக்கு விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி கண்டுள்ளது. செல்வப் பெருக்கமும், சுகவாழ்வும் அதிக அளவு கூடிவிட்டது. என்றுமே உலகில் இந்த அளவு பேதங்களும் ஏற்றத்தாழ்வுகளும் இருந்ததில்லை. தகவல் தொழில் நுட்பம், தொலை தொடர்பு சாதனங்களினால் உலகு மிகவும் சுருக்க மாகிவிட்டது அதேவேளை செல்வந்தருக்கும் வறியோருக்கும் இடையே உள்ள இடைவெளி விசாலித்து விட்டது. வளர்ச்சியின்மை பெருகி விட்டது.

நாம் வாழும் இந்தப் பூமியில் பூகோளமயமாக்குதல் என்கின்ற இலக்கானது எல்லா மக்களையும் ஒரே கப்பலில் சென்று கொண்டிருக்கும் பிரயாணிகள் ஆக்கி விட்டது. இந்தக் கப்பலில் பயணம் செய்வோர் அனைவரும் வெவ்வேறுபட்ட நிலைமையில் உள்ளனர்.

ஒரு சிலரே உல்லாச பகுதிகளில் இருந்து கொண்டு இணையம் (இன்ரனெற்) எலெதிரணியல் தொலை தொடர்பு சாதனங்கள் ஆகிய சௌகரியங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். மேலும் சுத்தமான நீரும், சுவையும். ஊட்டச் சத்தும் மிக்க உணவை உட்கொண்டு சுகபோகத்தில் வாழ்கின்றனர். உயர்தர மருத்துவ வசதிகளையும் பண்பாடுகளையும் அனுபவிக்கின்றனர். பெரும் தொகையினர் குடியேற்ற நாட்களில் ஆபிரிக்காவிலிருந்து அடிமை வியாபாரத்திற்காக அமெரிக்காவிற்கு கொண்டுவந்து இறக்கப்பட்ட அடிமைகளைப் போன்ற துன்பங்களை அனுபவிக்கின்றனர். கப்பலில் உள்ள பிரயாணிகளில் 85 சத வீதத்தினர் நெருங்கி இருந்துகொண்டு அழுக்கான இடங்களில் பசியாலும் நோயாலும் வாடி உதவி எதுவும் இன்றித் தவிக்கின்றனர்.

இந்தக் கப்பலில் அநீதிகள் பலவற்றையும் சுமந்துகொண்டு திக்குத் தெரியாத இலக்கை நோக்கி பயணமாகிறோம். பனிப்பாறைகளோடு கப்பல் மோதுண்டு போகக் கூடிய சாத்தியக் கூறுகளும் உண்டு. அப்படி ஏற்படின் நாம் அனைவரும் மூழ்கி மடிவோம்.

இந்தக் கூட்டத்தில் பங்கு பற்ற வந்துள்ள தேசத் தலைவர்களும் அரசாங்கங்களும் நசுக்கப்படுகின்ற பெரும்பான்மையான மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற படியால் கொடுமைகளிலிருந்து காக்கவேண்டிய கடமைப் பட்டவர்கள். கொடுமைகள் அற்ற இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டியவர்கள். சகல பயணிகளுக்கும் ஒருமைப்பாடும், சமத்துவமும், நீதியும் கிடைக்கப் பிரயத்தனப் படவேண்டும்.

கடந்த இரண்டு சகாப்தங்களாக மூன்றாம் உலக மக்கள் ஒரே கருத்தையும் சிந்தனையையுமே கேட்டவண்ணம் இருக்கின்றனர்.

பொருளாதார சமூக முன்னேற்றத்திற்கு கட்டுப்பாடற்ற சந்தையும் பெருமளவு தனியார்மயமாக்கலும் பொருளாதார நடவடிக்கை களிலிருந்து ஒதுங்கி யிருப்பதும் கட்டாயத் தேவைகள் என்று கூறப்படுகிறது.

இதனால் வளர்ந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்க நாட்டினரும் பல்தேசிய வர்த்தகர்களும் நன்மை பெற்றனர். கடந்த இரு தசாப்தங்களாக சர்வதேச நாணய நிதியம் (IMF) வகுத்த திட்டங்கள் எமது நாடு போன்றவற்றிக்கு பாதகமானவையாகவே அமைந்துவிட்டது. அதோடு சமூகத்திற்கும் சுற்றாடலுக்கும் தீங்கு விளைவிக்கத் தக்கவையாகும்.

பூகோளகமயமாக்கல் என்று கூறப்படும் தாராளமயமாக்கல் உலகு முழுமைக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக வறுமையை ஏற்படுத்துகிறது. இது தேசங்களின் சுய கௌரவத்தை அகற்றி சுயநல சிந்தையை ஏற்படுத்தி போட்டிகள் நிரம்பிய சந்தையில் சமனற்ற தன்மையை ஏற்படுத்துகிறது.

இரு சகாப்தங்களாக இந்த புதிய தாராளமயக் கொள்கை பொருளாதார வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் வழிவகுத்தது.

இந்த இருள்மயமான பாதையிலிருந்து காப்பாற்றுவதும் வழிநடத்திச் செல்வதும் அரசியல் வாதிகளின் தலையாயகடமையாகும்.

கியூபாவின் தலைநகரில் இடம் பெற்ற ஜி 77 எனப்படும் மூன்றாம் உலக நாடுகளின் உச்சிமாநாட்டில் கியூபாவின் ஜனாதிபதி ஃபிடல் காஸ்ரோ ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்டது.

## கழுத்தில் விழுந்த

7 ம் பக்கத் தொடர்

என்ற முனைப்பு தமழரசுககடசப பாரம பாயததல் வந்த சில பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்தது. ஆனால் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரான சம்பந்தனுக்கோ யூ.என்.பியின் திறந்த பொருளாதாரக் கொள்கை மீது அபார நம்பிக்கையும் பிரீதியும் இருந்தது. அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய முதலாவது உரை அவர் ஆளுங்கட்சி உறுப்பினரா என்று பலரையும் வியக்க வைத்தது.

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கனகரத்தினமும் ராஜதுரையும் எப்போது யூ.என்.பியில் இணையலாம் என்று காத்துக் கொண்டிருந்தனர். அந்த நாளும் விரைவில் வந்தது.

த. வி. கூட்ட 1977ம் ஆண்டு வன்முறையில் யூ.என்.பியின் பங்கை அறியாதவர்களல்ல. வன்முறைக்கான பழியை ஜே.வி.பி. மீதும் ஸ்ரீ. ல. சு. கட்சி மீதும் சுமத்தியதை யாருமே ஏற்கவில்லை. ஆனாலும் யூ.என்.பி. தனது பேரினவாத அரசியலை மேலும் மும்முரப்படுத்தும் என்பதை அறியாதவர்கள் போலவே நடந்து கொண்டனர். இந்தச் சூழ்நிலையில் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்ந்தது யூ.என்.பி. ஆட்சிக்கு மிகவும் வசதியாகவே இருந்தது.

ஒருபுறம், இலங்கையில் நாடுதழுவிய அளவிலான எதிர்க்கருத்தைப் பாராளுமன்றத்தில் எடுத்துரைக்கும் வசதி அமிர்தலிங்கத்திற்கு இருக்கவில்லை. மறுபுறம் சிங்கள ஆளுங்கட்சிக்கு எதிரான பிரதான கட்சி தமிழ்க்கட்சி என்ற படிமம் இனவாத அரசியலுக்கு மேலும் தூபமிட வசதி செய்தது. அமிர்தலிங்கம் ஒருபுறம் ஈழப் பிரிவினையைக் கேட்டுக் கொண்டு மறுபுறம் இலங்கையின் பாராளுமன்ற அரசியல் நாடகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் வேடங்கட்டி ஆடியதன் மூலம் சாதித்தது என்ன ?

எதிர்க்கட்சியைப் பற்றிய கணிப்பு இல்லாமலே பாராளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்த வல்ல யூ.என்.பியின் எம்.பி. மாரிடமும் அமைச்சர்களிடமுமே முன்கூட்டியே பதவி விலகல் கடிதங்களை எடுத்து வைத்திருந்த ஜே. ஆர். ஜயவர்தனவின் சர்வாதிகாரம் நடந்த ஒரு பாராளுமன்ற ஆட்சி முறையில் அமிர்தலிங்கத்தை அரசவைக் கோமாளியாக்குவதே ஜே.ஆர். ஜயவர்தனவின் நோக்கமாக இருந்தது.

யூ.என்.பி. அரசுடன் மோதவோ தமிழீழ விடுதலைக்கு எவ்வகையிலும் போராடவோ ஆயத்தமற்ற நிலையிலிருந்த த.வி. கூட்டணியின் தவிப்பு நாளுக்கு நாள் அதிகமாகியது. த.வி. கூட்டணியிலிருந்து யூ.என்.பி.க்குத் தாவிய இருவரை விட்டால் அங்கிருந்து வெளியேறி அரசியல் அனாதைகளாக யாருமே ஆயத்தமாக இல்லை. எனினும் த.வி. கூட்டணி யூ. என்.பியுடன் கடைப்பிடித்த சமரசப் போக்குக்கு உள்ளிருந்து சில எதிர்ப்புக் குரல்கள் எழாமலில்லை. ஆனாலும் த.வி. கூட்டணிக்கு வேறு திசைகளிலிருந்து அதிலும் பெரிய நெருக்குவாரங்கள் வரத் தொடங்கின.

## வெகுஜனப் போராட்டம்

6ம் பக்கத் தொடர்

அபிலாஷையான யுத்த நிறுத்தம் போச்சுவார்த்தை, சுயநிர்ணய உரிமை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகும். இப் போராட்டம் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு நீதியான போராட்டமாகும். மக்கள் நலன்களிலும் அவர்களது அடிப்படை உரிமைகளிலும் அக்கறை உள்ள அனைவரும் இவ் வெகுஜனப் போராட்டத்தை ஆதரிக்கவே செய்வார்கள்.

அரசாங்கமும் அதன் ஆதரவு சக்திகளும் இப் போராட்டத்திற்கு புலி முத்திரை குத்தி அதன் நியாயப்பாட்டை மறுதலிக்க முற்படுகின்றனர். இந்தப் போராட்டத்தின் பின்னால் புலிகள் இருக்கிறார்களா ? இல்லையா ? எனப் பூதக்கண்ணாடி கொண்டு பார்த்துக் கொள்ளவதல்ல. இன்றைய நிலை அவ் வெகுஜனப் போராட்டத்தின் கோரிக்கைகள் யாவை , அவை பரந்து பட்ட வடக்கு கிழக்கு தமிழ் மக்களின்அடிப்படை நலன்களைப் பிரதிபலிக்கின்றதா இல்லையா என்பதே முக்கியமானதாகும்.

அந்தவகையில் பொங்கு தமிழ் எழுச்சிக்கான வெகுஜனப் போராட்டம் வடக்கு கிழக்கின் மக்கள் அனைவரையும் கொண்டதாக விரிவடைந்து செல்வது. காலத்தின் தேவையாகும். எந்தக் காரணம் கொண்டும் அதன் எல்லைகள் சுருங்கிக் கொள்ளக் கூடாது. முன்னைய காலங்கள் போன்று குறுகிய அரசியல் சுயநலன்களுக்குள் முடங்கி விடக் கூடாது. அல்லது பழைமைவாதத்திற்குள்ளும் புகுந்து கொள்ளாதபடி பார்த்துக் கொள்வது அவசியம். இப் போராட்டம் வடக்கு கிழக்கின் அனைத்து மக்களையும் தழுவி நிற்பதுடன் முஸ்லீம், மலையக மக்கள் மத்திக்கும் நீட்டிக் வெகுஜனப் போராட்டத்தின் பலமும் பலாபலன்களும் உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ள இயலும்.

அண்மைய காலத்தில் இவ்வெகுஜனப் போராட்டத்தில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு வவுனியா. மன்னார் திருகோனமலை முதலிய பிரதேசங்களில் பல்கலைக்கழக மாணவர்களும் மக்களும் இணைந்து செயற்பட்ட முறை மிகவும் வரவேற்க வேண்டியதாகும். இந்த வெகுஜனப் பாதையைப் பாதுகாத்து விரிவுபடுத்தி முன்னெடுப்பது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் நீண்ட போராட்டத்தின் அடிப்படையாகும்.


## விற்பனையாகிறது



ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி

**ஆசிரியர் - தாயகம்**

மே/பா. வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**விற்பனை**

சவுத் ஏசியன் புக்கஸ்
S-44 3வது மாடி
கொ.ம.ச. க. தொகுதி
கொழும்பு - 11.


# கண்டதும் கேட்டதும் கருத்துக் கோவை

*தொகுப்பு - கரன்*

## புலம் பெயர நினைத்த கோட்டானின் கதை

ஒரு கோட்டான் ஊரை விட்டுப் போக நினைத்தது. அது ஒரு நரியிடம் தன் எண்ணத்தைச் சொன்னது. நரி ஏன் போக நினைக்கிறாய் ? என்று கேட்டது. கோட்டான் "என்னை இங்கு யாருமே விரும்பவில்லை" என்றது. "நீ உன் குரலை மாற்றாவிட்டால் நீ போகிற இடத்திலும் உன்னை யாருக்கும் பிடியாது" என்று நரி ஆலோசனை சொன்னது. இக் கதை ஒரு சீன நாட்டார் கதையைத் தழுவியது. ஆனால் இதை ஏன் சொல்கிறேன் தெரியுமா ?

கொழும்பில் தனது பாடசாலைப் பழைய மாணவர்கள் அளித்த கௌரவிப்பில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தனமீது மிகவும் கழிவிரக்கப்பட்டுப் பேசியிருக்கிறார். தன் பேச்சைப் பலரும் வெறுப்பதாகவும் தன் இருப்பையே சிலர் வெறுப்பதாகவும் வருந்தியிருக்கிறார். இது ஏறத்தாழ நம் எல்லாருக்கும் உள்ள நிலைதான். எல்லாரையும் மகிழ்விக்க முயன்றால் இன்னும் அதிகமாக எல்லாராலும் வெறுக்கப்படவே நேரும் என்பதும் பேராசிரியருக்குத் தெரியாமல் இராது.

எவர் மீதும் தனிப்பட்ட காழ்ப்புக் காரணமான தாக்குதலை நாம் ஏற்க முடியாது. அதைப் பெருமளவும் அசட்டை செய்வதே நல்லது. ஆனாலும் அவரது சொற்களும் அப்படித்தான் வெறுக்கப்படுகின்றன என்று சொல்லி இலேசாகத் தட்டிக் கழிக்க முடியாது.

அவருடைய சொல்லும் செயலும் பற்றி வைக்கப்படுகிற பலவும் மிகவும் காத்திரமானவை. அவை அவர் மீதான வெறுப்பாலானவையல்ல. அவர் அவற்றைக் கணிப்பிலெடுத்துத் தன் குரலை நேர்மையும் துணிவும் கொண்டதாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே என் ஆவல்.

எவருடைய பழிப்புரையையும் விட அலட்சியத்துக்கு உரியன பொய்யான புகழுரைகள். நேற்றுவரை அவரை ஏசிய சிலர் இன்று அவர் பற்றித் தேனொழுகப் பேசுவது ஏன் என்பதையும் அவர் கவனிக்க வேண்டும். அவர்களுடைய மனம் மாறிவிட்டதா அல்லது அவருடைய குரல் மாறி விட்டதா என்பதை அவர் ஆழ யோசிக்க வேண்டும்.

**அரன் மகன்.**

## காதில் பூச்சுற்றும் கம்பவாரிதி !

புதிய பூமி - சுழற்சி 38ன் 4ம் பக்கத்தில் அரன்மகன் எழுதிய குறிப்பை படித்ததும் எனக்கும் ஒரு விடயம் சொல்லியே ஆக வேண்டும் போல் உள்ளது.

கடந்த வருடம் இந்து கலாசாரத் திணைக்களத்தினால் ஒரு இலக்கியத் தொடர் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. அதில் ஒரு நிகழ்ச்சி வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் இடம் பெற்றது. அங்கு சிலப்பதிகாரம் சம்பந்தமாக உரையாற்ற யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு அம்மையார் வந்திருந்தார். அங்கும் நமது கம்ப வாரிதியாரே முன்னுரை வழங்கினார்.

அந்த மண்டபத்தில் அதற்கு முதல் வாரம் வெளியிட்டு வைக்கப்பட்ட ஒரு பேராசிரியரின் நவீன கவிதை நூல் பற்றிய ஒரு விபரம் எஞ்சி இருந்தது. அதைக் கண்டதும் நமது வாரிதியாருக்கு குஷி பிறந்து விட்டது.

இப்ப பாருங்கள் எல்லாரும் புத்தகம் எழுதுகினம். அந்தக் காலத்தில் நூல்களை அருளிச் செய்தினம் அது எல்லாராலையும் ஏலாது. இப்ப எவரும் எழுதலாம். தங்கட திறமையக் காட்டுறதுக்கு எழுதுகினம். இப்ப பாருங்கள், ஒரு ஆள் தன்ர திறமையைக் காட்டுறதுக்கு ஒரு புத்தகத்தை எழுதுவார். அத அச்சடிச்சுப் போட்டு பத்துப் பேரக் கூப்பிட்டு அவைக்கு விக்கிறது. பிறகு அந்த பத்து பேரில ஒரு ஆள் தானும் தன்ர திறமையைக் காட்ட ஒரு புத்தகம் எழுதுறது. முதல் மற்றவரிட்ட குடுத்த காச வாங்கிறதுக்காக அவரக் கூப்பிட்டு விக்கிறது இப்படிப் பாருங்கள் ஒரே..... ஆனால் அந்தக் காலத்தில் அந்த ஞானம், தெள்வு வரப் பெற்றாக்கள் தான் பாருங்கள் அதைச் செய்திச்சினம் என்று வாரிதியாரின் வமபளப்பு தொடர்ந்தது. இந்தப் பட்டணத்தடிகளுக்கு ஒரு சிரிப்பு வந்தது உவரும் 'அழியா அழகு' என்பொரு நூல் எழுதினவரல்லோ அதுவும் அதுக்குள்ள அடங்குமோ " என்று நினைத்து கொண்டதுடன் அதை விட வாரிதியாரின் அறியா மையையும் எண்ணி வியந்தார்.

அந்தக் காலத்தில் அச்சு வசதிகள் இல்லை. எல்லாரிடமும் ஏடு, எழுத்தாணி வசதிகளும் இல்லை. எல்லாம் வாய் மொழி மூலமான சந்ததி தொடர்ந்த பரிமாற்றங்களே பின்னர் ஏடுகளில் எழுதப்பட்டன. இதில் எழுதப்பட்டவை சில அவற்றில் பிந்திய சந்ததியின் கைக்குக் கிடைத்தவை சில. இதனாலேயே எல்லா ஞானிகளினதும் படைப்புகள் நமக்குக் கிடைக்க வில்லை. அதையே கௌரவமாக "மண்ணில் வந்து உதித்தார்." "எழுந்தருளினார்" "அருளிச் செய்தார்" "திருவாய் மலர்ந்தார்" என்றார்கள்.

இந்தக் காலத்தில் அச்சு வசதி, எழுத்து வசதி உள்ளது. தமது உணர்வினால் உந்தப்பட்டு தாம் கண்டவற்றை கற்று உணர்ந்தவற்றை, இலக்கியமாக படைக்கும் ஆற்றல் உள்ளவர்கள் எழுதுகிறார்கள். இவையும் அருளிச் செய்தல் தாம்.

கண்ணை மூடிக் கொண்டிருப்பவர்களுக்கு காதில் பூச்சுற்றுவது தானே கம்பவாரிதியின் கைகண்ட தொழில். சரி விட்டு விடலாம்.

மேலும் சென்ற வருடக் கடைசியில் தமிழ்ச் சங்கத்தில் ஒரு 'நூல் நயம்' நிகழ்ச்சி இடம் பெற்றது. ஒரு பிரபல கவிஞரின் 'இலக்கிய ரசனை' பற்றிய நூலை ஒரு கற்றிருந்த துணிச்சல் மிக்க பண்டிதர் நூல் நயம் செய்தார். அந்தப் பண்டிதர் சுட்டிக் காட்டிய விடயம் இதுதான். வாக்கு கலாநிதி கி.வா. ஜகந்நாதன் அவர்கள் அக்காலத்தில் கலை மகளில் எழுதிய கட்டுரைகளை பிரதி செய்தே நமது தம்பி கம்ப வாரிதியார் 'அழியா அழகு' என்ற ஒரு நூலை வெளியிட்டார் என்று தமது ஆதாரங்களையும் கூறினார்.

இது பற்றி பின்னர் யாரோ நமது வாரிதியாரிடம் கேட்டிருகக வேண்டும். 'எல்லோருக்கும் எல்லா வற்றுக்கும் நான் பதில் அளிக்க வேண்டிய தில்லை' என்று உதிர்த்தாராம்.

ஐயா அந்தக் கவிஞன் சுயமாக எழுதிய கவிதை நூலுக்காக நவீன இலக்கியத்தைக் கிண்டல் அடிக்கும் வாரிதியாருக்கு தான் சங்க இலக்கியத்தை வைத்து எழுதிய நூலை யேனும் சொந்த மாக எழுதிக் கொள்ள முடியவில்லை என்றால் இந்த தமிழர் தம் தரித்திர நிலையை எண்ணி என்ன செய்வது !

**பட்டணத்தடிகள்**

## என்று தனியும் சாதியின் மோகம்

வடக்கின் மிருசுவில் பகுதியில் ஐந்து வயதுப் பாலகன் பதினைந்து வயது சிறுவன் உட்பட எட்டுப் பேர் இராணுவத்தால் கொன்று புதைக்கப்பட்ட மையானது அதிர்ச்சியும் சோகமும் நிறைந்ததாகும்.

இச் சம்பவம் பற்றி ஒரு கதை பரப்பப்பட்டதைக் கண்டு வேதனை கொள்ளவே முடிந்தது. அதாவது அந்த எட்டுப் பேரும் 'கள்ளர்' என்றும், அவர்கள் மற்றப் பகுதியினர். என்பதுடன் "அதுகள் தான் உந்தக் களவு வேலைக்குப் போறதுகள்" என்றும் "ராணுவம் செய்ததும் ஒருவகையில் சரிதான்" என்றும் யாழ்ப்பாண மேட்டுக்குடியினர் மத்தியில் பேசப்படுகிறது. இந்தக் கதை கொழும்புவரை கொண்டு செல்லப்பட்டுப் பேசப்படுகின்றது எனவும் அறிய முடிகிறது. பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையால் கொன்று புதைக்கப்படுவதைக் கூட சாதியத்திற்குள்ளாக நோக்கும் அவலத்தையே காண முடிகிறது.

இங்கு வியாபாரத்தில் வர்த்தகத்தில் கொள்ளை லாபம் அடித்தால் அது வியாபார விவேகம். அரசியல் ஊடாகக் கொள்ளையடித்தால் அது அரசியல் ராஜதந்திரம். அரசாங்க உயர் அதிகார நிலையில் இருந்து தரகு, லஞ்சம், ஊழல் மூலம் பணம் சேர்த்தால் அது அரச அதிகாரக் கௌரவம், கள்ளக் கையொப்பம் கடத்தல் மூலம் பணம் சேர்த்துக் கொண்டால் 'அது வெள்ளி திசை' அடித்திருப்பதாக நியாயப்படுத்தல். இத்தகைய அயோக்கியர்களை எவரும் கள்ளர்களாகக் கணிப்பதில்லை. சாதாரண அன்றாடம் காய்ச்சிகளான மக்கள் அதுவும் வசதிவாய்ப்பு அற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மீது மட்டும் வாய் கூசாது கள்ளர் பட்டம் சூட்டுவதற்கு சாதிமான் கூட்டம் பின் நிற்பதில்லை.

பேரினவாத ராணுவத்தால் கொல்லப்படும் போது கூட சாதி பார்த்து அதற்கான நிலையும் விலையும் பேசப்படும் கேடு கெட்ட நிலை யாழ்ப்பாணச் சூழலில் தொடர்கிறதையே காணமுடிகிறது. இதுதான் நிலை என்றால் எவ்வாறு விடுதலைப் போராட்டத்திற்குப் பலம் சேர்க்க முடியும்.

**காரவைக் குமரன்**

www.padippakam.com



# சேரனின் செல்லாத கருத்துக்கள்

ஈழத்துத் தேவன்பூதனார்

ஈழத்தின் வடபுலத்தில் பூச்சொரியும் பொன்னொச்சி மரத்தோப்பூராம் அளவெட்டிப் பெரூரில் அவதரித்து சமகாலச் சாமானியர்கள் வாழும் இப்பூவுலகின் எட்டுத்திக்கும் புகழ் பரப்பி தமது அநுபூதிப் பரவசத்தில் அருளிச் செய்து தமிழர்களையெல்லாம் இரட்சித்து வருகின்ற சேரன் என்ற மாமுனியின் மணிவாக்கியங்களைப் பொறுக்கவா அல்லது கோர்க்கவா என்று தெரியாது திகைக்கின்றேன்.

என்னாலை பாருங்கோ, இப்படியெல்லாம் தொடர்ந்து அருளிச் செய்யத் தெரியாது. ஏதோ எழுதக் கொஞ்சம் தெரிஞ்ச அற்பமனிசப் பிராணிகளில் நூனும் ஒருவன். அநுபூதிப் பரவச நிலை எட்டும் பாக்கியம் இல்லாவிட்டாலும் சில பத்தாண்டுகள் பெற்ற பட்டறிவின் துணைகொண்டு ஊர், உலகம் பற்றிய சேரன் பெருமகனாரின் சில சீரிய சிந்தனைகளையும், ஆறாம் திணையும் ஏழாம் திணையும் பற்றிய தமிழர் பண்பாட்டில் அவர் நிகழ்த்திய புதிய கண்டுபிடிப்புக்களையும் சோறு திண்டு வாழும் மனிசப் பிறவிகளுக்காகத் தொகுக்க விளைகின்றேன்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் காலச்சுவடு சஞ்சிகையில் வெளிவந்த 22 பக்கப் பேட்டியையும், பிரான்சிலிருந்து வெளிவரும் உயிர் நிழல் சஞ்சிகையும், கனடாவிலிருந்து வெளிவந்த அருணோதயம் 2000 பூச்சொரியும் பொன்னொச்சி மரம் என்ற அளவெட்டி அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்க வெளியிட்டையும் படித்ததன் பேறாய் சேரனின் சிந்தனைத் தரிசனம் கிடைத்து பெரும் பேறு பெற்றேன் பெம்மானே !

அவரது மணிவாசகங்கள் இதோ !!

1. "புதுக்கவிதையில் அறிவு, தர்க்கம் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கி உணர்வைப் பின் தள்ளுவது தவறு. பாலஸ்தீனர்களுக்கு 50 வருடகால எதிர்ப்புக் கவிதைப் பாரம்பரியமும் ஆபிரிக்கர்களுக்கு அடிமை வாழ்வின் பின்னணியில் நூற்றாண்டு கால அனுபவமும் கூடவே பன்முகப்பாங்கும் உள்ளது. அந்த வகையில் ஈழக் கவிதைகளை ஒரு கட்டிறுக்கமான முறையில் இவற்றுடன் ஒப்பிட முடியாது"...

என்ன சொல்கிறார் சேரமான் பெருமானார் ? ஈழத்துக் கவிதையின் கட்டிறுக்கத்துக்கு இன்னும் பொறுக்க வேண்டுமாம் தமிழச் சாதி, நூற்றாண்டு கால அடிமை வாழ்வுக்கு தன்னை அர்ப்பணிக்க பிற நாடுகளின் வரலாற்று அனுபவம்' தமிழர்களுக்கு பாடம் புகட்டாதோ !

2. "கைலாசபதி சிவத்ததம்பி இருவரும் தனித்தனியான படைப்பாளுமைகள் பற்றிய ஆழமான விமர்சனங்களை முன்வைக்கவில்லை. இவர்களது அணுகுமுறைகளில் இருந்த இடைவெளிகளையும் பலவீனங்களையும் நிவர்த்தி செய்து விமர்சனைத்தை இன்னொரு தளத்துக்கு உர்த்தியவராக நு.்.மான் இருப்பது உண்மையெனினும் இலக்கிய ஆளுமைகள் பற்றி விமர்சன விரிவு என்கிற அம்சத்தை அவரும் பெருமளவு பேணுவதில்லை என்பதே என்னுடைய கருத்து" எனத் தீர்ப்பு வழங்குகிறார் சேரன்.

ஈழத்திலக்கியத்தில் இலக்கிய ஆளுமைகள் பற்றிய விமர்சன விரிவு



சேரன் மாமுனி அருளிச் செய்த மனிகளை பொறுக்கவா ? கோர்க்கவா ?

அமைய வேண்டுமெனில் சேரனின் திரு வாய் மலரும் வரையில் அல்லது திருக்கை எழுதும் வரை காத்திருப்போம். முருகையன், சிவசேகரம், தில்லைநாதன், கே. எஸ். சிவகுமாரன், மௌனகுரு போன்ற இன்னும் பல விமர்சகர்களும் இவருக்குப் பொருட்டல்ல என்பதுவும் முருகையன், இளங்கீரன் பற்றிய எமது புரிதலுக்கு மட்டுமாகட்டும். நீலவாணன் பற்றி மௌனகுருவும் சேரன் பற்றி சிவசேகரமும் எழுதியவை வெறும் சுட்டிகளாகவே இவருக்குப்படுகின்றன போலும் ! பெருமகனாரின் பார்வையொன்றே போதுமே.

3. "அதிகமாக எழுதிக கொண்டிருக்கின்ற செ. யோகநாதன், செங்கை ஆழியான் போன்றவர்களது படைப்புகளில் சாரமில்லை என்பது மட்டுமில்லாமல் அவர்களுடைய எழுத்துக்களில் பல எப்படிக்காலனியாதிக்கத்தினதும் ஏகாதியபத்தியத்தினதும் நிழலாகவும் அடிவருடிகளாகவும் ஆங்கில நாவல்கள் பல தொழிற்பட்ட பாங்கைத் தமிழ்ச் சூழலில் நினைவுக்குக் கொண்டு வருகின்றன. தமிழ்த் தேசியவாதத்தின் மேலாதிக்க/இனவாத முகம் ஒன்றை வலியுறுத்துகின்ற இவ்வெழுத்துக்களைப் பற்றித் தனியாகப் பேச வேண்டும்."

இது சேரனின் அதி உத்தம அடிமுடி கண்ட பெருமானார் இடும் சாபமாக அமைந்து விடுகிறது. இவ்விரு "ஏகாதிபத்திய அடிவருடிகளும் தமிழ் தேசிய மேலாதிக்க வாதிகளும்" பற்றி தனியாகச் சேரன் பேசும் வரை பொறுத்திருப்போம். ஆனால் அவ்வாறு அவர் தனியாக அருளும்வரை பொறுத்திருக்காமல்' இவ்விருவரையும் சேரன் பக்த கோடிகள் சிரச் சேதம் செய்வார்களாக ஏனெனில் தீர்ப்பும் தண்டனையும் முதலில், அதற்கான காரணங்கள் "என்றோ ஒரு நாள் எழும், இருந்து பார்"

4. "நிலவியல் எல்லைகளை விடப் பண்பாட்டு நிலைக்களன்களும் மொழியும் தமிழ் அடையாளத்தை வடிவமைப்பதில் முக்கியமான பங்காற்றின என்பதே என்னுடைய கருத்தாக இருக்கிறது" என்பார் அருணோதயம் 2000 இல்.

காலடிச்சுவட்டிலோ, "தமிழ் மொழிதான் 'தமிழனின்' பிரதான அடையாளக் கூறு என்பது வழக்கிழந்து வருகிற அதே நேரம் (ஜேர்மனி மொழி பேசுகிற, பிரஞ்சு மொழி பேசுகிற, ஆங்கில மொழி பேசுகிற தமிழர்கள் என்னும் தலைமுறை உருவாகியுள்ளது) தமிழர் என்ற அடையாளம் பண்பாடு சார்ந்தும் அரசியல் சார்ந்தும் மீள் உருவாக்கம் பெறுகிறது" என தன்னையே தான் மறுதலித்து அருள்வார்.

"தமிழரின் தொல் வரலாற்றை ஆய்வு செய்வதில் எமக்கு இருக்கிற பலம் வாய்ந்த ஆதாரங்கள் தமிழ் இலக்கியங்கள் தான். இலக்கியத்தை விட்டு விட்டு குறிப்பாக கவிதையை விட்டு விட்டு வேறு ஆதாரங்களை நாம் பேச முடியாது" என்று தனது கவிதை முதன்மை வாதத் தளத்தில் நின்று முழு உலகத் தமிழர் (மன்னிக்கவும்) தமிழ் பேசாத் தமிழர் சார்பில் தலைமகனார் பேசுவார். தமிழ் பேசாத் தமிழரின் தமிழ் அடையாளத்தில் இந்து - பிராமணிய சடங்கு சம்பிரதாயங்கள் மிஞ்சி நிற்பதை விஞ்சி நிற்கிறார் பண்பாட்டு நிலைக்களன் ஆயப்புகுந்த சேரன் செங்குட்டுவனார்.

இது தேசியம் தேடும் பலஸ்தீனத்தின் குரலல்ல. தேசியம் நிலைகொள்ளும் இஸ்ரேல் சியோனிசத்தின் குரல், இலங்கையில் வடகிழக்கு பிரதேசத் தமிழ் ஈழம் என்ற இவரது முன்னைய நிலவியல் எல்லைகளுக்கப்பால் இந்திய - ஆரியப் பண்பாட்டுத் தளத்தில் முழு உலகத் தமிழ்ப் பண்பாட்டில் இவர் மூழ்கியுள்ளார். 'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போவானாம்' என்பது இன்று அர்த்தமுள்ள பழமொழியாகத் தெரியவில்லைத்தான். போங்கள் !

நிலமானியச் சிந்தனைத் தளத்தில் வேரூன்றியுள்ள சேரன் பூகோளமயமாதல் என்ற நவகொலனித்துவ செயற்பாட்டில் தன் கிளைகளைப் பரப்பியுள்ளார். எனவேதான் 'ஆயிரம் ஆயிரம் தோள்களின் மீது ஏறி நின்று எனது நிலம் எனது நிலம்" என்று உரக்கச் சொன்ன சேரன் புதிய திணைகள் இரண்டை தனக்கு வசதியாகச் செப்பிவிடுகிறார். "அகதி வாழ்வைக் குறிக்கும் ஆறாம் திணை: கணனி யுகத்தில் பெற்றுள்ள உலக இணை வலை என்பவற்றைக் குறிக்கிற ஏழாம் திணை எனத் தனது புதிய கண்டுபிடிப்புகளை உதிர்க்கிறார். இந்த நூற்றாண்டின் மூலக் கூறுகளாக அமையப் போவன இத்தகைய புலப்பெயர்வும் இணைவலையும் தான்" என்று முரசறைகிறார். அமெரிக்கா மட்டுமன்றி பல்தேசியக் கம்பெனிகளின் தூண்டுதலின் பேரில் சேரனின் சிந்தனைகளுக்கு நோபல் பரிசு கொடுக்க முனையும்படி இக்கணமே நான் முன்மொழிந்து விடுகிறேன். தமிழர் ஒருவருக்கு நோபல் பரிசு கிடைத்தால் எமக்கும் பெருமைதானே !

5. "ஒரு புடமிடப்பட்ட தேசியவாதிக்கு தேசம், தேசிய எல்லைகளின் விசாரத்துக்குள் ஏனைய பிரிவுகளும், குறுகிய பரப்புக்களும் அற்றுப்போய்விட வேண்டும் என்பது முன் நிபந்தனையாகும்" என்று தனது இலக்கினை வரையறை செய்யும் சேரன் அதே பந்தியில் 'எல்லோரையும். எல்லாவற்றையும் ஓரணிக்குள் இணைத்து விடுகிற மாபெரும் வலு தேசியத்துக்கும் தேசிய வாதத்துக்கும் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை'யென்று யுதார்த்தவாதியாகத் தன்னையே மறுதலித்து தான் அறிந்து சொன்னதற்கு மாறாக தன்னில் விட்டு விடுதலையாகி விடுகிறார்.

உயிர் நிழலில் சேரன் தேசிய மேலாதிக்கக் கொடுமைகள் பற்றி உருகியிருக்கிறார். வரலாற்றில் அவை செய்த பொடுமைகள் பற்றியும் மன்னிப்புக் கேட்க வேண்டிய தேவை பற்றியும் அருளியிருக்கிறார். மேலை நாடுகிளல் படைப்பாளிகளும் சமூகங்களும் இப்படிச் செய்தது பற்றி வியப்பும் மகிழ்வும் மொழிந்திருக்கிறார்.

1986இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தாயகம் சஞ்சிகை குழுவினரும் முஸ்லிம்களும் சகல தமிழ் விடுதலை இயக்கத்தினரும், இயக்கங்களுக்கிழையிலான அராஜகத் கொலைகள் பற்றி ஆராய்ந்த போது அழைப்பாளருள் ஒருவராக முன்நின்ற சேரன் ஓர் அறிவிப்பை கூட்ட ஆரம்பத்தில் விடுத்தார். தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளாதோர் அங்கிருந்து வெறியேறிவிடுமாறு பணித்தார். தாயகம் குழுவினரும் முஸ்லிம்களும் முகத்தை முகம் பார்த்துக் கொண்டனர். பின்னர் சேரன் விளக்கமாக "தமிழ் தேசிய விடுதலை என்பது தமிழீழத் தேச விடுதலையாகும். எனவே தமிழீழத்தை ஏற்காதோர் இங்கிருக்கத் தேவையில்லை" என்றார். முஸ்லிம் பிரதிநிதிகள் உடனடியாக வெளியேறினர். இக்கருதுகோளே முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டதற்கு முன் நிகழ்வுக் கட்டியம் கூறுவதாய் அமைந்தது.

1984-1986 களில் சிறவர்களும் இளைஞர்களும் தமிழ் உணர்வில் பல்லாயிரக்கணதக்கில் இந்தியாவுக்குப் பயிற்சி பெற ஊக்குவித்து 'எனது நிலம் என்று கொக்கரித்த முன்னணிக் கவிஞன் சேரன் எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' கவிதா நிகழ்கை யாழ்குடா நாடெங்கும் நிகழ்த்திக் காட்டி தமிழ் ஈழத்தை ஏற்காகோரை எதிரிகள் என 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தனது ஈழ முரசு விவாதத்தில் ஓங்காளித்து, தமிழ் இயக்கங்களிடம் பிற மாற்றுக் கருத்துகள்ளோரை மாட்டிவைகக் முயற்சித்தமையும் மறப்பதற்குரிய சங்கதிகளல்ல. முருகையனின் 'முனைப்பும் முதிர்ச்சியும்' கவிதை கண்டிக்கப்பட்டமையும் 'வெறியாட்டு' நாடகத்தின் மேடையேற்றம் இடை நிறுத்தப்பட்டமையும் இயக்கங்களின் துப்பாக்கி முனைகளில் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத் தலைவர் கொல்லப்பட்டதும் ஏனைய சிலர் இயக்கங்களால் துளாவப்பட்டதும் சேரன் பெருமானர் அன்று அங்கீகரித்த சங்கதிகளேயாகும். இதனைச் சேரன் தனது வசதிக்காக மறக்க முற்பட்டாலும் புலம்பெயராது வாழ்ந்து வரும் எவரும் மறந்து விட மாட்டார்கள். தனது கடந்த காலத்தை விமர்சிக்க முன் வராத சேரன் தேசங்களுக்கு மட்டும் இந்த அறிவுறையைச் சொல்வது சரிதானா ?

சீனாவும் யப்பானும் வரலாற்றுப் பிழைகளுக்கு மன்னிப்புக் கேட்கவில்லை என்று குற்றம் சாட்டுகின்ற சேரனுக்கு மக்கள் சீனம் உருவானபோது செய்யப்பட்ட உருப்படியான காரியங்களுள் பல தெரியாமல் போனதொன்றும் வியப் பில்லைத்தான். சீனப் பேரரசின் காலத்தில் நடந்த கொடுமைகட்காக வியட்னாம், கொரியாவிடமும் தேசிய சிறுபான் மையினத்தவரிடமும் சீனா மன்னிப்புக் கேட்டதோடு சீனா ஒரு மேலாதிக்க நாடாக முயலாது என்று திரும்பத் திரும்பவும் வற்புறுத்தியது. சீனா செய்த பிழைகளை

12ம் பக்கம் பார்க்க

## அரசியல் போராட்டம்

7ம் பக்கத் தொடர்

படுத்தியவர்கள் மக்கள் மத்தியில் தம்மை எவ்வளவு தூரம் வலிவு படுத்திக்கொள்ள முடிந்தது. என்ற கேள்வி அிகம் பயனுள்ளது.

நம்முடன் கருத்தில் முரண்படுகிற எல்லாரையும் நாம் பகைக்க முடியாது. சமூக அடிப்படையிலான செயற்பாடு மூலம் கருத்து மாறுபாடுள்ளவர்களை ஒரு குறிப்பிட்ட அரசியல் நடைமுறைக்கு இணங்க வைக்கலாம். ஆனால், ஆயுத மிரட்டல் மக்களை வென்றெடுக்கும் கருவியாகும் போது, அங்கு அரசியல் தோல்வியடைகிறது. மக்கள் அரசியல் என்னும் வழி நடத்தப்படாத ஆயுதப் பிரயோகம் மக்களுக்கு எதிரான அராஜகமாகவே போய் முடியும்.

தேர்தல் பகிஷ்கரிப்பு 50 வீதத்துக்கு வெற்றி பெற்றாற் கூட, அது உன்னதமான வெற்றியாகும். சில சமயங்களில், வாக்குப் பெட்டிகள் நிரப்பப் படுவதால் பகிஷ்கரிப்பு 20-30 வீதமாகக் கூடக்காட்டப்படலாம். ஆனாலும் மக்கள் உண்மையை அறிவார்கள். முக்கியமாக, பாராளுமன்ற அரசியலை மக்கள் நிராகரித்து விட்டனர் என்ற செய்தியை மக்கள் மட்டுமன்றி அவர்களுடைய எதிரியான எசமான வர்க்கமும் அறிந்து கொள்கிறது. ஆனாலும் தேர்தல் பகிஷ்கரிப்பின் மூலம் வெல்லப்படுவது என்ன ?

தனியே தேர்தல் பகிஷ்கரிப்பின் மூலம் சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர முடியாது. தேர்தல் பகிஷ்கரிப்பு ஒரு எதிர்ப்புக்குரலாக வெற்றிபெறுகிறது. ஒரு அரசியல் பிரகடனமாக வெற்றி பெறுகிறது. மக்கள் பாராளுமன்ற அரசியல் மீது நம்பிக்கை இழந்து விட்டனர். என்பது மட்டுமன்றி முற்றாக அதை நிராகரிக்வும் ஆயத்தமாகி விட்டனர் என்று தெரிவிக்கிறது. ஆனால் அதுவே தேர்தல் முறைக்கு ஒரு மாற்றல்ல. அது சமுதாய மாற்றத்திற்கான பாதையுமல்ல. அது ஒரு வெகுசனப் புரட்சிகரப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் கையாளப்படும் ஒரு வலிய தந்திரோபாயம் அல்லது போர்த் தந்திரம் என்பதை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே தேர்தல் பகிஷ்கரிப்பு தன்னளவிலேயே ஒரு இலக்கு அல்ல. அது அதை அடுத்து வரவேண்டிவற்றுக்கான ஒரு திருப்புமுனையைத் தெளவாக அடையாளக் காட்டுகிற ஒரு முக்கிய அரசியல் நிகழ்வு என்றளவில் அதன் முக்கியமும் வரையறையும் சரியான பிரசாரத்துடன் மக்கள் சனநாயக அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான அரசியல் வேலைகள் செய்யப்பட வேண்டும். மக்கள் சனநாயக அதிகாரத்திற்கான ஆயத்தம் இல்லாமல், மக்கள் ஒரு வலிய போராட்ட சக்தியாக அணிதிரட்டப்பட்டு வலுப்படுத்தப்படாமல் தெளிவான அரசியற் திட்டமின்றி நடத்தப்படும் தேர்தல் பகிஷ்கரிப்பு, தன் அர்த்தத்தை விரைவிலேயே இழந்து விடுகிறது. அதன் விளைவாகத் தேர்தல் பகிஷ்கரிப்பை, அரசியல் மீது மக்கள் நம்பிக்கை இழந்ததாகக் காட்டி, அதிகார வர்க்கத்தின் சார்பில் ஆயுதப்படைகள் அரச அதிகாரத்தைக் கைப்பற்ற இடமுண்டு. இது பற்றிய எச்சரிக்கை உணர்வும் அவசியம்.

அந்த வகையில், பகிஷ்கரிப்பு எந்தவொரு அரசியற் போராட்டமும் போல அதற்குரிய தர்க்கரீதியான அடிப்படையில் நிகழ்த்தப்படுவது அவசியமாகிறது, அதற்குரிய வெகுசன அரசியல்மயப்படுத்தலை வேண்டி கின்றது. அதனோடு ஒட்டிய பிற வெகுசன அரசியற் போராட்ட முறைகளின் வளர்ச்சியையும் வேண்டி நிற்கிறது.

சரியான அரசியற் பார்வை இல்லாமலும் தன்னளவிலே தனித்து நிற்கும் அரசியற் கூற்றாகவும் மேற்கொள்ளப்படும் பகிஷ்கரிப்பு, எதிர்மறையான விளைவையே தரும் என்பதையும் நாம் மனதிலிருத்துவது நல்லது.

தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது ஒரு வலிய அரசியல் ஆயுதமாகலாம். குறிப்பிட்ட ஒரு சூழலில் அது மக்களை அரசியல் மயப்படுத்தவும் அணி திரட்டவும் மிகவும் பயன்படலாம். ஆனால் அது தன்னளவிலேயே சமூக மாற்றத்துக்கான கருவியல்ல. எந்த ஆயுதமும் போல அதுவும் யாருக்காக, யாரால், எப்படி, எப்போது பிரயோகிக்கப்படுகிறது என்பதிலேயே தன் வலிமையைக் கொண்டுள்ளது.

இறுதியாக, பகிஷ்கரிப்பு என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு ஆயுதமில்லை என்பதையும் நாம் நினைவில் நிறுத்த வேண்டும். எவ்வாறு வன்முறையும் வேலை நிறுத்தங்களும் மறியல் போராட்டங்களும் வலது சாரிகளால் ஏகாதிபத்திய விரோத ஆட்சிகளைக் கவிழ்க்கப் பயன் பட்டுள்ளனவோ அவ்வாறே தேர்தல் பகிஷ்கரிப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது ஒரு போராட்டக் கருவி என்பதையும் அது தன்னளவில் முழுமையானது அல்ல என்பதையும் அது எத்தகைய சமூகக் சூழலில் எத்தகைய போராட்டத்தின் ஒரு அம்சமாக எவ்வாறான பிற போராட்ட வேலைகளுடன் இணைத்து மேற்கொள்ளப் படுகிறது என்பதையும் பற்றி மிகுதியான கவனத்தை மீண்டும் வலியுறுத்துவது அவசியமாகிறது.

●●●

## இந்திய கலை

4ம் பக்கத் தொடர்

வைக்க முடியாது. ஒருவழிப்பாதை மட்டுமே என்ற நிலைதான் பின்பற்றப்படுகின்றது. இரண்டு ஆண்டுகள் முன்பாக கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய வர்த்தக ஒப்பந்தம் .பெரிதாகப் பேசப்பட்டது. ஆனால் அவ் ஒப்பந்தம் முற்றிலும் இந்திய நலன் சார்ந்தே அமைக்கப்பட்டது. அதன் கீழ் இலங்கையின் கலை இலக்கிய ஆக்கங்கள் அங்கு சென்றடைய வாய்ப்பு அற்ற நிலைதான் காணப்படுகிறது. மேலும் இந்திய கலை இலக்கிய நூல்கள் இலங்கையில் பலமடங்காக விற்பனை செய்யப்படுகின்றன. இலங்கையில் விதிக்கப்படும் வரிகள் காரணமாயினும் அவற்றைச் சாட்டாக வைத்து கொள்ளை இலாபமாக எட்டுப் பத்து மடங்காக விற்கப்படுகின்றன. இதில் இந்திய இலங்கை வியாபாரிகள் கூட்டுக் கொள்ளை நடாத்திக் கொள்கின்றனர்.

ஈழத்துக் கலை இலக்கியத்தின் தனித்துவத்திற்காகவும் அதன் சுய அடையாள வளர்ச்சிக்காகவும் ஈழத்து கலை இலக்கியப் பரப்பிலே படைப்பாளிகளும் விமர்சகர்களும் சமூக அக்கறையாளர்களும் போராடி வெற்றி பெற்ற வரலாற்றுச் சுவடுகள் இன்னும் அழிந்து விட வில்லை, அதனை மறுதலிக்க சிலர் முயன்றாலும் நமது மண்ணின் மைந்தர்கள் அந்த அடிச்சுவட்டில் தொடர்ந்து பயணிக்கவே செய்கிறார்கள். பூகோளமயமாதல், தகவல் தொழில் நுட்பம், புலப்பெயர்வு போன்ற காரணங்கள் காண்பிக்கப் பட்டு நமது கலை இலக்கியத்தின் தனித்துவம் மிக்க வரலாற்று வளர்ச்சி எவராலும் அழத்துவிட இடமளிக்க முடியாது.

இந்திய கலை இலக்கிய குப்பை கூளங்களுக்கும் அதன் நச்சுக் கருத்துக்களின் தாக்கத்திற்கும் எதிராக ஐம்பதுகளின் பிற்கூறிலும் அறுபதுகளிலும் நடாத்தப்பட்ட கலை இலக்கிய போர் இப்போது இரண்டாவது தடவையாக நடாத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. முன்பு போன்று அது எளிதாக இருக்க மாட்டாது என்பது பூகோளமயமாதல் சூழலில் உண்மையே. ஆயினும் நமது கலை இலக்கியத்தின் தனித்துவத்தையும் தன்னடையாளத்தையும் பாது காத்து விருத்தி செய்வதகும் புதிய பண்பாட்டுச் சூழலைத் தோற்றவிக்கவும் அத்தகைய இரண்டாவது கலை இலக்கியப்போர் நடாத்தப்படுவது அவசிய மானதேயாகும்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
PUTHIYA POOMI
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.
புதிய பூமி
சுற்று 08 மார்ச்/ஏப்ரல் 2001 பக்கம் 12 விலை 10/= சுழற்சி 39

## புதிய-ஜனநாயக கட்சி வற்புறுத்துகிறது

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நானூறு ரூபா சம்பள உயர்வை மறுப்போ, தாமதமோ இன்றி வழங்கப்படல் வேண்டும். அப்படி வழங்காது நட்டக் கணக்கைக் காட்டி வரும் கம்பனிகள் தோட்டங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டுச் செல்வதே உகந்த வழியாகும். ஆதலால் சம்பள உயர்வுக்கான சகல வகைப் போர்ரட்டங்களையும் புதிய ஜனநாயகக் கட்சி ஆதரித்து தனது பங்களிப்பையும் வழங்குகின்றது என அதன் மத்திய குழு தெரிவித்துள்ளது.

# யூ. என். பி. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் சகல பிரச்சினைகளும் தீர்ந்து விடுமா ?

தற்போதைய பொதுசன முன்னணி அரசாங்கம் சகல வழிகளாலும் ஆளத் தகுதியற்ற அரசாங்கம் என்று கூறி ஆட்சி பீடத்தை விட்டுச் சென்று விட வேண்டும். என்பது யூ. என்.பி. யினரின் கோரிக்கையாகும். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, யுத்தத்தை முன்னெடுப்பது, ஜனநாயகம் இன்மை, ஊழல், அதிகார துஷ்பிரயோகம் என்றெல்லாம் ஆட்சி மீது குற்றம் சுமத்தி வருகிறார்கள். இதற்காக கோவண ஊர்வலம் முதல் நீண்ட பாத யாத்திரைகள், ஆர்ப்பாட்டம் மறியல் எனச் செய்து வருகிறார்கள். ஜனாதிபதிக்கு எதிராக பதவி அகற்றல் பிரேரணை ஒன்றைப் பாராளு மன்றத்தில் கொண்டு வரவும் முனைந்து நிற்கிறார்கள். குறிப்பாக தேர்தல், பொலீஸ், பொதுச் சேவை, நீதிச் சேவை ஆகிய நான்கிற்கும் சுதந்திர ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்கிறார்கள்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியானது அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடத் துடித்து நிற்கின்றது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியானது ஏதோ இதுவரை ஆட்சி அதிகாரத்தில் இருக்காத கட்சி யென்றும் தான் கூறும் குற்றச் சாட்டுகளுக்கு உட்படாது கறைபடியாத கரங்களையுடைய கட்சிபோன்றும் பேசுவது விந்தையாகவே காணப்படுகின்றது.

நாட்டில் பதினேழுவருடங்களாக இருண்ட ஆட்சி நடாத்தி நாட்டின் இன்றைய நிலைக்கு அத்திவாரம் இட்டவர்களே இந்த யூ. என். பி.யினர் தான் என்பதை மக்கள் மறந்து விடவில்லை. இன்றைய அரசாங்கம் செய்து வரும் மக்கள் விரோதச் செயல்களை ஆரம்பித்து வைத்தவர்களும் அவர்களே தான். இத்தகையவர்களால் எப்படி மீண்டும் பதவிக்கு வந்து மக்களுக்கு சாதகமானதும் நீதியானதுமான ஆட்சியைத் தரமுடியும். இனப்பிரச் சினைக்கு நியாயமான தீர்வோ யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவோ அவர்களால் முடியுமா ? அல்லது பூகோளமயமாதலின் கீழான தாராளமயம் தனியார் மயத்தை தடுத்து நிறுத்த முடியுமா ? தேசிய பொருளாதாரம் தேசிய கல்வி போன்றவற்றை ஏற்படுத்த முடியுமா ? அவர்கள் இன்று பேசி வருடம் நீதி, நியாயம், சுதந்திர ஆணைக்குழுக்கள் என்பன சுயாதீனமாக இருக்க விடப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம்:

யூ.என்.பி.யின் ஒரே நோக்கம் எதைக் கூறியாவது பொய் வாக்குறுதிகளை வழங்கி பதவிக்கு வந்து விட்டால் போதும் என்பதே. எனவே மக்கள் யூ.என்.பியிடம் ஏமாந்து கொள்ள முடியாது. உண்மையில் இன்று நாட்டிற்கு தேவைப்படுவது நேர்மையான மக்கள் சார்பு நிலை கொண்ட மூன்றாவது அரசியல் சக்தியேயாகும். பூகோளமயமாதலின் நச்சுத் தனங்களுக்கு எதிரான, இனப்பிரச்சினையைத் தீர்த்து யுத்தத்தை நிறுத்தக் கூடிய தேசிய வளங்களைப் பயன்படுத்தி மக்கள் சார்பாகச் செயல்படக் கூடிய மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றை உருவாக்கி பலப்படுத்தி ஆட்சி பீடத்திற்கு கொண்டுவருவதே குறைந்தபட்ச மாற்று நடவடிக்கையாகும்.

## வடக்கு கிழக்கில் மோப்பம் பிடிக்கும் வெளிநாடுகளின் தூதுவர்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஒருவர்பின் ஒருவராக வெளிநாடுகளின் தூதுவர்கள் சென்று நிலைகளை நேரடியாக அவதானித்து வருகிறார்கள். இவர்கள் எதை அவதானிக்கிறார்கள் எவற்றைப்பற்றி தத்தமது அரசாங்கங்களுக்கு அறிக்கை கொடுக்கிறார்கள் என்பதே முக்கியமானதாகும்.

இவர்கள் வடக்கு கிழக்கின் துன்ப துயரங்களுக்கு ஏதோ பரிகாரம் காணவும் உதவிகள் உபகாரங்கள் செய்ய வந்தவர்கள் போலவும் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் இவர்களின் உள் நோக்கங்கள் வேறானவையாகும். குறிப்பாக இன்று அமெரிக்கா இந்திய ஐரோப்பிய ஒன்றியம் யாவும் ஒரே வட்டத்திற்குள் வந்து நிற்கின்றன. அவை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்கிக் கொள்வதிலும் பேரினவாத ஆட்சியைப் பலப்படுத்துவது என்பதிலும் ஒரே மொழியில் தான் பேசி வருகின்றன.

அண்மையில் அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணம் சென்று பேசியுள்ள விடயங்கள் தனியே அமெரிக்காவின் கருத்து மட்டுமல்ல. அங்கு சென்றுவந்த இந்திய ஐரோப்பிய தூதுவர்களின் கருத்துக்களும் அதுவேயாகும்.

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் அமெரிக்க தூதுவர் பேசிய விடயங்கள் தற்செயலானவைகள் அல்ல. சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி தென்னாசிய நாடுகளின் போராடும் மக்களுக்கும் எதிரான எச்சரிக்கையாகும்.

தமிழ் மக்கள் தமது நியாயமான உரிமைகளுக்கு இந்தியாவையும பிரித்தானியாவையும் அமெரிக்காவையும் நம்பி நம்பி ஏமாற்றப்பட்டுள்ள இன்றைய நிலைக்கே வந்துள்ளார்கள். இதில் மக்களின் மீது தவறில்லை. தலைமை எனப்பட்டவைகளின் விசுவாச நிலைமைகள் விட்ட தவறுகளேயாகும்.

இன்று ஏகாதிபத்திய சக்திகளுக்கு தேவை அடக்கப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரச்சினை அல்ல. தமது பூகோளமயமாதலுக்கான வாய்ப்பும் சூழலுமே யாகும். இந்தியா அவர்களது கூட்டாளியாகி நிற்கிறது. இந்தியாவிற்கு தேவை தனது பிராந்திய மேலாதிக்க நலன்களின் உறுதிப்பாடாகும். அத்துடன் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை அடக்கிக் கொள்வதுமாகும். ஆதலால் இவர்கள் எல்லோரும் ஒரு முகமாகி நிற்கின்றனர். அதன் வெளிப்பாடே வெளிநாட்டுத் தூதுவர்கள் வடக்கு கிழக்கு சென்று மக்களது நிலைமைகளை மோப்பம் பிடித்து தமது நிலையைப் பகிரங்கப்படுத்தி வருவதாகும். இந்நிலையில் சரணடைவதா அன்றி போராடுவதா என்று தீர்மானிப்பது தமிழ் மக்களின் கடமையாகும்.

## பிரித்தானியத்

1ம் பக்கம் தொடர்

உறுதியிலும் தங்கி நிற்பது அடிப்படையானது. அத்துடன் முஸ்லீம், மலையக மக்களை அரவணைத்து தமது நிலைக்குப் பலம் சேர்த்துக் கொள்வது அவசியமானதாகும். அதேவேளை சிங்கள மக்கள் மத்தியில் யுத்தத்தை எதிர்த்தும் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தும் வருகின்ற இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளுடன் கைகோர்த்துக் கொள்வது அதிமுக்கியமானதாகும். இவற்றுடன் உலக ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்களுடன் நமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைப் பிணைத்து சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் அரவணைப்பையு் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இவற்றை ஆழ்ந்து சிந்தித்து முறைப்படுத்தி திட்ட வட்டமான வழிகளில் முன்னெடுக்கத் தவறினால் தங்களுக்குள் கைகோர்த்து நிற்கும். பேரினவாத ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் நிலைப்பாடே பலம் பெறவும் போராட்டம் பல வீனமடையவும் கூடிய நிலையே ஏற்படும்.

இவ் அபாயக் கட்டத்தைக் கடப்பதற்கு விடுதலைப் புலிகள் உட்பட தமிழர் அமைப்புகளும் சுயநிர்ணய உரிமையை வற்புறுத்தும் நேர்மையான இடதுசாரி சக்திகளும் ஒரே தளத்தில் ஐக்கியம் படல் வேண்டும். இவ் இடத்திலே விடுதலைப் புலிகள் இயக்கம் போராட்டத்தில் முன்னணியில் இருந்து வருவதால் அவர்களுக்கு பாரிய அரசியல் கடமை ஒன்று உள்ளது. தமது கடந்த காலத்தின் சாதனைகளையும் தவறுகளையும் ஒடுக்கு முறைக்கு உள்ளான தமிழ் மக்களின் நிலை நின்று விமர்சனம் சுய விமர்சனத்திற்கு உள்ளாக்கிக் கொள்ளல் வேண்டும். எந்த எந்த இடங்களிலே தவறுகள் இழைக்கப்பட்டன என்பதையும் அவற்றை எவ்வாறு ஒடுக்கு முறையாளர்களும் எதிரிகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதையும் இவ்வேளை புலிகள் இயக்கம் உளப்பூர்வமான சுய விமர்சனத்திற்கு உட்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயமாகி உள்ளது. தவறுகளை அடையாளம் காணப்பட்டு அவை நிராகரிக்கப்படாது விட்டால் முன்னேற்றம் என்பது இருக்க முடியாது. அதே வேளை ஏனைய தமிழர் கட்சிகள் அமைப்புகள் என்பவை ஏகாதிபத்தியவாதிகளின் படிகளில் ஏறி இறங்குவதாலோ அன்றி இந்தியாவின் நடுவீட்டுச் செல்லப் பிள்ளையாக இருந்து வருவதாலோ தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் நேர்மையான பாத்திரத்தை வகிக்க முடியாது என்பதை இனியாவது உணர்ந்து கொள்ள முன்வரல் வேண்டும்.

பேரினவாத ஒடுக்கு முறையாளர்கள் சலுகைகள் என்ற எலும்புத்துண்டங்களை வீசி எறிந்து கொண்டே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஒடுக்கி தமது பேரினவாதத் தீர்வைத் திணிக்க முற்படுகின்றனர். இவற்றை நிராகரித்து பேச்சுவார்த்தையிலும் சரி போராட்டத்திலும் சரி ஐக்கியம் உறுதி என்பனவற்றில் கால் ஊன்றி நின்று முன்செல்லத் தயாராக வேண்டும். இதையே ஏகப்பெரும்பான்மையான தமிழ் மக்களும் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முஸ்லீம் மலையக சிங்கள மக்களும் விரும்புகின்றனர். எதிர்பார்க்கின்றனர்.

எனவே பிரித்தானியாவின் தடைச் சட்டம் என்ற தீய அம்சத்தை நல்ல அம்சமாக மாற்றிப் பலமுள்ளதாக்கிக் கொள்வதற்கு இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த புலிகள் இயக்கமும் ஏனைய நேர்மையான போராட்ட சக்திகளும் முன்வரல் வேண்டும். அதுவே படிப்பினைகளில் இருந்து பெறப்பட்ட சிறந்த முன்நோக்கலாக அமைய முடியும்.

## 400 ரூபா சம்பள

1ம் பக்கம் தொடர்

இலகுவாக நீதி வழங்குமென்று எதிர்பார்க்க முடியாது. அன்று தோட்டங்கள் தனியார் கம்பெனிகளுக்கு கொடுத்ததை இந்நாட்டின் இடதுசாரி சக்திகள் எதிர்த்தன. இன்று சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ள அமைப்புகளின் தலைவர்கள் பலர் தோட்டங்களை தனியார்மயமாக்குவதை ஆதரித்தனர். தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு சம்பளம், வேலைப்பாதுகாப்பு என்பன தனியார் கம்பெனிகளால் உறுதிசெய்யப்படும் என்று கூறி தொழிலாளர்களை அன்று நம்பவைத்தனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இன்று அந்த நிலைமைக்கு மாறாக கம்பெனிகளுக்கு எதிராக போராட வேண்டி நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தோட்டக் கம்பெனிகள் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்யும் என்ற கற்பனைக் கதைகளை தொழிலாளர்கள் இனிமேலும் நம்பப்போவதில்லை அதனால் போராட்டங்கள் உறுதியாக முன்னெடுக்க வேண்டிய பொறுப்பை தொழிற்சங்கத்தலைவர்கள் கொண்டிருக்கின்றனர். அப்பொறுப்பை தட்டிக்களித்தால் தொழிலாளர்விரோத நிலைப்பாட்டை எடுப்பவர்களாக அடையாளம் காணப்படுவார்கள் என்பது திண்ணம்.

சம்பள உயர்வை வழங்க மறுத்தால் தோட்டங்களை முகாமை செய்யும் பொறுப்பிலிருந்து கம்பெனிகள் விலகிக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை கொடுக்கும் போராட்டத்தை முன்னெடுக்கவும் தொழிற்சங்கங்கள் பின்நிற்கக் கூடாது, கம்பெனிகளின் பொறுப்பிலிருந்து தோட்டங்களை மீட்டு தொழிலாளர்கள், அரசாங்கம், நிபுனர்கள் போன்றோரை உள்ளடக்கிய கூட்டுறவு முறையிலான முகாமையின் கீழ் தோட்டங்களை நடத்தக் கூடிய புதிய திட்டமொன்றையும் முன்வைக்க தொழிற்சங்கங்கள் பின்நிற்கக் கூடாது.

## சேரனின்

11ம் பக்கத் தொடர்

விமரிசிக்கலாம். செய்யாததை விமரிசிக்கலாமா ? மனித உரிமை பேசிக் கொண்டே ஆதிவாசிகளை நசுக்கிக் கொண்டு அதிகாரம் தொடர்கிற வட அமெரிக்க கண்டத்திலும் அவுஸ் ரேலியாவிலும் என்ன பிராயச்சித்தம் செய்யப்பட்டுள்ளது ? இந்திய மேலாதிக்கம் பற்றிச் சேரன் ஏன் எழுதத் தயங்குகிறார் ? பார்ப்பனியம் பற்றி அவரது பார்வை என்ன ? ஜாலியன் வாலா பாக் - படுகொலைக்கு இன்றுவரை பிரிட்டன் மன்னிப்புக் கேட்டதா ? உலகப் போரில் தோற்றிராவிட்டால் ஜேர்மனி யூதர்களிடம் மன்னிப்புக் கேட்டிருக்குமா ?

எல்லாம் தெரிந்த தோரணையில் உபதேசம் பண்ண முன் வந்திருக்கும் சேரன், முதலில் உலக வரலாற்றை மேல் நாட்டு முதலாளித்துவ வியாக்கியானங்களின்படி ஒப்புவிப்பதை விடுத்து வேறு கோணங்களிலும் பார்க்கப் பழக வேண்டும். மேலைநாடுகளில் இருப்பதாகத் தோன்றும் முதலாளித்துவ ஜனநாயகமும் மனித உரிமையும் மூன்றாமுலக நாடுகளில் அவை மறுக்கப்படுவதாலேயே இயலுமானதாகின்றதென்பதை உணர வேண்டும்.

குறிப்பிட்ட அரசியல் இயக்கங்கள் மீதான சேரனின் வன்மம், உண்மையான மனித நேயத்தின் அடிப்படையிலாகாது என்று மட்டும் நினைவுட்ட விரும்புகின்றேன். வக்கிரமான தாக்குதல்களால் அரசியல் தவறுகளைக் கண்டறிய முடியாது. விமர்சனம் சுய விமர்சனமே சரியான வழி முறை. அதற்கு முதலில் சேரன் நேர்மையாக அதனைச் செய்ய வேண்டும்.

6. இறுதியாக இந்நிலைக்குச் சேரன் ஏன் இழிந்தார் என்பதற்கு அவரது ஒப்புதல் வாக்கு மூலத்தைச் சமர்ப்பித்து இப்போதைக்கு விடைபெறுகின்றேன்.

"1987 லிருந்து இதனை எழுதுகின்ற இந்தக் கணம் வரை ஏதோ ஒரு வகையில் பல்கலைக்கழக உதவித் தொகையும், புலமைப்பரிசிலும். பகுதி நேரப் பல்கலைக்கழக ஆசிரியர் வேலையும். ஆய்வு நிறுவணங்கள் உதவியும் எனக்குக் கிடைத்து வந்துள்ளன. அந்த வகையில் புலம் பெயர்ந்த லட்சக்கணக்கான மக்களைவிட எனக்கு ஒரு வகையான சலுகைகள் சார்ந்த இருப்பு இருக்கிறது. இதனை மிகவும் தன்னடக்கத்துடன் நான் ஒப்புக்கொள்ள வேண்டும்" எனப் பரவசமடைகிறார் சேரன்.

ஆம், உண்மைதான். பல்லாயிரக்கணக்கான மக்கள் போரில் மடிந்தும் இலட்சக்கணக்கான மக்கள் பஞ்சம், பசி, பட்னி இடப்பெயர்வு என்று போரில் சிக்குண்டும் மரணத்துள் வாழ்ந்து கொண்டிருக்க, தனது ஊரான அளவெட்டிக்கு ,இன்றுவரை செல்ல மறுத்து நிற்கும் சேரன் பெருமானார் பிறரின் மரணத்துள் தான் வாழ்ந்து கொண் டிருக்கும் தலைமகனாரன்றோ. என்னே ஒரு உதிரிப் புத்திஜீவியின் பெருமை !! ரிஷி மூலமும் நதி மூலமும் கண்டறிவார் யாரோ?

**பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா ?**

வெளியிடுபவர் : இ. தம்மையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யு. கே. பிரின்டஸ் 26/1 இ சிவானந்தா வீதி, கொழும்பு 13.

படிப்பகம்